Registered as a News Paper in Sri Lanka
விலை : ரூபா 25.00

# தினச்செய்தி வாரமலர்

என்றும் உங்களுடன்

அன்றாடச் செய்திகளை
உடனுக்குடன்
தினந்தோறும்
இணையத்தில்
அறிந்து கொள்ள

www.thinacheithi.com





# ஆனையிறவு உப்பளமும் குடுமிபிடிச் சண்டையும்

இரண்டு அமைச்சுக்களுக்கு இடையில் ஏற்பட்ட குடுமிபிடிச் சண்டையால் உப்பை இறக்குமதி செய்ய வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

"உப்பில்லா பண்டத்தைக் குப்பையில் போடு" என்கிறது பழமொழி.

இலங்கை ஒரு தீவு. எல்லாப் பக்கமும் கடலால் சூழப்பட்டது. சுலபமாக உப்பை உற்பத்தி செய்து தன்நிறைவு பெறுவதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம்.

ஆனால் இலங்கைத் தீவின் நிலை அதுவல்ல. சமீப காலமாக காலநிலை சீரற்றுக் காணப்படுவதால் அம்பாந்தோட்டை, புத்தளம், மாந்தை ஆகிய உப்பு விளைவிக்கும் உப்பளங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த முறை இந்தியாவிலிருந்து உப்பை இறக்குமதி செய்யும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆனையிறவு உப்பளம் குறிஞ்சாத் தீவுக்கு தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. அது ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தாறு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. ஆனால் இந்த உப்பளத்திற்கான உற்பத்தி 1990ஆம் ஆண்டுக்குப் பின் யுத்த நிலை காரணமாக கைவிடப்பட்டது.

பார்க்க பக்கம் 2இல்



## மருந்துக்கு புண் தேடும்



## முடிவிற்குள் ஆரம்பம்

## ல ங் கா ரா ணி



## தமிழ் இனி



## இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# தினச்செய்தி
என்றும் உங்களுடன்

T.P : 021 7539300
Fax : 021 7539300
E-mail : thinacheithi@gmail.com
Web : www.thinacheithi.com / lk


## சிகரட் புகைத்தல் சாவை விரும்பி அழைப்பதற்குச் சமன்

சிகரட் புகைக்கும் பழக்கம் எமது வாலிபர்கள் மத்தியில் பெருகிக் கொண்டே போகின்றது. அவர்கள் சிகரட் புகைத்து தங்கள் சாவை விரைவுபடுத்திக் கொள்கிறார்கள் என்றால் மிகையில்லை. எமது நாட்டில் சிகரட் புகைப்பவர்களில் அறுபதிற்கும் மேற்பட்டவர்கள் தினசரி மரணமடைகிறார்கள்.

புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களில் அறுபது வீதமானோர் சிகரட் புகைப்பவர்களே ஆவர். ஆரம்பகாலங்களில் எமது நாட்டிலுள்ளவர்கள் புகையிலையைச் சுருட்டாகப் பிடித்தார்கள். இப்பொழுது சுருட்டுப் பிடிக்கும் பழக்கம் அருகிவிட்டது.

அதையடுத்து பீடி பிடித்தார்கள். 1960, 1965, 1970களில் எமது நாட்டில் நிறைய பீடிக் கம்பனிகள் பீடித்தயாரிப்பில் ஈடுபட்டன. பீடிக்குத் தேவையான புகையிலை உள்ளூரிலேயே கிடைத்தது. ஆனால் அதனைச் சுற்றும் இலை இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டது. ஒரு காலத்தில் கூலி வேலை செய்வோர், தோட்டக்காரர்கள், கட்டட வேலை செய்வோர் பீடி பிடித்து வந்தனர்.

1980, 1990 களின் பின் பீடி குடிக்கும் பழக்கம் அருகிவிட்டது. இதையடுத்து உள்ளூர் பீடித் தயாரிப்புக் கம்பனிகள் மூடப்பட்டன. இளைஞர்கள் பீடியைக் கைவிட்டு சிகரட் பிடிக்கத் தொடங்கி விட்டனர். ஒரு காலத்தில் ஒரு சதம், இரண்டு சதத்திற்குக் கூட ஒரு சிகரட் வாங்கக் கூடியதாக இருந்தது. இன்று சிகரட்டின் விலை அதிகரித்துக் கொண்டே போகின்றது.

அரசாங்கம் நாட்டு மக்கள் மத்தியில் சிகரட் பிடிப்பதைக் குறைக்கும் நோக்குடன் வருடா வருடம் சிகரட்டின் விலையை அதிகரித்துக் கொண்டே போகின்றது. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிற்பாடு சிகரட் பெட்டிகளில் அதனைப் பிடிப்பதால் ஏற்படும் அபாயங்களைச் சித்தரிக்கும் விதமாகப் படங்கள் போடப்பட்டு சிகரட் பிடிப்பது உயிருக்கு ஆபத்து என்ற எச்சரிக்கை வாசகங்களையும் பெட்டிகளில் பொறித்துள்ளார்கள்.

சிகரட் புகைப்பதனால் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்துவதற்கு அரசாங்கம் நாலாயிரத்து ஐந்நூறு மில்லியன் ரூபாவை செலவழிக்கின்றது. இலங்கையில் மாத்திரம் வருடா வருடம் இருபத்து ஒரு ஆயிரம் பேர் சிகரட் புகைப்பதினால் இறக்கின்றார்கள்.

அதே போல உலகம் முழுவதும் சிகரட் புகைப்பதனால் ஆறு மில்லியன் மக்கள் இறக்கின்றார்கள். இளைஞர்களுக்கு ஆரம்பத்தில் சிகரட் பிடிப்பது ஒரு விருப்பமான செயலாக இருக்கின்றது. ஆனால் போகப் போக அதன் பாதிப்பு அவர்கள் வாழ்க்கையையே சீரழித்து விடுகின்றது.

சிகரட் பிடிக்கும் ஆண்களுக்கு தாம்பத்திய உடல் உறவில் பெண்களைத் திருப்திப்படுத்த முடியாது. இவ்வாறு சிகரட் புகைக்கும் ஆண்களுக்கு ஆண்மைத்தன்மை குறைவடையும் அபாயமும் உள்ளது.

இதே போல போதைப் பொருளில் இளைஞர்களின் நாட்டம் அதிகரித்துக் கொண்டே போகின்றது. ஆரம்பகாலத்தில் கஞ்சா, அபின் போன்ற போதைப் பொருட்கள் பயன்படுத்துவதில் ஈடுபட்டனர். இப்பொழுது ஹெரோயின் போன்ற போதைப் பொருட்கள் பாவனைக்கு வந்து விட்டன. அண்மையில் கிடைத்த தகவல்களின் படி வருடத்திற்கு மூவாயிரத்து ஐநூறு கிலோ கிராம் போதைப்பொருள் நமது நாட்டிற்குள் கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது.

அநேகமாக இந்தப் போதைப் பொருட்கள் வடபகுதிக் கடற்கரையோரமாகத் தான் கொண்டு வரப்படுகின்றன. இப்போதைப் பொருள் கடத்தலில் பல சமூக விரோதக் கும்பல்கள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தக் கடத்தலில் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் ஒரு தமிழ் அமைச்சரும் ஈடுபட்டுள்ளதாக அரசல் புரசலாகத் தெரிய வருகின்றது. ஆனால் உண்மை , பொய் தெரியாது.

**நெருப்பின்றிப் புகைக்காது**

புகைக்காது என்று குறிப்பிடுகையில் தான் மேலும் ஒரு விடயம் நினைவுக்கு வருகின்றது. இளைஞர்கள் சிகரட்டை வாங்கி அதில் ஒட்டப்பட்ட இடத்தை நாக்கால் நனைத்து அந்தப் புகையிலையை ஓரளவு எடுத்துவிட்டு ஹெரோயினைப் புகுத்தி மீண்டும் சிகரட்டை உருட்டி இரண்டு, மூன்று இளைஞர்கள் ஒன்றாகச் சேர்ந்து புகைபிடிப்பதாகத் தெரியவருகின்றது. இவ்வாறு ஹெரோயின் வைத்த சிகரட்டைப் பிடிப்பவர்கள் தங்களது சாவை விரைவு படுத்தும் முயற்சி என்றே கூறவேண்டும். முன்பொரு காலத்தில் திரைப்படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் நடிக்கும் நடிகர்கள், புகைப்பிடிப்பது போன்ற காட்சிகள் வெளிவரும்

ஆரம்பத்தில் நடிகர் ரஜனிகாந் சிகரட் பிடிக்கும் சாகசங்களை காட்டியே நடிகராக நிலைத்தார். ஆனால் அண்மைக் காலங்களில் திரைப்படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் சிகரட் பிடிக்கும் காட்சிகள் தவிர்க்கப்படுகின்றன.

இருப்பினும் காட்சிகளிற்குத் தேவை எனக் கருதினால் மட்டும் காட்டுகிறார்கள். அவ்வாறு காட்டினாலும் சிகரட் பிடிப்பது ஆபத்து என்றும் காட்டுகிறார்கள்.

சிகரட்டிலுள்ள நிற்கொற்றின் NICOTINI (புகையிலையில் காணப்படும் ஒரு வகை விசப்பொருள்) என்ற போதைக்கு இளைஞர்கள் அடிமையாகக் கூடாது.

ஹெரோயினும் உநசமைழெ நிக்கொற்றினும் ஆட்கொல்லிகள். நோயற்ற ஒரு சமூகம் எம் மத்தியில் தோன்ற வேண்டுமாயின் புகைக்கும், போதைக்கும் அடிமையாவதிலிருந்து விடுதலை பெறவேண்டும்

## ஆனையிறவு உப்பளமும் ...

கடந்த மே, ஜூன் மாதங்களில் பெரும போக உற்பத்திகளை மேற்கொள்ள கைத்தொழில் வணிக அமைச்சின் கீழுள்ள மாந்தை உப்பு மட்டுப்படுத்தப்பட்ட கம்பனி சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தது. ஆனால் மீள்குடியேற்ற அமைச்சுக்கும் வணிகத்துறை அமைச்சுக்கும் இடையில் யாருக்கு இந்த ஆனையிறவு உப்பளம் என்ற குடுமிப்பிடிச் சண்டையில் 2015 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பதவியேற்றது தொடக்கம் மீண்டும் பொதுத்தேர்தல் நடந்து அரசாங்கம் பதவி ஏற்கும் வரை நடந்த குடுமிபிடிச் சண்டையில் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி ஆரம்பிககப்படாமல் கைவிடப்பட்டது.

இது சம்பந்தமாக உப்புக் கம்பனியின் தலைவர் எம்.எம். அமீன்“தினச்செய்தி”க்கு கருத்துத் தெரிவிக்கையில்: இந்தக் காலபோகத்திற்கு அதாவது, மே, ஜூன் மாதங்களில் நாங்கள் ஆனையிறவில் முதற் கட்டமாக 3300 ஏக்கரில உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டோம். இந்த உற்பத்திக்கு என்று மாந்தை உப்புக் கம்பனி ரூபாய் இருபது மில்லியன் ஒதுக்கி, உப்பு வயல்களுக்கு தண்ணீர இறைக்கும் வேலைகளை ஆரம்பித்தது.

அப்பொழுது தான் மீள்குடியேற்ற அமைச்சு ஆனையிறவு உப்பளம் தமக்குத் தான் என உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்தது. அதையடுத்து, காலபோக உப்பு உற்பத்தி வேலைகளைக் கைவிட்டோம். அன்று எந்தக் குறுக்கீடும் இன்றி உப்பு உற்பத்தி செய்திருந்தால் இன்றைக்கு பத்தாயிரம் மெற்றிக்தொன் உப்பை உற்பத்தி செய்திருப்போம். இன்று முழு நாட்டின் உப்புத் தேவையும் பூர்த்தியடைந்திருக்கும்.

புதிய அரசாங்கம் பதவி ஏற்றபின் ஆனையிறவு உப்பளம் வர்த்தகத் தொழில அமைச்சுக்குத்தான் என்று தெளிவாக அரச விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து மீண்டும் நாங்கள் ஆனையிறவு உப்பளத்தில் முதற் கட்டமாக இந்தச் சிறுபோகத்திற்கு 330 ஏக்கர் வயல் பரப்பில் உற்பத்தியை ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். மொத்தமாக நான்காயிரம் மெற்றிக்தொன் உப்பு விளையும் என்று எதிர்பார்க்கின்றோம். அதேபோல காலபோக உற்பத்தியை 2016ஆம் ஆண்டு மே, ஜூலை ஆகிய மாதங்களில் இரு முறை அறுவடை செய்வோம் என்று எதிர்பார்க்கின்றோம். ஒருமுறை உற்பத்தி செய்ய 45 நாட்கள் போதும். எனவே, காலபோக உப்பு உற்பத்தியில் பத்தாயிரம் மெற்றிக்தொன் உப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

மேலும், ஆனையிறவில் இரண்டாம் கட்டமாக 750 ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தி ஆரம்பிப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு ஆரம்பமாக ரூபா 125 மில்லியன் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாவது கட்ட உற்பத்தி வேலைகள் ஆரம்பித்தால் காலபோகத்தில் சராசரி இருபதாயிரம் மெற்றிக்தொன் உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனையிறவில் முழுமூச்சாக உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டால், தற்சமயம் மூடப்பட்டுள்ள பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்திற்கு தேவையான மூலப்பொருளான உப்பை வழங்கி அந்தக் கூட்டுத்தாபனத்தையும் ஆரம்பிப்பதற்கு உதவமுடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஆனையிறவு உப்பு கூட்டுஸ்தாபனம் எல்லாக்கட்ட அபிவிருத்தியை செய்து உற்பத்தி வேலைகளை ஆரம்பித்தால் மொத்தமாக இரண்டாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க முடியும். அதுமட்டுமன்றி நாட்டின் உப்புத் தேவையையும் பூரணப்படுத்த முடியும்.

இன்றுநாட்டிற்குத் தேவையான மொத்த உற்பத்தி அதாவது, வீட்டுப் பாவனைக்கும், கைத்தொழிலுக்கும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் போதும். ஆனால் இன்று மொத்தமாக நாடுமுழுவதும் ஒரு இலட்சத்து பத்தாயிரம் தான் உற்பத்தி செய்யப்படுகின்றது. மீதி இறக்குமதி செய்யும் நிலையில் நாடு உள்ளது.

மாந்தை உப்புக் கம்பனிக்கு கீழ் கல்லுண்டாயில் அறுநூறு ஏக்கர் நில்பரப்பு இருந்தது. அதில் மாந்தை உப்பு கம்பனியின் அனுமதி இன்றி 250 ஏக்கர நிலத்தை யாழ்.மாநகரசபை சுவீகரித்து குப்பை கூழங்களை புதைப்பதினால் அங்கு உற்பத்தி கைவிடப்பட்டுள்ளது.

அதேபோல யாழ்ப்பாணத்திலுள்ள செம்மணியில் மாந்தை உப்புக் கம்பனிக்கு 300 ஏக்கர் உப்பு உற்பத்தி நிலம் உள்ளது. அப்பகுதியில் நீரின் உவர்த் தன்மை குறைந்து வருவதால் உப்பு உற்பத்தி கைவிடப்பட்டு வரும் காலத்தில் இறால் பண்ணை இன்றேல் மீன் வளர்ப்பு பண்ணை செய்வதற்கான ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. அங்கு வேலை செய்த ஐம்பது பேரில் ஒரு தொகுதியினர் ஆனையிறவு உப்பளத்திற்கும், இன்னொரு பிரிவினர் மாந்தை உப்பளத்திலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனரஎன்றார்.

## பறிபோகிறது மன்னார் ...

பாடசாலைகள் என்பன அதற்குள்ளேயே உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்போது புதிய அரசாங்கம் ஆட்சி அமைத்த போதிலும் முள்ளிக்குளத்திற்கு மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதுடன் எவரும் முயற்சி எதனையும்கூட எடுக்கவுமில்லை.

இந்தக் கிராமத்திற்கு அருகிலேயே முஸ்லிம் மக்களின் கிராமங்கள் உள்ளன. கொண்டைச்சி, பாலைக்குழி, மறுச்சிக்கட்டி போன்ற இடங்களில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட பின்னர் போர் நடைபெற்ற காலங்களில் மீளவும் தமது இடத்திற்கு வரவில்லை. இடங்கள் அனைத்தும் புதர்மண்டி, காடுகளாக உள்ளன. காடு மண்டிய இந்த முஸ்லிம் மக்களின் பிரதேசங்களை அரசாங்கம் வில்பத்துக்காட்டுடன் இணைத்து அந்தப் பகுதியில் ஓடும் மாதுறுஓயா நதியுடனான 5000 ஏக்கர் வரை வனவள பாதுகாப்பு பிரிவிற்குள் கொண்டு வந்துள்ளது. எனினும் இவ்வாறு இணைக்கப்பட்ட பகுதியில் மன்னார் முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ளது. இவ்வாறு வனவளப் பாதுகாப்புப் பிரிவிற்குள் இந்தக் காணிகள் கொண்டுவரப்பட்டமை குறித்து பூர்வீக உரிமையைக் கொண்ட முஸ்லிம் மக்களிடம் கேட்கவில்லை என அமைச்சர் றிசாத் பதியுதீன் குற்றம் சாட்டியுள்ளார். இரகசியமான முறையில் இவ்வாறு செய்தது பிழையான செயல் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையிலேயே மீள்குடியேற வந்த மக்கள் தமது புதர்மண்டிக் கிடந்த காணிகளை துப்பரவு செய்த வேலையே பொதுபல சேனா அமைப்பு பிரச்சினையைக் கிளப்பியது. அதாவது வில்பத்துக் காட்டை முஸ்லிம் மக்கள் அழிக்கிறார்கள் என்று. ஆனால் வில்பத்துக் காட்டில் முஸ்லிம் மக்கள் கைவைக்கவில்லை. ஆனால் முஸ்லிம் மக்கள் தமது பூர்வீக நிலங்களுடன் சேர்த்து முசலி, சிலாவத்துறை பகுதிகளில் மேலும் சில நிலப்பகுதிகளை பிடிக்கும் வகையில் காடுகள் அழிக்கப்பட்டு வீடுகளைக் கட்டியுள்ளனர்.

(தொடர்ச்சி 23 இல்......)


**அன்புசால் வாசகர்களே!**

உங்கள் ஊரிலுள்ள பிரச்சினைகள்
தொடர்பாக 500 சொற்களுக்கு மேற்படாமல்
தபாலில் எழுதி அனுப்புங்கள் தினச்செய்தியில்
பிரசுரிப்பதற்கு
நாம் தயாராகவே உள்ளோம்.

**தினச்செய்தி**
**தில்லைகட்டி லேன்,**
**சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**



**தினச்செய்தி தொடர்பான**
**விமர்சனங்கள், ஆக்கங்கள்**
**வரவேற்கப்படுகின்றன.**

*தொடர்புகளுக்கு :*
தில்லைகட்டி லேன்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
தொலைபேசி : 021 7539300
தொலைநகல் : 021 7539300
இணையம் : thinacheithi@gmail.com

# வடக்கின் கல்வியும் எமக்கான நீண்டிருக்கும் பயணமும்

அருணன்

சுயநிர்ணயம் பற்றிய கனவில் எல்லாமே இழக்கப்பட்டுவிடுமோ என்ற ஐயம் எழுந்துள்ளது. வடக்குமாகாணம் தனது தேசத்துக்கான அரசாட்சி மன்றத்தை நிறுவியபின் பிரதானமாக கவனத்தில் எடுக்கவேண்டிய பெரிய துறைகளாக

தொழில், கல்வி, சுகாதாரம், சுற்றாடல் என்பன காணப்படுகின்றன.

இன்று நவீன சமூகத்துக்குள் நாமும் நுழைந்துவிட்டோம். உலகமயமாதலால் எமது பாரம்பரியங்களை மட்டும் கொண்டு வாழமுடியது என்பது தெளிவே.

சுயாட்சியாக எண்ணத்தக்க அடிப்படைகளை கொண்ட மாகாணசபையில் தமிழ் பிரதேசத்து மக்கள் வாழ்க்கைக்கான செயற்திட்டங்கள் முன்மொழியப்பட்டனவா ? என்ற கேள்வி வடக்கின் பெரும்பான்மை ஆசனங்களை தமதாக்கிகொண்ட த.தே.கூ கட்சிக்கு முன் வைக்கப்படுகிறது.

இன்று புதிய அரசு பத்துலட்சம் தொழில்வாய்ப்புக்களை உருவாக்க எண்ணியுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டது. அதில் எமது பகுதிக்கெண் கிடைக்கும்? எமது இளைஞர்கள், யுவதிகள் எவ்வாறு பயனடைவர்? என்ற ஐய வினா எழுகிறது அதை மத்திய அரசு மேற்கொண்டாலும் எமது மாகாணசபை எத்தகு கருத்தியல் ஒத்துழைப்பை மத்திய அரசுக்கு வழங்க இருக்கிறது? அதுபற்றி மாகாண அரசு வடக்கின் பௌதிக வளங்களை ஆய்வுக்குட்படுத்தி பரிந்துரைகளை தயாரித்துவிட்டதா? வெளிப்படைத்தன்மை பேணப்படுகிறதா ? என்பது மக்களின் கேட்காத கேள்விகள்.

எமது வளங்கள் பற்றிய ஆய்வு செய்யப்படுகிறதா அபிவிருத்தி செய்யப்படுகிறதா.?

எதிர்கால வளங்களில் மிகமுக்கிய வளம் மனிதவளம் அதுவும் மாணவர் வளம் அவர்களை சரியாக வளப்படுத்துவது கல்வித்துறைதான் இங்கு அந்ததுறைக்கு பரோபகார பெருந்தன்மயராக முன் வருபவராக இருக்கும் அதிகாரிகளே அவசியம். அத்தகு தெரிவுகள் இந்த இளைய சபை செய்துள்ளதா ?

எத்தனையோ செயன்முறைகளுக்கூடாகவே ஒரு மனிதவளத்தை உருவாக்கவேண்டும் என்கின்ற தார்மீகப் பொறுப்பை வடக்கு கல்விப்புலம் நினைத்தும் பார்க்காத நிலையையே மக்கள் உணர்கிறார்கள்.

பாரபட்சம், அதிகார மமதை, துவேசங்கள், உயர்வுச்சிக்கல் ,புறக்கணிப்பு அக்கறையின்மை ,அர்ப்பணிப்பின்மை போன்ற தனிமனித சுபாவங்களால் நாளாந்தம் வடக்கு மாந்தர்கள் அரச பணியாளர்களால் நோவிக்கப்படுகிறார்கள்.

மேலும் திட்டமிடப்படாத வளப்பகிர்வு பொருத்தமற்ற மனிதவள முகாமைத்துவ அணுகுமுறைகளால் குறிப்பாக சில மாதங்களாக கல்விப்புலம் சீரழிக்கப்பட்டுக்கொண்டேயுள்ளது. இவை ஊடகங்களால் வெளிப்படுத்தப்படினும் பொறுப்பான மாகாண சபை கவனத்தில் எடுத்ததாக தெரியவில்லை. ஒரு ஜனநாயக சமூகத்தில் ஊடகங்களில் சுட்டிக் காட்டப்படுபவை சட்டசபைகளால் சீர் தூக்கிப்பார்க்கப்பட வேண்டும். அதன் உறுப்பினர்கள் தமது மக்களின் மனக்குமுறல்களை அசட்டை செய்யக்கூடாது. இதனை வடமாகாண சபை எப்போது கற்றுக்கொள்ளும்.?

இங்கு சொந்த தொடர்புகள்சார் உள நிலைமைகளால் உழைக்கும் ஆசிரியர்கள்,அதிபர்கள், அதிகாரிகள் ,வளங்கள் என்பன முரண்பாடாக அணுகப்படுகின்றன. இதனால் வடமாகாணம் கல்வியில் மேலும் பின்தள்ளப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

2011 புள்ளி விபரப்படி

| மாகாணம் | சா/தரத்தில்சித்தி % |
|---|---|
| மேல் | 67.30 |
| தென் | 60.33 |
| கிழக்கு | 59.41 |
| வடக்கு | 56.93 |
| இலங்கை | 58.79 |

இதனை இல்லாதொழித்து சுயாதிபத்தியமுள்ள பிரதேசத்தை பெற்றதால் நாங்கள் சுபீட்சமான வாழ்வை மக்களுக்கு வழங்கி வருகிறோம் என்று வடமாகாண சபை மார்தட்டி தமது சுயநிர்ணயத்தை நோக்கிய பயணத்தை மேலும் கனதியாகவும் நியாயாதீக்கமுடையதாகவும் வெளிப்படுத்த இது சந்தர்ப்பம்.

அப்போதுதான் தன்னாட்சி நியாயமானது முக்கியமானது என இலங்கை அரசுக்கும் உலக சமூகத்துக்கும் காட்டலாம் எனில் இதுவரை எங்கள் தமிழத் தலைமைகள் இதனை எப்படிக்கையாண்டார்கள் ? மேற் கொண்ட முயற்சிகள் என்ன ?

கல்விக்கூடாகவே சிறந்த ஆளுமைகளை உருவாக்கிய பாடசாலைகள் சில முற்றாக செயலிழந்து உள்ளதை கல்விப்புலத்தார் விசனத்தோடு சுட்டிக்காட்டுகிறார்கள்.

கல்விமுகாமைத்துவம் படித்த பலர் இருக்க பொருத்தமில்லாதவரிடம் அதிகாரத்தை மக்களும் அரசியல்வாதிகளும் முறையே வழங்கி அணிலேறவிட்ட நிலையில் இருப்பதாக குடாநாட்டிலே பரவலாக பேசப்படுகிறது. இதைவிட மத்திய அரசுக்கு கீழே இருந்திருக்கலாமே என்கின்ற ஏக்கமும் விரவிக்கிடக்கிறது. உண்மையில் கல்வி மத்திய அரசின்கீழ் எப்போதும் இருக்கவேண்டும் என்பது நன்றாக புரிகிறது. ஏனெனில் புதிய கொள்கைகள் ஆய்வுநிறுவனங் களின் பரிந்துரைகள் உலகவங்கி ,யுனி செப் ,ஆசிய அபிவிருத்திவங்கி போன்ற நிறுவனங்கள் தமது ஆய்வுகளை ஒருநாட்டின் அரசுக்கே வழங்கும். அதனடிப்படையிலேயே கல்விக்கொள்கைகள் கட்டமைப்புகள் என்பன மாற்றத்துக்கு உள்ளாகும். இது சமானமாக எல்லா இனத்தவருக்கும் பிரதேசத்தவருக்கும் கிடைக்க வேணடுமெனில் கல்வியை மத்திய அரசு நேரடியாக கையாள்வதே வினை திறனுடையதாக இருக்கும். மாகாண சபைகளில் ஏனைய துறைகள் இருப்பது பயனுறுதியுள்ளதாக இருக்கும் ஆனால் மனிதவளத்தை ஒருநாடு பிராந்தியங்களில் ஏற்றத்தாழ்வு இல்லாது செய்யவும் கலைத்திட்டத்தில் ஒத்ததன்மையை பேணவும் மத்திய அரசிடமே கல்வி இருக்கவேண்டும் அங்கே எட்டப்படும் தீர்மானங்களுக்காக மாகாண பிரதிநிதிகள் கலந்து கொள்ளசந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

வடக்கில்அதிகமான மாணவர் கள் கலை, வர்த்தகத்துறைகளையே தெரிவு செய்கிறார்கள் மேல் மாகாணத்திலும் தென்மாகாணத்திலும் அதிகமாக விஞ்ஞான பிரிவையே மாணவர்கள் தெரிவுசெய்கின்றார்கள்.

அரசின் பலமான உதவியும் தொடர் கண்காணிப்பும் நகர ஆக்கமும் விஞ்ஞான ஆய்வுகூடங்களின் வளர்ச்சியும் வளப்பகிர்வின் கவர்ச்சியும் இதற்குக் காரணம். வடக்கு, கிழக்கில் கலைத் துறையில் உயர்தரம் கற்போர் வீதம் முறையே 66.4, 65.3 ஆக இருக்கும் அதேவேளை கணித விஞ்ஞானத்துறை வெறும் 18.5, 17.2 மட்டுமே. ஆனால் மேல் தென் மாகாணங்களில் நிலைமை கணித, விஞ்ஞானத் துறைகளில் இது முறையே 27.2, 27.5 வீத மாகும் கல்வியில் சமத்துவ மின்மை மாகாணங்களுக்கிடையே ஏற்படத் தொடங்கியுள்ளது. இது வடக்கில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தும். இதற்குக் காரணம் வடக்கு நிர்வாகத்தின் பார பட்சமான வளப்பகிர்வு. குறிப்பாக ஆசிரியர்வளம். இங்குள்ள 1AB பாடசாலைகளில் கூடகணித விஞ்ஞான உயர்தர ஆசிரியர்கள் சரியாகப் பங்கிடப்பட்டு வழங்கப்படாமை. சில இடங்களில் அதிபர் தனக்குப் பிடிக்காதவர் என்பதற்காகவே ஆசிரியர் வழங்கப்படாத நிலைமை அறிய முடிகிறது.

எனவே இலங்கையில் எல்லாப் பாடசாலைகளையும் ஒரு குடையின் கீழ்க்கொண்டுவருவதே சிறந்தது. இல்லையேல் நாங்கள் அழிவதற்கு நாங்களே காரணமாகும் நிலைமை ஏற்படும் அரசு தப்பிக்கொள்ளும்.

பாடசாலைகள் ஒரு பன்முக பரிமாணம் கொண்ட நிறுவனம். இதில் பணிசெய்வோருக்கென்று சுயமான பிரத்தியேக அரசியல் நிலைப்பாடுகள் இருக்கின்றமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். மாகாணசபை எந்தக்கட்சியோ அந்தக்கட்சியின் அதிபர்களைத் தான் பாடசாலையில் வைப்போம் என்ற பெரும் எடுப்பிலான பழிவாங்கல் பாரபட்சம் காட்டல் என்பன வந்தபின் நிறைவேறியுள்ளது.

SWAT streanth Weakness ஆகியவற்றை ஒரு நிறைவேற்று அதிகாரி நிதானமாக உள்வாங்கி உழைப்பவர்கள் நோகாமல் வின் வின் கோட்பாட்டினடிப்படையில் கல்வி முகாமைத்துவத்தை செய்யவேண்டும்

தமது பணியே கல்விப்பணி என்று கடந்த முப்பதுவருடங்கள், இருபது வருடங்கள் கல்விக்கு உழைத்தவர்களை எங்கிருந்தோ வந்த ஒருவர் போட்டு மிதிக்கின்ற நிலை. இதனை மனித நாகரீகம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. சாதுக்கள் ஒருநாள் மிரளும் சாத்வீக போராட்டங்கள் கூட முளைகொள்ளும் இப்போதுள்ள கல்வியமைச்சு "கொக்ரோச் தியரிக்குள்" மாட்டுப்பட்டு கிடக்கிறது.

இன்னும் கொஞ்சநாள் பொறுத்தால் குடாநாடெங்கும் பொருத்தமற்ற பெண் தலைமைகளைக் கொண்ட பாடசாலைகளே இவர்களால் உருவாக்கப்படும் என்ற நிலைமை தோன்றுகிறது.

ஏனைய துறைகளிலும் வடக்குக்கென்று வளங்களை அடிப்படையாக்கொண்ட முகாமை முறைகள் அறிமுகப்படுத்தப்படவேண்டும் அதில் உழைப்போரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருக்கவும் வேண்டும்.

ஆனால் இப்போது தமிழர் ஆதிக்கத்துக்குள் அடங்கியுள்ள துறைகளில் அநீதியான நிர்வாகம் இலங்கை சோஷலிச ஜனநாயக குடியரசின் அரசியல் யாப்பிலுள்ள பொது நிர்வாக ஏற்பாடுகளை உதாசீனம் செய்து தமக்கேற்றாற்போலவும் தனிநபர்களின் அடிப்படை உரிமைகள் அச்சத்துக்கும் பாதிப்புக்கும் உரியதாகிவிடுகின்ற நிலைமையை தமிழ்மக்கள் முகங்கொடுக்கிறார்கள். இது மாகாணசபை எமக்கு பாதிப்பானதே என்கின்ற யதார்த்தத்தை புரிய வைக்கிறது.

இதற்கு. நல்ல உதாரணமாக இப்போதுள்ள கல்வியமைச்சரும் செயலாளரும் இதற்குப் பொருத்தமில்லாதவர்களாக தம்மைக்காட்டி விட்டார்கள்.

இலங்கையில் 1833இல் பிரித்தானியாரால் அறிமுகமான நிர்வாகசேவை இன்றைய வடிவத்தின் கால்கோளாக காணப்படுகிறது. அதன் பின்னர் பெயர்மாற்றங்களுடனும் 1963 களில் பொது நிர்வாக சேவை அறிமுகமானது. எனச்சொல்லப்படுகிறது. ஆனால் கல்விநிர்வாகத்தையும் இந்த நிர்வாக சேவையினர் செய்வதால் ஏற்படும் விளைவுகளை வடமாகாணம் இப்போது மிகமோசமாக அனுபவிக்கிறது.

கல்வி தத்துவம் முகாமை வரலாறு, கோட்பாடுகள் என்பன நிர்வாக சேவையினர் அறியாதவை. கல்விக்கே தனித்துவமாக காணப்படுகின்றன என்பது பார்க்கப்பட வேண்டியது. எனினும் மத்திய அரசில் செயலாளர்களோடு நிபுணத்துவ ஆலோசகர்கள் இருப்பதால் கல்வி நிர்வாகம் தளம்பாதுள்ளது என்கிறார்கள் அவதானிப்பாளர்கள். ஆனாலும் ஒருகாலத்தில் இருந்த நிர்வாகசேவை அதிகாரிகள் தாம் வேறு துறைகளில் இருந்து கல்விக்கு பொறுப்பாக வந்தவுடன் தம்மை அடிப்படையில் வளர்த்ததுறையை சரியாக இற்றைப்படுத்தி தம்மை வழிநடத்தக் கூடிய வர்களாக்கினார்கள். இப்போது சுயாட்சி கிடைத்ததும் மோசமான மனிதர்கள் மீதான மனிதாபிமானமற்ற செயற்பாடுகளுக்கு இது களமாக்கப் பட்டுவிட்டது.

இங்கு தொடர்ந்தும் இந்தமாணவ வளம் ஆசிரியர்வளம் பௌதீகவளங்கள் விஞ்ஞான பாங்கில் அணுகப்பட்டு வடக்கு மாகாணம் மனித எதிர்காலத் தேவைக்கான வளபயன்பாட்டை முகாமைசெய்ய நேர்மையாக பணியாற்றக் கூடிய அரசியல் நோக்கங்களை முகாமைத்துவங்களில் கலக்காத பாரபட்சமற்ற நிறைவேற்று அதிகாரிகளை தேர்ந்தெடுக்காவிட்டால் பெரும்பான்மைச்சமூகம் தமிழர்களை கேலி செய்யும் வரலாறும் இங்கு தோன்றும்.

இங்கு கடந்த நாட்களில் ஏற்பட்ட பாரபட்சங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அவர்களுக்கான தீர்வு என்பவற்றை பொறுப்புணர்வோடு மாகாண ஏனைய உறுப்பினர்கள் கேள்வி எழுப்புவதும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதும் குழந்தையாயுள்ள மாகாணசபைமீது நம்பிக்கை கொள்ள வைக்கும்.

சிங்கள மாகாணசபைகளுக்கு மனிதநீதிசார் முன்மாதிரியாய் உங்களால் இருக்க முடியுமா என்பதையும் நிரூபியுங்கள். ஒரு குடியியல் சமூகத் தளத்தில் பத்திரிகைகள் வெளிக்கொணர்ந்த சமூக நெருக்கடிகளை மாகாணசபை அமர்வுகளில் துவயலாகத்தானும் தொட்டுக்கொள்ளவில்லை. இது மக்களின் குரலை அவமதிப்பதென்பது எல்லோருக்கும் புரிந்தது

இதுவரை அநீதியை எல்லோரும் ஆமோதித்துள்ளனர். குறிப்பாக பாடசாலைகள் குழம்பியது பற்றி சபை அமர்வில் ஏன் விவாதிக்கப்படவில்லை? ஒரேகட்சியினர் என்பதுக்காக ஒருவருக்கு ஒருவர் முதுகு சொறிகிறார்கள். இவர்கள் வாங்குவது ஏழைகளின் உழைப்பினால் வந்த வேர்வைகளை. இவர்களின் சொகுசுவாழ்வுக்கு காலமைத்தவர்கள் மக்கள் என்பதை இன்னும் ரெண்டுவருடத்தின் பின்தான் நினைக்கப்போகிறார்கள் என்றால் அது சிலகாலத்துக்கே.

மக்கள் இவர்களின் தனிமனித குணாம்சங்களையும் தனிமனித தலைமைத்துவங்களை மதித்தே வாக்களித்தனர்.

அதேபோல எமது சூழல்வளங்கள் இல்லாதொழிக்கப்படுகின்றன. அவற்றை பாதுகாப்பதற்கு முன்மொழிவுகளை கொண்டுவருதலும் அவசியமே. வடக்கைப்பொறுத்தவரை கடல் வளம், காட்டுவளம், நிலவளம் என்பன இன்னும் நிலைபேறான பராமரிப்புக்கு உள்ளாக்கப்படாது அதுப்பற்றிய விழிப்புணர்வோ இல்லாதும் பாதுகாக்கப்படாமல் வீணாகின்றதை வடக்குமக்கள் அறிவர்.

பூனைக்கு மணிகட்டுவதுயார் அது வடமாகாண சபைதான். பின்தங்கிய பகுதிக்கு கல்வியில் பாரபட்சம் பாதை அமைப்பதில் சுகாதார வசதிகளில் எல்லாம் புறக்கணிப்பு என்பதை மக்கள் பிரதிநிதிகள் குடியியல் ஏற்பாடுகளை மனங்கொண்டு கவனிக்க வேண்டும் சட்டதிட்டங்களை அவமதிக்காது நடக்கவேண்டும். இதுவரை புரியப்பட்ட அநியாயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும்.

நல்லாட்சி ஒன்று வடக்கிலும் வரவேண்டுமாகில் பாரபட்சமான அமைச்சர்களும் அதிகாரிகளும் அகற்றப்படவேண்டும். இது மக்களின் அருள்வாக்கு முதலமைச்சர் ஐயா உங்களை எல்லோரும் நம்புகிறோம். கண்ணைத் திறவுங்கள்.

எல்லோரும் ஒரே பண்பாட்டை கொண்டவர்கள் என்பதால். ஒரேசிந்தனை முறைகளையும் கொண்டவர்கள் என்பதால். ஒரே வரலாற்றையும் வாழ்வொழுக்கத்தையும் கொண்டவர்கள். ஒரே பிரதேசத்தையும் வளங்களையும் கொண்டவர்கள் என்பதால் இந்தப் பத்தியால் உங்களை போற்றும் காலத்தை உருவாக்குங்கள். ஒரு நீதிபதியை தலைவராகக்கொண்ட வடக்கு மாகாண சபை நேர்மை உண்மை தீர்க்கதரிசனம் கோடாமை உழைப்பு வேகம் வினைத்திறன் எல்லாம் கொண்டதாக எப்போது மாறும்?

# முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் வீண் வாதங்கள் எதற்காக?

கிருஸ்ணன்

முஸ்லிம் மக்கள் தமக்கான மீள் குடியேற்றம் கோரி நாடளாவிய ரீதியில் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். வடபகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தமது சொந்த மண்ணில் மீள் குடியமரக் கோரும் சந்தர்ப்பத்தை தமது அரசியல் பிரச்சார பேசு பொருளாக்கி இனவாதத்தை வேறு துருவத்தில் தூண்ட முற்படுகின்றனர் சில அரசியல் வாதிகள். இது தொடர்பாக பொறுப்பற்ற கருத்துக்களை தொடர்ந்தும் வெளிவிடுகின்றனர்.

“எண்பது வீதத்தை 12 வீதம் எதிர்த்தால், 12 வீதத்தை எட்டு வீதம் ஏன் எதிர்க்கக்கூடாது. இப்படிக் கேள்வி எழுப்புகின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள். 80 வீதமான சிங்கள மக்களை 12 வீதமான தமிழர்கள் எதிர்க்கின்ற போது, 12 வீதமான தமிழர்களை 8 வீதமான முஸ்லிம்கள் ஏன் எதிர்க்கக் கூடாது” என்று ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பியுள்ளார். மறு துருவத்தில்

புலிகளின் இனச்சுத்திகரிப்பையிட்டு வெட்கித்தலை குனிகின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். இதை மறுத்து பாக்கியசெல்வம் அரியநேத்திரன் கருத்து வெளியிடும் போது

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களை விடுதலைப்புலிகள் வெளியேற்றியமைக்கு தமிழ் மக்கள் வெட்கித்தலை குனியத் தேவையில்லை இது இனசுத்திகரிப்பில்லை இனபாதுகாப்பே எனத் தெரிவித்தார். மாவடி முன்மாரியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போது அது தொடர்பில் அவர் இவ்வாறு பதில் கூறினார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் சுமந்திரன் கூறிய கருத்தானது அவரின் சொந்தக் கருத்தே தவிர அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தல்ல, எனத் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு வடபகுதியை விட்டு முஸ்லிம் மக்கள் வெளியேற்றப் பட்டனர். அது நடந்து முடிந்த சம்பவம் அதை விமர்சிப்பதால் எந்தப்பயனும் தற்போது ஏற்படப் போவதில்லை இந்த மக்களிற்கு வேண்டியது மீள்குடியேற்றம் மட்டுமேதான். யாராவது “தம்மை வெளியேற்றியது சரியா தப்பா” என்று கேட்டார்களா?... தற்போது நல்லாட்சியரசு தம்மையும் மீள்குடியேற்றம் செய்யவேண்டும் என இடம் பெயர்ந்த முஸ்லிம்மக்கள் நல்லாட்சியைக் கோருகின்றனர். இது மட்டும் தான் கோரிக்கை. ஒரு ஜனநாயக நாட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு ஏற்பட்ட அவலங்களிற்கு நல்லாட்சியிடம் நிவாரணம் கோருகின்றனர். அதைப் பெற்றுக் கொடுக்க முடியுமா?... முடியாதா?.. என்பது தொடர்பான கருத்துக்களை முன்வைப்பது தான் அம்மக்களிற்கான அரசியல் பிரதிநிதிகளின் கடமை அதற்கப்பால் மீண்டும் ஒரு இனப்பிரச்சினையினை உண்டு பண்ணும் வகையில் அரசியல் வாதிகள் இதை வைத்து பந்தாடுகின்றனர்.



அன்று முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகள் வெளியேற்றிய போது விடுதலைப்புலிகள் சார்பான அரசியல் முடிவுகளை எடுப்பதில் அங்கம் வகித்த சுமந்திரன்தான் இன்று முஸ்லிம் மக்களிற்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றார். அப்படியானால் அன்றே அது தப்பு எனக் கூறிவிட்டு ஆனந்த சங்கரி போல் வெளியேறியிருக்கலாம் தானே?.. அன்று உங்கள் அரசியல் அபிலாசைகளை அரங்கேற்ற விடுதலைப்புலிகளிற்கு தலையாட்ட வேண்டும் இன்று முஸ்லிம் மக்களின் ஆதரவை சம்பாதிக்க இப்படிப் பேசவேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் ரவூப் ஹக்கீம் உடன்படிக்கை செய்தவர். விடுதலைப் புலிகளை ஏற்று இணங்கிக் கொண்ட ரவூப் ஹக்கீம் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை தற்போது தெரிவித்துள்ளமை அவ்வளவு நல்லதல்ல.

நடந்து முடிந்த சம்பவங்களை நடிப்புக்காக தூக்கி நாடகமாடாதீர்கள். மீண்டும் இலங்கையில் சிறுபான்மை இனங்களிற்கிடையிலும் இனவாதத்தைத் தூண்டாதீர்கதாங்காது இந்தப் பூமி.

# சொன்னார்கள் சொன்னார்கள்...

இலங்கைக்குள், தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமையை வழங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தயாராக இருந்தார்

பிரபாகரனுடன், ராஜபக்ஷ பின்கதவு பேரங்களைச் செய்ய வேண்டிய தேவை இருந்தது.

சிங்களவர்களின் மீட்பராக அவர் தன்னைக் காட்டிக் கொண்டார்.

ஆனால், தனது அரசியல் எதிர்காலத்துக்கு உதவும் என்றால், சொந்த நலனுக்காக எத்தகைய அழுக்கு பேரங்களை பேசவும் அவர் தயாராக இருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ, வடக்கைப் பிரபாகரனிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக என்னிடம் கூறினார்.



நீண்ட காலத்துக்கு கையளிப்பதையோ அல்லது சமாதான முயற்சிகள் நீடிப்பதையோ விரும்பவில்லை என்றும் அது தெற்கில் தனது ஆதரவைச் சீர்குலைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.


**எரிக்சொல்ஹெய்ம்**

* * *

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்கள் இந்த ஆண்டில் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

“யாழ்ப்பாணத்தில் தற்போது, 56 பேர் எச்.ஐ.வி தொற்றுடன் வாழ்கின்றனர். யாழ்ப்பாணத்தில் எச்.ஐ.வி பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமைக்கு இது முக்கியமான காரணம்

2015 ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் இலங்கையில் எச்.ஐ.வியினால் பாதிக்கப்பட்ட 170 பேர் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.




இலங்கையில் 1987ஆம் ஆண்டு எயிட்ஸ் நோய் முதன்முதலாக கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்குப் பின்னர், எயிட்ஸ் நோயினால், 357 பேர் மரணமாகியுள்ளனர்.

**தேசிய எஸ்ரிடி,எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்ட பணிப்பாளர், மருத்துவ கலாநிதி சிசிர லியனகே**

* * *

வடக்கில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டித்தும், வடக்கு மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்படாவிட்டால், தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டதாக, உலகம் தீவிரமாக கருத்தில் எடுத்துக் கொள்ளாது

“தமிழர்களுக்கு எதிரான இனஅழிப்பைக் கண்டித்து அண்மையில் வடக்கு மாகாணசபை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.



அதுபோல, வடக்கில் இருந்து விடுதலைப் புலிகளால் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டித்தும், வடக்கு மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அது ஒரு இனச்சுத்திகரிப்பாகும்.

வடக்கு மாகாணசபை இதனைச் செய்யாது போனால், தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டதாக, உலகம் தீவிரமாக கருத்தில் எடுத்துக் கொள்ளாது.


யாழ். மாவட்டத்தில் பெரும்பான்மையினரான தமிழர்கள் தவறுகளைப் புறக்கணிக்கும் போது, சிங்களப் பெரும்பான்மையினரின் தவறுகளை அவர்களால் கண்டிக்க முடியாது.”

**எம்.ஏ சுமந்திரன்**

* * *

‘அரசியல் கைதிகளுக்கான சாட்சியம் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இல்லையெனவும், அதனாலேயே கைதிகள் விடுதலை தாமதமாகுவதாகவும் குறிப்பிடும் நீதி அமைச்சரின் கருத்தினைஏற்றுக்கொள்ள முடியாது. சட்டத்தின் பிரகாரம் முன்னெடுக்கவேண்டிய விடயங்களையே சட்டமா அதிபர் திணைக்களம் செய்யும்.

எந்தவித சாட்சிகளும் இன்றி நபர்களை கைதுசெய்து, சந்தேகத்தின் பேரில் பல வருடகாலம் வைத்துக் கொண்டிருந்துவிட்டு, வழக்குத்தாக்கல் செய்யாமல் தற்போது சட்டமா அதிபர்தான் அதைப்பற்றி கவனிக்க வேண்டுமென்றால் அது எப்படி சாத்தியமாகும்?



அரசியல் கைதிகளுக்கான சாட்சியம் இல்லாமையே, அவர்களது விடுதலை தாமதமாவதற்கு காரணமாகும். அதனால்தான் அரசாங்கம் சாட்சியத்தினை பெற முயற்சிக்கின்றது.

முன்பு ஜே.வி.பி காலத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. குறித்த 10 ஆயிரம் பேரை விடு வித்ததால் எந்தவித வன்முறைகளும் ஏற்படவில்லை யென்றால், இந்த 400 பேரை விடுதலை செய்வதனாலேயா வன்முறை ஏற்பட்டு விடப்போகின்றது

**வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன்**

# கிளிநொச்சி மகா வித்தியாலயம்

# புண்ணுக்குரிய மருந்தை தேடுவதனை விடுத்து மருந்துக்குரிய புண்ணை தேடும் மாகாண கல்வி அமைச்சு

நல்லதம்பி கார்த்திகேசு

ஒரு குடும்பத்தில் குடும்ப தலைமைத்தும் சீரில்லையென்றால் குடும்பம் சீரில்லாமல் போய்விடும், ஒரு நிறுவனத்தில் முகாமைத்துவ தலைமை சிறந்த ஆளுமையுடன் நிறுவனத்தை வழிநடத்த தவறினால் நிறுவனம் நாசமாகிவிடும், ஒரு நாட்டின் தலைமைத்துவம் சரியான தலைமைத்துவமாக இல்லை என்றால் நாடும் நாட்டு மக்களும் அந்தோ கதிதான். எனவே தலைமைத்துவத்தின் ஆளுமையிலேயே நாடோ, வீடோ,




நிறுவனமோ வெற்றிகரமான உயர்ந்த நிலையை நோக்கிச் செல்லும். அவ்வாறான தலைமைத்துவம் தவறினால் எல்லாம் தலைகீழாய் மாறிவிடும். ஒரு சீரில்லாத தலைமைத்துவம், அல்லது தவறிய தலைமைத்துவத்திற்கு அண்மையில் ஏற்பட்டுள்ள ஒரு சிறந்த உதாரணம்தான் கிளிநொச்சி மகா வித்தியாலம். கிளிநொச்சி கனிஸ்ட மகா வித்தியாலயமாக விளங்கிய பாடசாலை இன்று தலைமைத்துவத்தின் தவறால் கலவர மகா வித்தியாலயமாக மாறியிருக்கிறது. ஏற்படுகின்ற எல்லா வகையான பிரச்சினைகளையும் தனது தலைமைத்துவ ஆளுமையினால் தீர்த்து நிறுவனத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பதிலாக அந்தப் பிரச்சினைகளையெல்லாம் மேலும் இடியப்ப சிக்கலாக மாற்றி மாவட்டத்தின் ஒரு முன்னணி கல்வி நிறுவனத்தை சிதைத்து சின்னாபின்னமாக மாற்றுகின்ற ஒரு தலைமைத்துவமாக கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் தற்போதைய தலைமைத்துவம் காணப்படுகிறது. இது ஒருபுறமிருக்க கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும், வீழ்ச்சியை நோக்கி பாடசாலை செல்வதற்கும் முழுப்பொறுப்பையும் மாகாணக் கல்வி அமைச்சே ஏற்க வேண்டும். வடமாகாண கல்வி அமைச்சு கிளிநொச்சி மகா வித்தியாலயம் தொடர்பில் புதிய அதிபரின் நியமனம் முதல் இன்றுவரை மேற்கொண்ட அணுகுமுறையே பாடசாலையை இந்தளவுக்கு கொண்டு சென்று விட்டுள்ளது.

அரசியல் உள்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த பாடசாலையின் நடவடிக்கைகளில் மாகாண கல்வி அமைச்சர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையே கிளிநொச்சி மகா வித்தியாலயத்தினை மோசமான நிலைமைக்கு இட்டுச் சென்றிருக்கிறது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் மற்றும் பெரும்பான்மையான ஆசிரியர்கள் ஒருபோதும் புதிய அதிபருக்கு ஏதிராக தங்களது எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டது கிடையாது. அவர்கள் அதனை பல இடங்களில் வெளிப்படையாகவே தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால் அருண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய் என்பது போல செல்வாக்கின் அடிப்படையில் சிபார்சுகளுக்கு ஊடாக கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு அதிபராக வந்த ஜெயந்தி தனபாலசிங்கம் பாடசாலையில் ஆசிரியர்கள் தும்மினாலும் மாணவர்கள் இருமினாலும் அதனை தனக்கு எதிரான சதி என்ற கண்ணோட்டத்துடன் அணுக அது அதிபருக்கும் பாடசாலைக்கும் இடையில் பெரியளவு இடைவெளியை ஏற்படுத்தி விட்டது.

இதனைத் தவிர தனது பாடசாலை ஆண் பணியாளர் ஒருவரை, சேர்ந்து கதைக்கின்ற மாணவிகளை புகைப்படம் எடுக்கும்படி அதிபர் பணித்தமை அந்த பணியாளரும் தலையே சொல்லிட்டு இனி என்ன என்ற கணக்கில் மாணவிகளை தனது விருப்பத்திற்கு அமைவாக பல கோணங்களில் புகைப்படம் எடுக்க அது பிரதேச ஊடகவியலாளர்களின் கவனத்திற்கு வர அவர்கள் அதிபரை தொடர்புகொண்டு கேட்க தானே படம் எடுக்கச் சொன்னதாக அதிபர் தெரிவிக்க மறுநாள் ஊடகங்களில் செய்தியாக அது வெளிவர நிலைமைகள் மேலும் விபரீதமாகியது. அது மட்டுமன்றி மாணவர்கள் உளநலம் பாதிக்கப்பட்டுள்ளதாக (பைத்தியம்) தெரிவித்து உளநல மருத்துவர்களை அழைத்து மாணவர்களுக்கு மனநல சிகிச்சை வழங்கப்பட்டது. பின்னர் சில நாட்கள் கடந்து ஆசிரியர்களுக்கும் பைத்தியம் என உளநல மருத்துவர்களை கொண்டு வந்து வைத்தியம் பார்க்கப்பட அதிபர் மீதான வெறுப்பு மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோர்கள் மத்தியிலும் அதிகமாக வளரத் தொடங்கியது. தங்களது பிள்ளைகளை பைத்தியங்களாக கருதிய அதிபர் மீது பெற்றோர்கள் கடும் விசனத்தை வெளியிட தான் செய்தது மிகப்பெரும் தவறு என்பதனை உணராமல் அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் அதனை நியாப்படுத்தினார். அது மட்டுமன்றி முகநூலில் தனக்கு எதிராக மாணவர்கள் செயற்படுவதாக தெரிவித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து தனது மாணவர்களை பொலிஸ் நிலையம்வரை கொண்டுசென்ற இலங்கையின் கல்வித்துறையில் ஒரேயொரு அதிபராக ஜெயந்தி தனபாலசிங்கம் செயற்பட்டமை எல்லாம் அவரின் தலைகீழ் தலைமைத்துவத்தின் வெளிப்பாடாக அமைந்து விட்டது. கல்வி அமைச்சர் தன்னுடைய ஆள் எனவே கிளிநொச்சியின் கல்வித்துறையில் யாரை எங்கே எப்படி வைக்க வேண்டும் என்று தீர்மானிப்பதே நான்தான் என்று தலைகால் புரியாமல்செயற்படும் அளவுக்கு நிலைமையைக் கொண்டு சென்றுவிட மகா வித்தியாலயத்தின் பிரச்சினை இன்று தீர்க்க முடியாத பிரச்சினையாக நீடித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் வலயக்கல்வித் திணைக்களம் கள நிலைமைகளை நன்குணர்ந்து பிரச்சினைகளை அணுக அது தனக்கு எதிராக வலயக்கல்வி அலுவலகம் செயற்படுவதாகக் கருதிய அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தனது நெருக்கத்திற்குரிய கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றுவிட்டார். அமைச்சரின் கட்டளைக்கு அமைவாக மாகாணக் கல்வித் திணைக்களம் தனது வலயத்தில் தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலையான கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளரைச் செல்ல வேண்டாம் என அதட்டிக் கூறிவிட்டது. இது மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்ற ஒரு விசாரணையின் போது பாடசாலையின் அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கத்திற்கு முன்னிலையில் வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அவர்களுக்கு கட்டளையாக அவரது நெஞ்சில் இறங்கியது.

இதன்பின்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பெற்றோர்களுடன் நடத்திய கூட்டத்திலும் மாணவர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் குறை கூறுவதனையே நோக்காகக் கொண்டு பேசினாரே தவிர பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வை நோக்கிச் செல்லாமல் சென்று விட்டார்.

இதுமட்டுமன்றி பாடசாலையில் உள்ள ஆளுமைமிக்க ஆசிரியர்கள் கடந்த காலத்தில் பாடசாலையை மாவட்டத்தின் தனித்துவமான பாடசாலையாக மாற்றிய திறமை மிக்க ஆசிரியர்கள் திடீர் திடீர் என இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இது மாணவர்கள் பெற்றோர்கள் மத்தியில் அதிபர் மீதான வெறுப்பைத் தோற்றுவித்துள்ளது அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் வளர்ச்சியின் தூண்களாக இருந்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றமை தங்கள் பிள்ளைகளின் கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பது மட்டுமன்றி பாடசாலையும் வீழ்ச்சியை நோக்கிக் கொண்டு செல்லப் போகிறது என பெற்றோர்கள் ஆதங்கப்படுகின்றனர். புதிய அதிபர் பாடசாலையை முன்னேற்ற வந்தவர் அல்ல எனும் மாணவர்கள் பெற்றோர்களின் கருத்துக்கு இந்தச் செயற்பாடுகள் மேலும் வலுச்சேர்த்து விட்டிருக்க.. தற்போதைய அதிபர் தான் ஆலோசனை பெறுபவர்களாக பழைய மாணவர் சங்கத்தினை சேர்ந்த முதிர்ச்சியற்ற விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாக செயற்படுகின்ற பெடியன் ஒருவனையும், மற்றும் சமூக ஆர்வலர்கள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்கின்ற எந்தவித சமூக தூரநோக்கும் அற்ற சிலரின் சின்னப் பிள்ளைத் தனமான நடவடிக்கையாலும் பாடசாலை சீரழிக்கப்படுகிறது என பாடசாலையின் கல்விச் சமூகம் கவலையடைகிறது. எனவே இவ்வாறு தொடர்ச்சியாக பாடசாலையின் தற்போதைய எல்லாச் செயற்பாடுகளும் தலைமைத்துவ ஆளுமைக்கு அப்பாற்பட்டு மேற்கொள்ளப்படுகின்றமையின் வெளிப்பாடாகவே கிளிநொச்சி மகா வித்தியாலயம் நாளாந்தம் சர்ச்சைக்குரிய பாடசாலையாகக் காணப்படுகிறது. ஒரு காலத்தில் சிறப்புக்களால், சாதனைகளால் பத்திரிகைகளிலும் மக்கள் மத்தியிலும் பேசப்பட்ட எழுதப்பட்ட பாடசாலை இன்று பிரச்சினைகளால் பேசப்படுகிறது எழுதப்படுகிறது.

நல்ல மேய்ப்பன் இல்லாத மந்தைகள் போன்று சாதனைகள் படைத்த மாணவர்கள் சீரழிகின்றார்கள், அடிதடியில் ஈடுபடுகின்றார்கள், வைத்தியசாலையில அனுமதிக்கப்படுகின்றார்கள். தற்போதைய அதிபர் இட்ட பிள்ளையார் சுழி போன்று பொலிஸ் நிலையம் ஏறி இறங்குகின்றார்கள். இப்படி நாளாந்தம் பாடசாலை சிதைந்து கொண்டிருக்கிறது. தேன் குளவிகள் சிறுக சிறுக தேன் எடுத்து வந்து சிரமப்பட்டு கட்டிய தேன்கூடு இன்று கண் முன்னே சிதைந்து கொண்டிருக்கிறது. இப்போதே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வேறு பாடசாலைக்கு மாற்றி விடலாமா என முணுமுணுக்கத் தொடங்கி விட்டார்கள். இது ஒரு மோசமான நிலை இதற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தவறினால் கிளிநொச்சி மகா வித்தியாலயம் தேன் இல்லாத வெறும் சக்கையாக மட்டுமே இருக்கும். 2500 வரையான மாணவர்களின் எதிர்காலம் ஒரு தனி நபரின் நலனுக்காக பலியிடப்படுகின்றமை வெளிப்படையாக தெரிகிறது. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின பிரச்சினை தொடர்பில் மாகாண கல்வி அமைச்சு புண்ணுக்குரிய மருந்தைத் தேடுவதனை விடுத்து மருந்துக்குரிய புண்ணை தேடுகின்றது.. எனவே பிரச்சினை இப்போதைக்குத் தீர வாய்ப்பில்லை.

எனவே இப்போது கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு முன் நின்று ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்ற சினிமா பாடசாலை உரத்து பாட வேணும் போல் உள்ளது. அவ்வளவுதான்.



# கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்...?

மழை தன் வேலையை காட்டத் தொடங்கி விட்டது. மழை இலேசாகத் தொடங்கி மெதுமெதுவாக ஆர்மூடுகலில் தனது பயணத்தைத் தொடர்கிறது. பொழுது படர்கின்ற நேரம், இருந்தாலும் மழைக்கால வேளையில் குடை இருந்தும், சைக்கிள் பயணத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் கடை ஓரமாய் ஒதுங்கிக் கொண்ட பேர் வழிகளில் நானும் ஒருத்தன்.

மழை என்றாலும் யாழ்.நகரம் தனது அலுவல்களை தன்பாட்டில் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

வீதியோரக் கௌதமன் போல் எனது அவதானம் வீதி நோக்கி சென்று கொண்டு இருக்கிறது. மழை தனது வேலையை பார்க்கிறதோ (எம்மைப் போல் காத்திருக்காமல்) அதுபோல் பாரதி கண்ட புதுமைப் பெண்களாய் வேலை முடிந்ததும், மேலதிக வகுப்புக்கள் முடிந்ததும், நவீனத்துவத்தின் அடையாளமான எமது பெண்கள் மழையைப் பொருட்படுத்தாமல் குடையின்றியும் போகிறார்கள், வருகிறார்கள், வேலை முடிந்து வரும் ஆண்கள், உயர்கல்விக் கூட மாணவர்கள் என்போர் சாராயக் கடைகளில் கொள்வனவுகளை மறக்காமல் செய்துகொண்டு போகிறார்கள், ஒரு முதியவர் தூஷனப் பாடலை பாடிக்கொண்டு செல்கிறார். ஆனால் மறுபுறம் மூடப்பட்ட வங்கியின் மற்றும் நிறுவனங்களின் வெளிப்புறம் மேல்சட்டை இன்றியும்கூட அனாதரவில் இருக்கும் முதியவர்களை இந்த மழையின் சித்து விளையாட்டு ஒன்றும் செய்துவிடப் போவதில்லை. இளைஞர்களின் அதியுயர் மோட்டார் சைக்கிள்கள்

**யாழ்ப்பாணத்தை ஒரு கேந்திர நிலையமாக மாற்றுவதில் உள்ள முனைப்பு அதிகமாகத் தென்படுகிறது. மக்களின் நுகர்வுக் கலாசாரத்தினை பேருக்கத்தின்பால் அதிகரிப்பதன் ஊடாக பண்பாட்டுப் பேருக்கத்தில் இருந்து அவர்களின் கவனச் சிதறலை ஏற்படுத்துவதன் ஊடாக மக்களின் பண்பாட்டுத் தளத்தை சிதைப்பதன் ஊடாக அடையாள உடைப்பை மேற்கொள்ளும் நிகழ்ச்சி நிரல் உள்வாங்கப் பட்டிருக்கிறதா என்ற கேள்வி எம்முள் இயல்பாக எழுகிறது**

விரைகின்றன. பார்களின் முன்னால் நிற்கின்றன. கொள்வனவின் பின் எங்கோ மறைகின்றன, பியர்ப்பேணிகள் வெற்றுப் பேணிகளாகின்றன. இரவு நேரம் தொலைபேசிகளில் சிணுங்குகின்றன. மறுபுறம் பாடசாலைமாணவியோ அல்லது பல்கலைக்கழக பெண்ணோ வலையில் சிக்குகின்றாள். அது என்னென்னவோ வீடுகளிற்கு தெரியாமல் ஆகிவிடுகின்றன, இந்தப் பிட்டை பல்கனித் திரையரங்குகளும், அறைகளும் சொல்லி வருகின்றன.

இது ஒருபுறம் இருக்க மழை தொடர்கிறது. வடமாகாண சபையின் மரநடுகை மாதம் ஆரம்பித்து இருக்கிறது. ஐந்து இலட்சம் மரங்கள் நாட்டுவதை இலக்காகக் கொண்டு இருக்கிறது இம்மாதம். இது தமிழர்களைப் பொறுத்தவரையில் சாதாரணமான மாதமல்ல, முக்கியமான மாதம் கடந்த காலங்களில் பல எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திய மாதம். இது ஆயுதப் போராட்டம் மௌனித்துவிட்ட காலப்பகுதி, இந்தக் காலகட்ட நகர்வியல் பல விடயங்களை எமக்குச் சொல்ல எத்தனிக்கிறது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட, கிழக்கு மாகாண எம்மக்களின் வாழ்வியல் நன்கு மாறிக் காணப்படுகிறது. இங்கு இடம்பெறும் அசைவியக்கத்தை ஆழமாக நோக்குவோர் புரிந்து கொள்ளக் கூடியதுதான், இந்த அசைவியக்கம் தனியே தமிழர்சார் பண்பாட்டு நகர்வுடன் இடம்பெறுவது அல்ல. மாறாக இங்கு ஒட்டுமொத்த இனத்தின் பண்பாட்டுக்கோல நகர்வுடன்தான் எம் இனம் நகர்ந்து கொண்டு இன்றைய கட்டத்திலே இருக்கிறது.

கோயில்சார் பண்பாட்டு அசைவியக்கத்தோடு நின்ற சமூகம் இன்று ஒரு சடுதியான மாற்ற வெளியுடன் புறத்தே வெளிநகர்வதைக் கண்டுகொள்ள முடியும். எம் வாழ்வியலில் யுத்தகளம் அகற்றப்பட்டதிலிருந்து காணாமல் போதல்கள், குண்டுகள், ஊரங்குச்சட்டம், வெள்ளைவான் என்பன பற்றிய ஊடாட்டங்கள் நாளுக்கு நாள் மக்களின் அன்றாட சிந்தனையிலிருந்து மறக்கப்பட்டு (அல்லது) மறக்கடிக்கப்பட்டோ அகன்று வருகிறது. இந்தக் காலகட்டத்தோடு தமது கால்களை ஆழ ஊன்றுவதை நிதி நிறுவனங்கள், வங்கிகள் என்பன மேற்கொள்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது.




இது வெறுமனே பார்க்க சாதாரண வாழ்வைக் காட்ட நகர்வுபோல் இருந்தாலும் இது ஒரு நீண்டகால மேலெழுகை நோக்கோடு செய்யப்படும் நகர்வியல் ஓட்டமாகும். கணவன் வெளிநாட்டில் இருக்கிறான். பணத்தை அனுப்பிவிட்டேன் என்று தொலைபேசியில் தெரிவிக்கின்றான், அவள் புறப்படுகிறாள், வங்கி வருகிறாள் அல்லது நிதி நிறுவனம் சென்று பணம் எடுக்கிறாள். பணத்தை என்னசெய்வது சேமித்துவிட்டு வீடு திரும்புவதா இல்லை.

இந்தப் பணம் செலவிடப்படல் நிகழ்கிறது. இங்கு இந்த வாழ்வியல் நகர்வு சற்று ஆழமாக நோக்கப்பட வேண்டியது உதவி ஒத்தாசைக்கு, குடும்ப உறவுக்கு இருக்க வேண்டிய கணவன் வெளிநாட்டில், இங்கு பணம் இருக்கிறது. உதவி ஒத்தாசைக்கு, மானுட இச்சை தீர்க்க ஒரு துணை அவளுக்குத் தேவைப்படுகிறது. இந்த தேவை இடைவெளியை நிரப்பும் காலகட்டம் இன்று தோன்றியுள்ளது. இது சும்மா கூறும் கதை அல்ல, இது இந்த நகர்வியலை ஆழ, அமர சமூகத்துடன் சமூகமாக அவதானித்ததன் வழியாக வந்த உண்மை வெளிப்பாடு.

இங்கு யாழ்ப்பாணத்தை ஒரு கேந்திர நிலையமாக மாற்றுவதில் உள்ள முனைப்பு அதிகமாகத் தென்படுகிறது. மக்களின் நுகர்வுக் கலாசாரத்தினை பேருக்கத்தின்பால் அதிகரிப்பதன் ஊடாக பண்பாட்டுப் பேருக்கத்தில் இருந்து அவர்களின் கவனச் சிதறலை ஏற்படுத்துவதன் ஊடாக மக்களின் பண்பாட்டுத் தளத்தை சிதைப்பதன் ஊடாக அடையாள உடைப்பை மேற்கொள்ளும் நிகழ்ச்சி நிரல் உள்வாங்கப் பட்டிருக்கிறதா என்ற கேள்வி எம்முள் இயல்பாக எழுகிறது. இன்று ஆளும் அரசு புதிதாக ஆட்சிக்கதிரையில் ஏறி இருந்தாலும் ஒருபுறம் மகிந்தவின் நிலக்கீழ் மாளிகைகள் பற்றிய செய்திகள், புகைப்படங்கள் என்பன வெளியிடப்பட்டுள்ளதன் ஊடாக தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்ற கோசங்கள் வாயிலாக மகிந்ததரப்பு எதிர்ப்பு முன்வைத்தது மட்டுமின்றி அவர்களது வாய்களை அடக்க அரசு கருத்து வெளியிட்டு மடக்கினாலும் தொடர்ந்து அவர்களது குரலை அடக்கி அரச இயந்திரத்தினை இயக்க வேண்டுமாயின் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடகிழக்கில் மீண்டும் ஈழம் பற்றி புரட்சிசார் சிந்தனைகள் மேலெழக் கூடாது என்கின்ற பிரதான சவால் அரசிற்குண்டு. இந்த வேளையில் வடக்கு வாழ் மக்களை திசை முகப்படுத்துவதன் வாயிலாக ஏனைய தமிழர்களையும் வழிக்கு கொண்டுவர முடியும் என்ற வாதம் அரசிற்கு இல்லாமல் இல்லை.

மனம், பண்பாடு இருப்பியலை உறுத்திப்படுத்துமானால் எவ்வளவு பணம் இருந்தாலும் இந்த இனத்தை உடைத்துவிட முடியாது. ஆனால் இவ்வளவு காலமும் ஆட்சியில் இருந்த அரசுகளால் தமிழ் மக்களை எவ்வளவு முயற்சி செய்தாலும் மாற்ற முடியவில்லை. இப்பொழுது அரசு மக்களை குறிப்பாக இளைஞர்கள் எழுச்சி பெறாமல் இருப்பதில் அவதானமாக இருக்கிறது. ஜே.வி.பி.யின் தலைவர் அண்மையில் றோ தொடர்பான கருத்தை முன்வைத்திருந்தார். இதன் இயங்கியல் உண்மைத்தன்மை பற்றி நாம் பேச எத்தனிக்க வில்லை. ஆனால் வடபுலத்து மக்களின் வாழ்வியல் நகர்வோட்டத்தை அவதானிப்பதில் பெரும்பங்கு இந்தியாவுக்குண்டு. அது அரசியல் நலன்கருதி வடபுலத்து பண்பாட்டு உடைவு ஏற்படுத்தி இன அடையாளக் குறைப்பை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கடமை இந்தியாவிற்கு


**இசைக்குழுக்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் மக்கள் சொற்பொழிவிற்கு கொடுப்பதில்லை. தாம் அழிய தாமே உடந்தையாக இருப்பது எந்த இனம் என்றால் அது தமிழினமாகத்தான் வரலாற்றில் பதிபடப் போகிறது.**

இருக்கலாம்....?

அபிவிருத்தி என்ற பெயரில் துரிதமான வளர்ச்சி முன்னெடுப்புக்கள், விற்பனை பொருளாதாரம் மிக துரிதகதியில் காணப்படுகின்றன. சன அடர்த்திக்கும் பரப்பிற்கும் போதுமான அளவைக் காட்டிலும் வங்கிகளின் பெருக்கம் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளது.

பணப்புழக்கம் தாரளமாக வர்க்கத்திடம் உள்ளது. இவ்விடத்தில் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் காலநிலை மாற்றம் தொடர்பான அறிக்கையில் வந்த கூற்றை இங்கு கூறுவது பொருத்தம் என கருதுகிறேன். அதிக பணப்புழக்கம், பொருள்கொள்வனவில் ஈடுபட வைத்து, பேராசைக்கு இட்டுச் செல்வதன் ஊடாக சுயநலம் மிகுகிறது. இனம்சார் சிந்தனை உடைகிறது. அடையாளம் உடைகிறது அரசு எதிர்பார்த்த நகர்த்தல் இதுதான் என்பது வெளிப்படை.

இனிவரும் காலங்களில் தமிழரிற்கு கிடைக்கும் தீர்வு அரசிடமிருந்து கிஞ்சித்து பெற்றுக்கொள்ளும் நிலைக்கு தமிழரை பலம் குறைந்த நிலைக்கு மாற்றுவதாக ஒரு நீண்டகால இலக்கு. இதற்கு சம்பந்தமானவரும் சுமந்திரரும் ஏலவே தலை ஆட்டிவிட்டது. அனைவரும் அறிந்த உண்மை. இசைக்குழுக்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் மக்கள் சொற்பொழிவிற்கு கொடுப்பதில்லை. தாம் அழிய தாமே உடந்தையாக இருப்பது எந்த இனம் என்றால் அது தமிழினமாகத்தான் வரலாற்றில் பதிபடப் போகிறது. என்ன செய்வது, பண்பாட்டு உடைவினூடாக இனத்தை உடைப்பது என்ற சாராம்சத்தைக் கூறும் ஆமர்த்தியா சென்னின் கருத்து நினைவிற்கு வருகிறது. என்ன செய்வது இனி எம்மினத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற தீர்க்கரிசி செல்வா சொன்னதில் என்ன பிழை இருக்கிறது....?



**ச.திருச்செந்தூரன்,**
**திருகோணமலை.**

# சுத்தமா மறந்து போறியள்?

“சீக்... இந்த யூசீக்காறரட்ட எத்தின தரம் சொல்லியாச்சு... வந்துபாக்கிறாங்களோபார்.”

“அவங்கள் மறந்திடு வாங்களப்பாம்... இண்டைக்கொருக்கா நேரில போய்ப்பாக்கப்போறன்”

‘பாத்ரூம் பைப் அடைச்சுப் போச்சு கக்கூசுப் பைப்பும் அதோடதான் சேந்து வருது அதால.. ரூமுக்க தண்ணிதேங்கிது இழுக்கப் பஞ்சிப்படுது. ஒருக்காப்பாக்கச் சொல்ல கவனிக்கிறியளில்லயம்”

“ஏன் நேற்று ஒரு பெடியன அனுப்பினமே...”

“அப்ப நாங்கள் கோமிலுக்குப் போமிட்டம் போல... ப்ளீஸ் இண்டைக்கொருக்கா அனுப்பிவிடுறியளோ..?”

“ஓ... சொறி... இண்டைக்கு அவனுக்கு பஸ்ஸ்ராண்ட பக்கம் டியூட்டி வரமாட்டான்... அது ஒரு பெரிய பிரச்சனையில்லை எப்பன் மேல் மூடியக் கழட்டிப்பாருங்க ஏதும் சோப்புக் கடதாசியள் போய் உள்ளுக்கஅடைச்சிருக்கும்”

“உவ்வேக்... நானோ? நான் கௌரிநோன்போட உதுகளுக்க கை வைக்கச் ‘சீக்... ஆரையாவது உடன அனுப்புங்க..”

“ம்... என்னங்கோ செய்யிறது இஞ்சயும் ஆள் பற்றாக்குறை... ம் பாப்பம் காலம டியூட்டி முடிச்சிட்டுவாற ஆரையும் பிடிச்சு அனுப்பிவிடுறன். நீங்கள் ஆரும் வீட்டில நிக்கவேணும்.”

“கலோ! நான் புளியங்குளத்திலயிருந்து கதைக்கிறன். எங்கட வீட்டடியில சாக்கடை தேங்கி நிக்கிது அத ஒருக்கா கிளியர் பண்ணிவிடுங்க”

“ஙா... ஓம்பாக்கிறம்”

மழைக்காலமும் வந்திட்டுது இந்த மழை வெள்ளம் ஒருபக்கம் வடியமாட்டாம ரோட்டில தேங்க, உள்ள கழிவு வாய்க்காலுகளும் தேங்கத் துவங்கிவிடும் ஒரு தடவை தெருவில இறங்கி நடந்து போயிற்றுவந்தா தெருவில காணுற அரியண்டங்கள் சொல்லிமாளாது... பத்தாக்குறைக்கு நாய், பூனை, மாடுகள் எல்லாத்துக்கும் தெருத்தான் ரொய்லெட்... படுக்கையறை, இந்த தெருவிலயே படுத்து காதலிச்சு கலியாணப் பேச்சுவார்த்தை அடிபிடி கலியாணம் பிள்ளைப் பெறு எல்லாத்தையும் நடத்தி முடிக்குதுகள் மனிசர்மக்கள் இரவில நடமாடுறதே கஸ்டம்.

இது போதாதெண்டு அத்தாப்பத்தியத்தில வீடுகளைக் கட்டி வச்சிட்டு அதுக்கவாற குப்பை கூழங்களையும் கழிவுத் தண்ணீ வாய்க்காலுகளையும் நைசா ரோட்டில திருப்பி விடுற பிரசையளும் எங்கட ஊருக்க குறைவில்லை. அட பாவியள் குலைய வெட்டிப்போட்டு தெருவில கிடக்கிற கானுக்க வாழைக்குத்தியள்ப போட்டா... பெரிய மழை வர அது முக்கித்தக்கி நகர்ந்து போய் தண்ணிப் போக்குகளுக்க தலையைக் குடுத்திட்டு, அங்காலும் போகமாட்டாம இஞ்சாலயும் வரமாட்டாம அடைச்சுபோகும் எண்டது தெரியாமயே செய்யினம். ஏன் வளவுக்க நட்ட குரோட்டன் செடியள் கப்பாத்துப் பண்ணி அதையும் ‘தூக்கிப்போடுதுகள்தெருவில...’



அதுகும் பத்தாதெண்டு... பிளாஸ்டிக் போத்தலுகள், பியர்டின்னுகள் பொலித்தீன் பையள் எல்லாந்தான் தண்ணியிலபோகுது.

நகரம் எண்டதுக்கும் நரகம் எண்டதுக்கும் பெரிய வித்தியாசமில்லை. நடு எழுத்தை இடம் மாத்திவைச்சாப் போதும், நகரங்கள் பெரும்பாலும் நரகமாகத்தான் இருக்கின்றன. இந்தநகரங்களின் சுத்தம் நகரசபைத் துப்புரவுத் தொழிலாளர்களை நம்பித்தான் இருக்கு... நாலுநாளைக்கு அவன் லீவு போட்டிட்டா நாறிப்போகும்.

தன்னை வாழவைக்க அழுக்கைச் சாப்பிடுகிற மீனையும் காகத்தையும் கூட கவிஞன் பாடுவான் ஆனா தன்ர சிறு ஊதியத்துக்காக இந்த அழுக்கையெல்லாம் அள்ளிக் கொட்டுற மனிதனை நாங்கள் எவ்வளவுக்கு மதிக்கிறோம். அவனை நடுவீட்டுக்குள்ள வைக்க எத்தனை பேர் தயாரா இருக்கிறம் இல்ல தெருவில சந்தையில கண்டா நட்போட உரையாடுறமா? இல்லநம்மவீட்டு அழுக்கை அள்ளிப்போட வந்தவனுக்கு நாம் மதிப்பளிக்கிறோமா? குறைஞ்சபட்சம் அவனை மனிதனாக மதிக்கிறோமா?

நாம் மட்டுமல்ல அவனுக்கு கட்டளை போடுற மேலதிகாரிகளில் எத்தனை பேருக்கு அவயட பிரச்சினை விளங்கியிருக்கு.

அண்மையில வவுனியா மாவட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பற்றி நகரசுகாதார உத்தியோகத்தர் குறிப்பிடும் போது ஒரு திடுக்கிடும் தகவலைத் தந்தார். அங்கு வேலைபார்க்கும் சுத்திகரிப்புத் தொளிலாளர்களில் மூன்றில் ஒருபங்கினர் நாற்பதுகளின் நடுவிலான வயதிலுள்ளவர்கள் இவர்களிடம் கடினமான வேலைகளைக் கொடுக்க முடியவில்லை காரணம் அவர்கள் நோய் வாயப்பட்டவர்களாகவும் இயலாமையுடையோராகவும் உள்ளனர் அதற்காக அவர்களை வேலையிலிருந்து நிறுத்தவும் முடியாது எனவே இருப்பவர்களை வைத்தே சமாளிக்கிறோம் நகரத்தில் பஸ்தரிப்பு நிலையம் பஜார்வீதி ஆஸ்பத்திரி சுற்று வட்ட வீதி அவை தினசரி பார்க்கவேண்டிய இடங்கள். ஏனைய பகுதிகளுக்கு வாரம் ஒருமுறைதான். குப்பைகள் அகற்ற முடியும் என்றார்.

ஒரு நல்ல மனிசன் அந்த ஏலாத ஆக்கள வைச்சுக் கொண்டு ஏன் சம்பளம் குடுக்கோணும் புது ஆக்கள சேர்க்கலாமே எண்டார். அட பாவியளா அந்த ஏலாமை எப்பிடி வந்தது எண்டத யோசிக்காம... இவங்கள நன்றி கெட்டவங்கள் எண்டு சொல்லாம வேறஎன்ன சொல்லுறது.

எந்த முதலாளியும் ஒருவனுடைய ஆரோக்கியத்தை குறைக்கிற அல்லது இழக்கிற மாதிரியான வேலையை தொழிலாளிக்கு குடுத்து அதால அவருக்கு இழப்பு ஏற்பட்டா... அந்த முதலாளிக்கு எதிராநட்ட, ஈடுகோர பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கு உரிமையுண்டு எண்டது சட்டம் . அந்த உரிமையக்கூட இந்த ஏழைத்தொழிலாளி பெறமுடியாது. காரணம் அவன் மதுபானப் பாவனையால தான் உடம்பைக் கெடுத்துக் கொள்ளுறான்.

அண்மையில நகரசபையில நான் அவதானிச்சவிசயம். ஒரு நவ நாகரீகப் பெண்மணி தனதுதுணையுடன் வந்து ஒரு முறைப்பாட்டைக் கொடுத்தார்.

விபரமாவது,

“நேற்றுநீங்கள் அனுப்பின உங்கட ஊழியன் வெறியில வந்தான். நான் வேலையப் பாக்கப் போகமுடியேல்ல அடிக்கடி கெட்டவார்த்தை பேசினான், அவங்களுக்கு டிசிப்பிளினக் கத்துக் குடுக்கேல்ல என்ர வீட்டுக்கு குடிச்சிட்டு வந்ததுமில்லாம அவன்ர இடுப்பில் ஒரு குவாட்டர் போத்தலும் இருந்தது.”

“அந்தத் தொழிலாளி வரவழைக்கப்பட்டான். அதிகாரி கேள்வி கேட்டார்.

“என்ன வேலை செய்யப்போனனீர் ?”

“அவயடகக்கூசு அடைச்சிருந்தது. அதைகிளியர் பண்ணப் போனனான் ..”

“அந்த அம்மா ஆரெண்டு தெரியுமோ? அங்ககுடிச்சிட்டுப் போயிருக்கிறாய் ? முறைப்பாடு வந்திருக்கு... எனக்கு இதுக்குபதில் அறிக்கைவேணும் இண்டைக்கே.”

அவன் மௌனமாகப் போனான். அந்த அம்மாதிமிராக எழுந்துபோனார். நான் நினைத்தேன் ‘பெரிய்ய்யய அந்தஸ்தில உள்ளவை கழிக்கும் மலத்திலும் சென்ற் மணம் வீசுமோ?’

பின்ன என்னங்க அவனும் மனிசன் தானே, தாங்கள் கிட்டவும் நிற்க விரும்பாத தங்களால உருவான அழிவை அழுக்கை எந்த நவீன உபகரணங்களும் இல்லாம கையவச்சு கலக்கி அள்ளப்போறவன். தனக்கு அந்த அருவருப்பு தெரியக் கூடாது எண்டதுக்காக கொஞ்சம் தண்ணியடிச்சு கொஞ்சம் மயக்கத்திலதானே செய்யமுடியும். அதுமுடியஅவனும் மற்றவையப் போலதான் கையாலசாப்பிடுறான். தெருவில அரியண்டத்தப் பாத்திட்டே சாப்பிடுறநேரம் நினைவு வந்தா ஓங்காளிக்கிறவை அவனுக்கும் அந்தநேரம் தன்ர வேலைத்தலம் நினைவு வராதோ... அப்ப என்ன செய்யலாம். நீங்களெல்லாம் தூங்கும் போதும் உங்கட அன்றாட வேலையையும் அடுத்தநாள் வேலையையும் நினைக்காம படுக்கிறியளா சாப்பிடுறியளா? அதுபோலத்தானே அவனும்,

இப்பிடிநாள் தோறும் கழிவுகளே வாழ்க்கையா வாழுறவனை, மனிதனா நினைக்கிற பண்பாடு எத்தினை பேருக்கு இருக்கு, ‘அவங்கள் திமிரில அலையிறாங்கள்’ ‘குடிகாரமட்டையள்’ என்றொருவர் சொன்னார். இருக்குந்தானேப்பா ஊரையே சுத்தப்படுத்திறவன் ஆர் லீவு போட்டுப் படுத்தாலும் அசையாத நகரம் இவர்கள் லீவு போட்டா அசையும். வீட்டுக்கு வீடு பதறும்’

அப்படியிருந்தாலும் அவனுக்குரிய பணியையோ பிரச்சனைகளையோ பார்க்கயாரும் நினைப்பதில்லை.

இன்னும் இவர்களை வைத்துத் தொழில் வழங்குநர்கள். வேறு வகையிலான பிரச்சனைகளையும் எதிர் நோக்குகின்றனர். ஒருதொழில் வழங்குநரின் பாறணிப்பு,

‘வவுனியாவில் பாரம்பரியமாக தொழில் செய்பவர்களே தலைமுறை தலைமுறையாக இந்த வேலையைச் செய்கின்றனர். வைத்தியசாலையிலும் நகரசபையிலும் அவர்களே வேலை செய்கிறார்கள் அதுமட்டுமல்ல எல்லோரும் ஒருவருக்கொருவர் உறவினர்களுமாவார்கள். இவர்களது உறவினர்கள் கண்டிப்பகுதியில் இருக்கிறார்கள். அவர்களுக்குள் திருமணம், சாமத்தியச் சடங்கு, செத்தவீடு என்று வந்துவிட்டால் ஒட்டுமொத்தமாக பலர் விடுப்பில் போய்விடுகிறார்கள் ஒன்றும் செய்யமுடியாது, ‘இந்த ஏழைத்தொழிலாளர்கள் தமது சம்பளத்தில் பெரும்பகுதியைக் குடித்தே அழித்து விடு வதால் இவர்களுடைய வீடுகள் எப்போதும் வறுமையாகவே இருக்கின்றன. பெருமளவு சொத்துக்களை சேர்க்க எண்ணுபவர்கள் மிககுறைவு கேளிக்கைகளில் பொழுதையும் பணத்தையும் செலவிடுகின்றனர் கல்விகற்று பெரிய அளவில் பதவிகளுக்காக முயற்சி செய்வதில்லை. காரணம் குறைந்த வயசிலேயே பெற்றவர்கள் நோய் வாய்ப்பட்டு விடுகின்றனர். குடும்பச் சுமை விரைவில் இவர்களைச் சேர்கிறது தொடர்ச்சியாக கிருமிகளுடன் வாழ்க்கை நடத்துபவர்கள் இவர்கள்.

இவர்களுடைய சுமையை மேலும் மேலும் இந்த சமூகமே அதிகரிக்கிறது. குப்பைக்கென வாளிகள் இருக்கும் தொட்டிகள் இருக்கும் ஆனால் அந்த வாளிகளையும் தொட்டிகளையும் சுற்றியே குப்பைகள் வீசப்படுகின்றன. ஏனென்றால் கிட்டப்போக அருவருப்பு அவர்களுக்கு கையுறைகள் வழங்கப்படுகின்றன ஆனால் கால்களுக்கு பாதுகாப்பில்லை இன்னும் கூட நவீனமான கழிவகற்றும் முறைகள் வடக்கு கிழக்கில் எல்லா இடங்களிலும் இல்லை. பொலித்தீன் பைகள், மரம் செடிகள், காட்போட் பெட்டிகள் என்பவை கழிவு வாய்க்காலை இது அடைக்கும் என்றுதெரிந்தும் அவற்றை வாய்க்காலில் போடுவோர் திருந்தவேணும் ஆடு மாடு நாய் வளக்கிறவை அதுகள் இந்தமழைக் காலத்தில நிம்மதியா இருக்கக் கூடியளவில நல்ல கொட்டகையள் வைச்சிருக்கவேணும்.

ஒரு கொட்டகைகூட இல்லாமல் பல மாடுகளை வளர்த்து அவற்றை நகரத் தெருக்களில் உறங்கி மலசலங் கழிக்க வைச்சுட்டு விடியக்காத்தால எழும்பி மாடுகளைச் சாய்ச்சுக் கொண்டே பால்கறந்து விக்கிற பலபேரை எனக்குத் தெரியும். நாய்களையும் தெரு நாய்களாக்கி அவற்றுக்கொரு முடிவு கட்டவேணும்.

இந்த மாரிகாலத்தில சில இடங்களில மனிசரே தெருவில மலங்கழிச்சு வைக்கினம். காணாததுக்கு கடைச்சந்துகளில சிறுநீர் கழிக்கிறவையள் ஏராளம் எங்கயாவது கடையளுக்கு இடையில நடக்கமுடியு தாபாருங்க. விலங்குகளைவிடக் கேவலமா போச்சு மனிசச் சாதி... நாங்கள் வாழுற மண்ணை சுத்தமா வைச்சிருக்க வேணுமெண்டதையும் சுத்தமா மறந்துபோறியள், அதை சுத்திகரிக்க வாறவயை மதிக்க வேணுமெண்டதையும் சுத்தமா மறந்துபோறியள்..

உலகம் எவ்வளவோ மாறிட்டுது வீட்டுக்குவீடு இன்ரநெற்றில உலவினது போய் இப்ப கையிலயே இன்ரநெற்றக் கொண்டு திரியிறம். ஆனா வாழ்க்கை? என்டர் நெற்றுக்கு ஆம் முடிவுக்குள்ளதான் எங்கட பண்பாடு வந்திட்டுது... மாறவேணுமெண்டதையும் சுத்தமா மறந்து போகாதையுங்கோ...

**தமிழ்க்கவி**

# பிரபாகரன் வரலாறு முடிவுக்குள் ஆரம்பம்

திருமேனி வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதிகளுக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவர் மனோகரன் வானொலி இயக்குனராக கப்பலில் கடமையாற்றியவர். தற்பொழுது டென்மார்க்கில் வசிக்கின்றார். மூத்த சகோதரி ஜெகதீஸ்வரி மதியாபரணம அவர்கள் ஐரோப்பாவின் சில நாடுகளில் வாழ்ந்தார்கள். இறுதித் தகவலின் படி தற்சமயம் அவர்கள் இந்தியாவில் வாழ்கின்றார்கள் என்று தெரியவருகின்றது. மூன்றாவது பிள்ளை வினோதினி. இவர் இராஜேந்திரத்தை மணமுடித்தார். தற்சமயம் கனடாவில் வசித்துவருகின்றார்.

பிரபாகரனின் தந்தையார் அவரது 19 ஆவது வயதில் 1943ஆம் ஆண்டு கிளரிக்கல் சேவையில் லிகிதராகச் சேர்ந்தார். அவர் முதன்முதலில் ரயில்வே திணைக்களத்தில் சேவையை ஆரம்பித்தார். அதையடுத்து கிளிநொச்சி, துணுக்காய், வவுனியா, அநுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் பணி புரிந்தார். அவர் படிப்படியாக உயர்வடைந்து மாவட்ட காணி உத்தியோகத்தராக இருந்து, அவரது 58ஆவது வயதில் 1982 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

தந்தை வேலுப்பிள்ளை அரச உத்தியோகத்தர் என்பதால் பல ஊர்களுக்கும் சென்று கடமையாற்றினார். அதனால் பிரபாகரனும் தந்தை சேவையாற்றிய ஊர்களிலே தனது கல்வியைக் கற்று வந்தார். ஆரம்பத்தில் முதல் இரண்டு வருடங்களும் பிரபாகரன் மட்டக்களப்பிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்றார். அதையடுத்து வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரியில் கல்வி கற்றார். ஏழாம் வகுப்பு நிறைவடைந்ததை அடுத்து, அவரது தந்தையார் வவுனியாவிலுள்ள ஒரு பாடசாலையில் சேர்த்து விட்டார். தனது நேரடிக் கண்காணிப்பில் பிரபாகரன் இருக்க வேண்டும் என்ற நோக்கிலேயே அவர் பணிபுரிந்த இடங்களில் எல்லாம் பிரபாகரனுக்கு கல்வி கற்பித்தார். அதையடுத்து மீண்டும் தந்தையார் பிரபாகரனை வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் சேர்த்துவிட்டார்.

பிரபாகரனுக்கு ஆரம்பத்தில் இருந்தே கல்வியில் நாட்டம் ஏற்படவில்லை. வீரபாண்டிய கட்டப்பொம்மன், நெப்போலியன் போன்றவர்கள் மீதும், அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றின் மீதும் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் அவரது சக மாணவர்கள் விளையாட்டுத்துறையில் நாட்டம் காட்டிய போதும், பிரபாகரன் கெற்றப்போல் அடிப்பதில் அக்கறையாய் இருந்தார். அவர் ஓணான், அணில், அறணை, குருவிகளை குறிவைத்து அடிப்பதில் வல்லுனராக இருந்தார்.

அக்காலத்திலேயே அவர் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான சுயபயிற்சிகளில் ஈடுபட்டார் எனக் கூறப்படுகின்றது. நீண்டநேரம் சூரியனைப் பார்த்தவாறே வெயிலில் படுத்திருப்பார். மிளகாய்ச் சாக்குகளை தனது உடம்பில் கட்டிக்கொண்டு படுத்திருப்பார். அவர் தன்னுடைய நகக் கண்களில் தானே ஊசியை குற்றி அந்த வலியை எவ்வாறு பொறுப்பது என மனரீதியான பயிற்சியை எடுத்துக் கொள்வார். சின்னச் சின்னப் பூச்சிகள், யந்துக்களை பிடித்து குத்திக் கொலை செய்து எவ்வாறு எதிரிகளை சித்திரவதை செய்து துனபுறுத்துவது என்ற பயிற்சிகளை தானே எடுத்துக்கொண்டார்.

படிப்படியாக பாடசாலைக்குச் செல்வதைக் குறைத்துக் கொண்டு, யாழ்ப்பாணத்தில் சுற்றித் திரிந்தார். அரசியல் பேசுவார். அவர் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார்.

ஒருமுறை 1972 ஆம் ஆண்டு தங்கத்துரை ஆட்களுடன் ஒரு பனங்கூடலில் வைத்து குண்டு தயாரிக்கும் பொழுது குண்டு ஒன்று வெடித்தது. அப்பொழுது பிரபாகரன் கால் கருகி காயம் ஏற்பட்டது. எனவே தான் அவருக்கு கரிகாலன் என்று பெயர் வந்தது.

1976 ஆம் ஆண்டு மே 5 ஆம் திகதி தமிழ் புதிய புலிகள் என்ற அமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் மாற்றினார்கள். தமிழர் ஐக்கிய முன்னணி 1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு மே 14ஆம் திகதி அதன் முதலாவது மாநாடு அமிர்தலிங்கம் பிறந்த பண்ணாகத்தில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு எஸ்.ஜெ.வி செல்வநாயகம் (ஈழத்துக் காந்தி என்றழைக்கப் படுபவர்) தலைமை தாங்கினார். அந்த மாநாட்டில் தான் தமிழர் ஐக்கிய முன்னணியை, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, சுயநிர்ணயம்



தமிழீழம் என்ற வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் ஒன்றுதான் இளைஞர்கள் ஆயுதங்கள் தூக்கிப் போராட வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது.

அதையடுத்து 1977ஆம் ஆண்டு ஏப்ரல் எஸ்.ஜெ.வி செல்வநாயகம் அவர்கள் காலமானார்கள். 1977ஆம் ஆண்டு யூலை 27ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி செயலாளர் நாயகம் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் தலைமையில் தமிழீழத்திற்கான மக்களின் ஆணையைப் பெற என இத்தேர்தலில் போட்டியிட்டார்கள். போட்டியிட்ட எல்லா இடங்களிலும் வெற்றி பெற்றார்கள். அவ்வாறு வெற்றி பெற்றதையடுத்து கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எம்.கனகரத்தினம் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறினார். அவரது செயலை தமி ழர் ஐக்கிய விடுதலை முனணியினர் வன்மையாக கண்டித்தார்கள்.

அதையடுத்துதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பில் அக்காலத்தில் நிலஅளவையாளராக இருந்தவரும், உமாமகேஸ்வரன் என்று அழைக்கப்பட்ட கதிரகாமப்பிள்ளை நல்லைநாதன் 1977ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்து கொண்டார். அவரே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவராகவும், பிரபாகரன் இராணுவப் பொறுப்பாளராகவும் இருந்தாரகள்.

இவர்கள் இருவரும் 1978 ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி கொழும்புக்குச் சென்று, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த கிழக்கு மாகாண உறுப்பினரான எம் கனகரட்ணத்தை ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துவிட்டார் என்ற ஒரே குற்றத்திற்காக கொழும்பில் நடுவீதியில் வைத்துச்சுட்டனர். அவர் அப்பொழுது உயிர் தப்பினாலும் சில மாதங்களின் பின் உயிரிழந்தார்.

கனகரத்தினத்தின் கொலைமுயற்சியை அடுத்து தமிழ்ப் போராளிகள் கொழும்பையும் தாக்கக் கூடியவர்களாக உள்ளார்கள் என்று அரசு கருதியது. அதையடுத்து துப்பறியும் பிரவைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்ரர் ரிஜபஸ்தியான்பிள்ளை தலைமையில் தமிழ்ப் போராளிகளைச் சுற்றிவளைக்கத் தொடங்கினார்கள். நிறைய சந்தேகநபர்களைப் பொலிசார் சுற்றி வளைத்த பிற்பாடு, நான்கு சந்தேகநபர்களின் படத்தைப் போட்டு விளம்பரம் அடித்து வெளியிட்டனர்.

அந்த நால்வரும் - உமா மகேஸ்வரன், செல்லப்பா நாகராஜன் (முன்னாள் இ.போ.சபையின் லிகிதரும், முன்பு எஸ்.ஜெ.வி.செல்வநாயகத்தின் வாகன ஓட்டுனர்), வாமதேவன் இன்றேல் தனம், சுங்கான் அல்லது கண்ணாடி என்றழைக்கப்படும் பத்மநாதன் ஆவார்கள்.

இவர்களுடைய பெயர்கள், படங்களுடன் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சுவரொட்டிகளை அடித்து இலங்கை பூராகவும் ஒட்டப்பட்டன. அதேநேரம் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன. அந்த நால்வரையும் பிடித்துக் கொடுத்தால் தலைக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் சந்தேகிக்கும் இந்த நால்வரில் ஒருவரான கண்ணாடி என்றழைக்கப்படும் பத்மநாதனை பூநகரியில் வைத்து சுட்டுக்கொன்று விட்டார்கள். பொலிஸ் இன்பெக்ரர் பஸ்தியான்பிள்ளைக்கு உதவியாக பொலிஸ் இன்பெக்ரர் பத்மநாதன் மற்றும் உதவி இன்ஸ்பெக்ரர் பேரம்பலம் ஆகியோரும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அச்சமயம் தான் மடுதேவாலயத்திற்கு அருகிலுள்ள அடர்ந்த காட்டிற்குள் பயங்கரவாதக் குழு ஒன்று ஆயுதப்பயிற்சியில் ஈடுபடுவதாக பஸ்தியான் பிள்ளைக்கு தகவல் கிடைத்தது. அந்தத் தகவலை அவர் வேறு யாருக்கும் வெளியிடவில்லை. அதையடுத்து, அவர் உதவி இன்ஸ்பெக்ரர் பேரம்பலம், பொலிசாரான பாலசிங்கம் மற்றும் வாகன ஓட்டுனர் சிறிவாதன ஆகியோருக்கு எந்த நேரத்திலும் பயங்கரவாதிகளைத் தேடிச்சென்று அழிக்கத் தயாராக இருக்குமாறு உத்தரவு இட்டார்.

— அரச கேசரி —

1978ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதி நள்ளிரவில் பஸ்தியான்பிள்ளையின் உத்தியோகபூர்வ வாகனமான பயேறோ – 404 (Peugeot-404)ல் தங்களுடன் மெசின்கண்கள், துப்பாக்கிகள், றிவோல்வர்கள், றைபிள்கள் மற்றும் பிஸ்ரல்கள் ஆகிய பயங்கர ஆயுதங்களைக் கூடவே எடுத்துச் சென்றனர்.

ஆனால், அவர்கள் ஏப்ரல் 7ஆம் திகதி மறுநாள் அதிகாலையில் இந்தப் பயங்கரவாத போராளிகள் மறைந்திருப்பதாகக் கருதிய இடத்தை அடைந்தார்கள். முருங்கன் – மடு வீதியில் ஒரு கரையில் காரை நிறுத்திவிட்டு பார்த்தபோது ஒரு ஒற்றையடிப்பாதை காட்டினுள் செல்வதை அவதானித்தார்கள். அவர்கள் கிட்டத்தட்ட சரியான இடத்தை அடைந்ததாக தெரியவந்தது. சிலமீற்றர்களுக்கு அப்பால் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர்களான உமாமகேஸ்வரன், நாகராஜா, செல்லக்கிளி, சிவகுமார், ரவி, கணேஸ்ஐயர், இன்னும் சிலரும் தங்கியிருந்தார்கள்.

ஆனால் பிரபாகரன் மட்டும் அங்கில்லை. பலர் இந்தப் பிரச்சினையின் போது பிரபாகரனும் கூடவே இருந்தார் எனத் தவறான தகவல்களை வெளியிட்டு வருகின்றார்கள். அந்தக் காலத்தில் காய்ச்சல், தடிமன், இருமல் போன்ற பிணியினால் பீடிக்கப்பட்டு பிரபாகரன் விஸ்வமடுவில் ஒரு போராளியின் வீட்டில் தங்கியிருந்தார் என்பது தான் உண்மை.

பஸ்தியான் பிள்ளை கோஷ்டி காட்டுக்குள் வருவதை ஒரு சடைத்து உயர்ந்து வளர்ந்திருந்த மரத்தின் மேலிருந்து சுற்றுச் சூழலை அவதானித்துக் கொண்டிருந்த உமாமகேஸ்வரனும், நாகராஜனும் கண்டார்கள். மற்றவர்கள் அங்கிருந்த குடிசையில் தங்கியிருந்தார்கள். இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், காட்டுக்குள் பாழடைந்த வீதியில் ஒரு வாகனம் மெதுவாக ஊர்ந்து வருவதை நாங்கள் கண்டோம். அந்த வாகனம் வீதியின் முடிவில் ஒற்றையடிப்பாதையருகில் வந்து நின்றது. சந்தேகத்துக்கிடமான வாகனம் ஒன்று வருவதாக நாங்கள் குடிசையில் இருந்தவர்களிடம் அறிவித்தோம். வருபவர்களைச் சமாளிக்கும் பொறுப்பை செல்லக்கிளி ஏற்றுக்கொண்டார். அப்பொழுது வண்டியிலிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்ர் பஸ்தியான்பிள்ளையும், உதவி இன்ஸ்பெக்ரர் பேரம்பலமும் இறங்குவதைக் கண்டோம்.

அவர்களைப் பார்த்தவுடன் எமது இரத்தம் எல்லாம் உறைந்துவிட்டது, என்று உமாமகேஸ்வரன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார். அந்த வடுவாட்கள் இங்கேயும் வந்துவிட்டார்கள் என்று உமாமகேஸ்வரன் நாகராஜனிடம் கூறினார். அதேநேரத்தில் வருபவர்களின் விபரம்பற்றி செல்லக்கிளியிடம் தெரிவித்தார்கள். செல்லக்கிளியும் அவர்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்.

பொலிசாரால் இதுவரை இனம்காணப்படாத இருவரை பஸ்தியான் கோஷ்டி வரும் அந்த ஒற்றையடிப் பாதையால் அனுப்பிவைத்தார். அவ்வாறு சென்றவர்கள் ஒருவர் சாரமும், மற்றவர் அரைக்காற்சட்டையும் அணிந்திருந்தார்கள். பார்ப்பதற்கு அவர்கள் தோட்ட வேலை செய்பவர்கள் போல் தோற்றமளித்தார்கள். அவர்கள் ஒற்றையடிப் பாதையால் சென்றுகொண்டிருந்த பொழுது, எதிரே வந்த பஸ்தியான் பிள்ளையும், மற்ற பொலிசாரும் "நீங்கள் யார்? எங்கு செல்கின்றீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு அவர்கள் "நாங்கள் தோட்டத்தில் வேலை செய்யும் கூலியாட்கள்," என்றார்கள். "நீங்கள் இங்கு கள்ளமரம் தறிக்க வரவில்லைத்தானே?" என்று பஸ்தியான் பிள்ளை அதட்டலுடன் கேட்டார். "இல்லை," என்றார்கள்.

"அப்படியென்றால் ஏன் நீங்கள் காட்டினுள்

(தொடர்ச்சி 23 இல்......)

## ஞான பீட விருது பெற்ற அமரர் அகிலனின் பார்வையில் லங்கா ராணி

1977 ஆகஸ்டில் இலங்கையில் இனக் கலவரம் நடந்ததல்லவா? அதில் பாதிக்கப்பட்ட 1200 தமிழ் அகதிகளைச் சுமந்து கொண்டு 'லங்கா ராணி' என்ற கப்பல் கொழும்புத்துறை முகத்திலிருந்து புறப்பட்டு, தெற்கு நோக்கி வந்து, இலங்கைத் தீவைச் சுற்றிக் கொண்டு, வடக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு செல்கிறது. கப்பல் கொழும்பில் புறப்படுவதுடன் தொடங்கும் கதை, இரண்டு நாட்களில் பருத்தித்துறையைச் சென்றடைவதோடு முடிகிறது.

இது கற்பனைக் கதையல்ல. முற்றிலும் உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட உயிர்த் துடிப்புமிக்க கதை. இரண்டே நாட்களில் நடக்கும் கதையைப் போலத் தோன்றினாலும், இதில் ஆங்காங்கே 2500 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் உள்ள வரலாற்று நிகழ்ச்சிகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்பு இலங்கை எப்படி இருந்தது? விடுதலை பெற்ற பிறகு– ஏன் 1958இல் ஒரு பயங்கரமான இனக்கலவரமும், பிறகு 1977 ஆகஸ்டில் ஓர் இனக்கலவரமும் அங்கே ஏற்பட்டன. கலவரங்களின் விளைவுகளை மறந்து தமிழர்களும் சிங்களவர்களும் இனி எதிர்காலத்தில் அங்கு இணைந்து வாழ முடியுமா? இவை போன்ற பல அடிப்படைப் பிரச்சினைகள் இந்த நாவலில் அலசி ஆராயப்படுகின்றன.

இந்த நூலின் ஆசிரியர், அருளர், வெறும் உணர்ச்சித் துடிப்புமிக்க இளைஞராகத் தோன்றவில்லை. காரிய காரணங்களை மிகவும் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறார். நாட்டு நடப்பைக் கூர்ந்து நோக்கியிருக்கிறார். வகுப்புக் கலவரங்களுக்குள்ள அடிப்படைக் காரணம், இந்த அரசியல் அமைப்பு – இதன் அரசியல் கட்சிகள் –தேர்தலில் இன வெறியைத் தூண்டிவிட்டு, மறு இனத்தைப் பகைக்கச் செய்து ஓட்டு வாங்கும் முறை என அவர் சான்றுகளுடன் கூறும்போது, நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

சரவணன், குமார், தேவன் மூவரும் கொழும்பு இந்துக் கல்லூரி அகதிகள் முகாமில் தொண்டர்களாகப் பணியாற்றிய இளைஞர்கள். அவர்களுடன் கப்பலில் ஒரு வெள்ளை வேட்டி இளைஞனும் சேர்ந்து கொள்கிறான். இவர்களோடு பலதரப்பட்ட வாழ்க்கை நிலையில் உள்ள தமிழ் அகதிகளும் கப்பலில் வருகிறார்கள். கலவரங்கள் எங்கெங்கே கண்முன்னே நடைபெறுபவை போல் வருணிக்கப்படுகின்றன.

இளைஞர்களின் உரையாடல்களின் வாயிலாகவே காரிய காரணங்கள் நமக்கு விளக்கப்படுகின்றன.

1958இல் நடந்த முதல் கலவரத்தை அடுத்து 1961இல் நான் இலங்கைக்குச் சென்றிருந்தேன். அதற்கு முன்பாக யாழ்ப்பாணத்துத் தமிழர்கள், தோட்டங்களிலே வேலை செய்த இந்தியத் தமிழர்களிடமிருந்து பிரிந்து, உயர்ந்தும் ஒதுங்கியும் வாழத் தலைப்பட்டது மல்லாமல் தொழிலாளர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பவும் காரணமாக இருந்தார்கள் எனக் கேள்வியுற்றேன்.

இந்தப்போக்கு அவர்களையே மிகச் சிறுபான்மையோராக மாற்றிவிட்டது. இப்போது தமிழர்களிடையே வேற்றுமை குறைந்து வருவதாகத் தெரிகிறது. இலட்சிய ஆவேசங் கொண்ட புதிய தலைமுறை இளைஞர்கள் அங்கே தோன்றியிருக்கிறார்கள்.

அண்மைய வரலாற்று நிகழ்ச்சிகள் நிறைந்த ஓர் அற்புதப் படைப்பு இது. ஈழத்து விடுதலைப் புரட்சியாளர்களின் சிந்தனையும் செயலும் சரியானவைதாமா என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்கலாம்.

ஆனால் அவர்களை அப்படி உருவாக்கிவிட்ட பின்னணி நிகழ்ச்சிகளை நம்மால் மறந்துவிட முடியாது.

படித்து முடித்த பின் நம்மை உணர்ச்சி வயப்படுத்தும் நாவல் இது, சிந்திக்கச் செய்யும் நாவல் இது" செயற்படத் தூண்டி ஒரு நல்ல முடிவுகாணும் உந்துதலை ஏற்படுத்தத் தூண்டும் நாவல் இது.

அமுத சுரபி

# லங்கா ராணி

அருளர்

ஈழம் புரட்சிகர அமைப்பான ஈரோசை 1975 ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு அருளர் என்று அழைக்கப்படும் ஏ.ஆர்.அருள் பிரகாசமும் ஒரு வகையில் காரணமாக இருந்தவர்.

இவர் ரஷ்யாவிலுள்ள மக்கள் சிநேக பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார். அதுமட்டுமன்றி கலி அருள்பிரகாசம், மாதங்கி "மாயம்" அருள்பிரகாசம், சுகு அருள்பிரகாசம் ஆகியோரின் தந்தையுமாவார்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது கொழும்பில் இருந்து 1200 தமிழ் அகதிகளைச் சுமந்தவாறு காங்கேசன்துறை ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்த்தது "லங்கா ராணிக்" கப்பல்.

அந்தக் கப்பலில் வந்தவர்களை வைத்தும் அன்றைய அரசியல் நிலவரத்தைப் பின்னணியாக வைத்தும் லங்கா ராணி என்ற நூலை அருளர் எழுதியுள்ளார்.

தினச்செய்தி வாசகர்களுக்கு அருளரின் நூலை வாரவாரம் தரத் திட்டமிட்டுள்ளோம்.

"நண்பர்களே!.....

"இது ஒரு இனப்பிரச்சினை, இந்நாட்டின் இரு தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினை. இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய தேவை முன்னெப்பொழுதும் இல்லாதவாறு இன்று எழுந்துள்ளது. ஒரு தீர்வு நிச்சயமாகக் கிடைக்கும் விடைபெறுகின்றோம்."

இவ்வாறு குமார் பேசி முடிக்க கூட்டத்திலிருந்து ஒரு குரல் சற்றும் எதிர்பாராத வகையில், "இளைஞர்களே! ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் நல்ல படியாகச் சென்று வாருங்கள்" என்றது.

குமார் மீண்டும் "நன்றி, நன்றி" என்று கூறி சமாளித்துக் கொண்டான். கப்பல் துறைமுகத் தளத்தை விட்டு மெதுவாக விலகத் தொடங்கியது. இடையில் ஒலித்த குரலினால் இளைஞர்கள் வியப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள அங்கு நின்றிருந்த டாக்டர் நற்குணம், "முன்னைநாள் கடற்படைத் தளபதி" என்றார்.

"ஆ! அப்படியா!!... நாங்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லையே?" குமார் ஆச்சரியத்துடன் கூறினான்

இந்நிகழ்ச்சியால் அங்கு நின்றிருந்த மூன்று இளைஞர்களும், டாக்டர் நற்குணமும் லங்காராணியின் இந்த வரலாறுமிக்க பயணத்தின் பொறுப்பு வாய்ந்த பணிகளுக்குத் தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டவர்களனார்கள்.

கப்பல் மெதுவாக நகரத் தொடங்கியது கீழே துறைமுகத் தளத்தில் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர், கடற்படையினர், காவல்படையினர், சாதாரண உடையிலிருந்த சுமார் ஐம்பது சமூக சேவைப் படையினர் தளத்தின் நீளத்திற்கு நின்றுகொண்டிருந்தனர். இதில் இராணுவத்தினரின் மூன்று கவச வாகனங்களும் நிறுத்தப்பட்டிருந்தன. பலர் வாகனங்களில் சாய்ந்தவாறு மேலே இளைஞர்களின் இடத்தை நோக்கிய வண்ணம் நின்றிருந்தனர். இளைஞர்கள் பேசியதை யாரும் எதிர்பார்க்காததால் அசைவின்றி நின்றிருந்தனர். இச்சோக நிகழ்ச்சி அவர்களில் ஒரு சிலரின் மனதைத் தொட்டிருப்பது அவர்களின் பார்வையிலேயே தெரிந்தது.

கப்பலின் மேல்தளத்தில் ஒரு சிலரைத் தவிர வேறு எவரையும் காண முடியவில்லை நேரம் இரவு ஒன்பது மணியாகையில் கொழும்புத்துறை முகத்தினுள்ளே நிறுத்தப்பட்டிருந்த வேற்று நாட்டு கப்பல்களின் மின்விளக்குகள் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தன. "லங்காராணி" துறைமுகத்தின் வெளிவாசலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

திட்டத்தின்படி கப்பல் நாளை மறுநாள் யாழ்ப்பாணத்தைப் போய்ச்சேரும். இருநூறு அடி நீளமான இந்தக்கப்பலில் ஆயிரத்தி இருநூறு தமிழர்கள் இருந்தனர். லங்காராணி சரக்கு கப்பல் ஆகையால் பயணிகள் தங்குவதற்கு எவ்வித பிரத்தியேக வசதிகளும் இருக்கவில்லை. சமூக சேவைப் பகுதியினர், கப்பலில் ஏதோ அவசர அவசரமாக ஏதோ ஒருசில வசதிகளைச் செய்து முடித்திருந்தனர். கப்பலில் முன்னுக்கு இரண்டு பின்னுக்கு இரண்டுமாக நான்கு சாமான் கிடங்குகள் இருந்தன. இவற்றின் அடித்தளத்திற்கு இறங்குவதற்கு மரத்தினால் படிகள் செய்து பொருத்தப்பட்டருந்தன. கப்பலின் முன்பகுதியில் இருந்த கிடங்குகள் ஆழமாக இருந்ததனால் படிகள் செங்குத்தாக இருந்தன. கிடங்குகளின் தளங்களில் பலர் பாய்களை விரித்து இருந்து கொண்டும், அங்கும் இங்குமாகச் சிலர் நின்றுகொண்டும் பேசிக் கொண்டிருந்தனர்.

இவர்களில் அநேகர் இதற்குமுன் கப்பலில் பிரயாணம் செய்யாததாலும், தமது சொந்தப் பிரதேசங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் செல்லப் போகிறோம், உறவினரை காணப் போகின்றோம் என்பதாலும் சிலநாட்கள் அகதி முகாமில் தங்கிய சூழ்நிலை அற்றுப் போனதாலும், இவர்களின் களைப்படைந்த முகங்களிலும் மகிழ்ச்சியே தென்பட்டது.

ஒருவாரத்திற்கு முன் யாழ்ப்பாணத்தில்




நடைபெற்ற களியாட்ட விழாவில் சிங்களப் பொலிஸாருக்கும், சில தமிழர்களுக்குமிடையில் ஏற்பட்ட ஒரு சிறு கைகலப்பு நாடு முழுவதையும் இனக் கலவரத்தில் மூழ்கடித்துச் சின்னாபின்னப்படுத்தியிருந்தது. ஆயிரமாயிரம் தமிழர்களை சொல்லொணாத் துன்பத்திற்கும், பொருட்சேதத்திற்கும், உயிர்சேதத்திற்கும் ஆளாக்கி அகதிகளாக்கியிருந்தது.

சரவணன், குமார், தேவன் மூவரும் கொழும்பு இந்துக் கல்லூரியில் அகதிகள் முகாமில் தொண்டர்களாக பணியாற்றியவர்களாவர்; முன்பே பழகியிருந்தனர். டாக்டர் நற்குணத்தை அரசாங்கம் கப்பலில் வைத்தியராக நியமித்திருந்தாலும், பொதுத் தொண்டில் ஈடுபாடு கொண்டவராகையால் இளைஞர்களுடன் பழகிக் கொள்வதில் அவருக்கு எவ்வித சிரமமும் இருக்கவில்லை. குமார் சட்டக் கல்லூரியில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தவன், வயது இருபத்து நான்கு இருக்கும். தேவன் கொழும்பில் கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருந்தவன், பரீட்சைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில கலவரம் வந்ததனால் பரீட்சையைத் தூக்கி எறிந்துவிட்டு முகாமுக்கு வந்து விட்டான். சற்று உயரமானவன், அமைதி அவனது இயற்கைக் குணம்.

டாக்டர் நற்குணம் கப்பல் புறப்படுவதற்கு மூன்று மணித்தியாலங்களுக்கு முன்பே கப்பலில் ஏறி விட்டார். அங்குள்ள நிலைமைகள் ஓரளவு தெரிந்திருக்கும். கப்பல் கப்டனை சந்தித்து உரையாடுவது நல்லது என நினைத்து இளைஞர்களிடம் தெரிவித்தார். இதனை இளைஞர்களும் ஏற்றுக்கொண்டு படிகளில் ஏறி மேல் தளத்தில் உள்ளே கப்டனின் இருப்பிடத்தை கண்டுபிடிப்பதில் முனைந்தனர். தளத்தில் வேலை செய்து கொண்டிருந்த சிப்பந்திமிடம் விசாரித்ததன் மூலம் கப்டனின் இருப்பிடத்தைத் தெரிந்து அங்கு சென்றனர். கப்பலின் மேல் தளத்தின் வெளியிலேயே கதிரைகளைப் போட்டு அந்த சிப்பந்தி, இளைஞர்களை உட்கார வைத்தான். குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. அதிக வெளிச்சமும் அங்கு இருக்கவில்லை. சிறிதுநேரத்தில் கப்டன் வந்தார்.

டாக்டர் நற்குணம் இளைஞர்களை அகதிகள் முகாமில் பணியாற்றியவர் என்று அறிமுகப்படுத்தி வைத்தார். "நல்லது... நல்லது..." என்று கூறி கப்டன் கதைக்கத் தொடங்கினார்

"எங்களுக்கு இந்தப் பயணத்திற்குத் தயாராகும்படி இன்று மத்தியானம் பன்னிரெண்டு மணிக்குத்தான் உத்தரவு கிடைத்தது. நாங்கள் சிங்கப்பூர் போவதற்குத்தான் தயாராகிக் கொண்டிருந்தோம். நாங்கள் இயலுமானதை செய்திருக்கிறோம். சமூக சேவைப்பகுதியின்ர உணவுப் பொருட்களைக் கொண்டுவந்து வைத்துள்ளார்கள். அவை சமையலறையில் இருக்கின்றன. நாலாயிரம் இறாத்தல் பாண், மரக்கறி, வாழைப்பழம், மா, குழந்தைகளுக்கான உணவுகள், ஆயிரத்து நானூறு பீங்கான்கள், சமைப்பதற்கான பாத்திரங்கள் எல்லாம் இருக்கின்றன, எல்லாமே உங்கள் பொறுப்பு. சமையல் அறையைக் காட்டுவதற்கு உதவியாளை அனுப்புகிறேன். வைத்திய வசதிகளுக்கு இவர், டாக்டர் இருக்கின்றார். வேறு ஏதாவது உதவி தேவையானால் என்னிடம் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று கப்டன் பட படவெனப் பேசி முடித்தார். கப்டன் சிங்களவர் ஆகையால் ஆங்கிலத்திலேயே பேசினார்.

(தொடர்ச்சி 19 இல்......)

# வறுமையால் வாடுபவர்களுக்கு உதவுவதே எனது இலட்சியம்

வடக்கு மாகாணத்தில் வாழும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மூவின மக்களுக்கும் சேவையாற்றுவதே தனது முதல்படி என்கிறார் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் கடந்த மாதம் வடமாகாணசபை உறுப்பினராக பதவியேற்ற சிவக்கொழுந்து அகிலதாஸ். அவர்தினச்செய்திக்காக அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவரது பேட்டி வருமாறு:

**கேள்வி – தங்களின் அரசியல் ஈடுபாடு குறித்து கூறுங்கள்?**

பதில் : 1990 ஆம் ஆண்டில் இருந்து இன்று 2015 ஆம் ஆண்டு வரை எனது சொந்த ஊரான வடமராட்சியிலேயே வசித்து வருகிறேன். கடந்த காலத்தில் நடைபெற்ற யுத்தத்தால் மக்களுக்கு ஏற்பட்ட அழிவு, அவர்கள் இடம் பெயர்ந்து சென்றவேளை பொதுவான சேவைகளை வழங்கி வந்தேன். ஆரம்பத்தில் நெல்லியடியில நான் பலசரக்கு வியாபாரம் செய்து வந்தேன். எனக்கு 12 வயதாக இருக்கும் போதே எனது தந்தையார் காலமாகி விட்டார். அந்த நாளிலிருந்து மிகவும் கஷ்ரப்பட்டு வாழ்ந்து வந்தேன். எனது சொந்த முயற்சியிலேயே இன்று இந்நிலைக்கு வந்துள்ளேன்.

சுனாமி இயற்கை பேரனர்த்த நேரம், யுத்தகாலத்தில் நலன்புரி





நிலையங்களுக்குச் சென்று பல்வேறு உதவிகளைச் செய்தேன். 2009 ஆம் ஆண்டு யுத்தம் நடைபெற்ற வேளை மக்கள் பருத்தித்துறைக் கடலில் வந்திறங்கி நெல்லியடி மத்திய கல்லூரியில் தங்கியிருந்த வேளை அங்கு சென்று அவர்களுக்குத் தேவையான ஐந்து இலட்சம் பெறுமதியான உடுபுடவைகளை வழங்கினேன். இந்தநிலையில்தான் 2013 ஆம் ஆண்டு மாகாண சபைத்தேர்தல் நடைபெற்றது. இதன்போதே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிட்டேன். எமது மக்கள் நாம் அரசாங்க கட்சியில் சேர்ந்து விட்டோம் எனவும், சிங்கள கட்சி எனவும் கூறி வாக்களிப்பதனைத் தவிர்த்துக் கொண்டனர். ஆனால் நாம் பலமானவர்களுடன் சேர்ந்தால்தான் மக்களுக்கான முன்னேற்றத்திற்கு உதவி செய்வார்கள். எமது வடபகுதி மக்களைப் பொறுத்த வகையில் பல குடும்பங்கள் வறுமையிலேயே உள்ளன. எனவே அவர்களுக்கான வாழ்வாதாரம் அபிவிருத்தியைச் செய்ய வேண்டியதேவையுள்ளது. எனவே இவற்றைச் செய்வதற்கு அரசுடன் இணைய வேண்டுமென்பதற்காகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்தேன். இறுதியாக கடந்த மாதம் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினராக இருந்த அங்கயன் இராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினராக தேசிய பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து அவருக்கு அடுத்ததாக ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் அதிக வாக்குகளைப் பெற்றேன் என்ற வகையில் ஜனாதிபதி என்னை வடமாகாண சபை உறுப்பினராக நியமித்தார். நான் கடந்த மாதம் 08 ஆம் திகதி பதவி ஏற்றேன். நான் பதவி ஏற்று ஒரு மாதம் கூட முடியாத காலப்பகுதியிலும் என்னால் இயன்ற உதவிகளை மக்களுக்குச் செய்து வருகின்றேன்.

அந்தவகையில் போராளியாக இருந்து அங்கவீனமுற்று புனர்வாழ்வு பெற்று வந்த முன்னாள் போராளி ஒருவர் என்னிடம் வந்து வீட்டில் 5 குழந்தைகளுடன் தான் மிகவும் கஷ்ரப்படுவதாகவும் போராட்டகாலத்தில் புகைப்படக் கலைஞனாக இருந்ததாகவும் எனவே தனக்கு ஒரு கணனியும், புகைப்படக் கருவியும் வழங்கினால் தனது குடும்பத்தை தன்னால் காப்பாற்ற முடியுமென கூறி உதவி கோரினார். நான் தற்பொழுதுதான் பதவி ஏற்றுள்ளேன். எனக்கு எந்த நிதியும் அரசால் வழங்கப்படவில்லை. அடுத்த வருடம் ஜனவரி மாதமே எனக்குரிய நிதி ஒதுக்கப்படும் எனக் கூறியதுடன் அவரின் குடும்பநிலையைக் கருத்திற்கொண்டு கணனி ஒன்றைத் தருவதாகக் கூறி கடந்த வாரம் அவருக்கு அதனை வழங்கினேன்.

போராளியாக இருந்தாலும் வேறு எவரென்றாலும், வறுமைக்குட்பட்டவர்களுக்கு உதவி செய்வதே எனது நோக்கம். இதில் தமிழ், சிங்களவர், முஸ்லிம் என நான் வேறுபாடு காட்டவில்லை. என்னால் இயன்ற உதவியை வடமாகாணத்தில் மூவின மக்களுக்கும் வழங்குவதே எனது நோக்கம். தொடர்ந்தும் அந்தப் பணி தொடரும்.

**கேள்வி – வடக்கு மாகாண சபை பதவி ஏற்று இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. ஆனால் இந்த சபை பிரேரணை நிறைவேற்றும் சபையாக உள்ளதாக பரவலான குற்றச்சாட்டு உள்ளது. புதிதாகப் பதவியேற்ற உறுப்பினர் என்ற வகையில் இது குறித்து உங்களின் கருத்து என்ன?**

பதில் : நான் ஒரே ஒரு அமர்வுக்குத்தான் சென்றுள்ளேன். மேற்படி கூற்று சரிபோன்றுதான் உள்ளது. அவர்கள் மக்களுக்கான சேவைகளை செய்ய விரும்ப வில்லையா? அல்லது செய்வதற்கு மத்திய அரசு இடங்கொடுக்க வில்லையா? என்பது தெரியவில்லை. வரும் அமர்வுகளில் இவர்கள் பிரேரணை நிறைவேற்றும் போது அந்தப் பிரேரணைகளை செய்ய முடியாது இருப்பின் நிச்சயமாக இவர்களைக் கேட்டு ஏன் இவற்றைச செய்யமுடியவில்லை. இவற்றைச் செய்வதற்கான இடைஞ்சல்கள் என்ன? என கேட்டு உண்மையாக மத்திய அரசுதான் இதற்கு தடையென கூறுவார்களாக இருந்தால் அது குறித்து ஜனாதிபதியுடன் நேரில் கதைத்து இதற்குரிய அனுமதியை எடுத்துக் கொடுப்பேன். அதில் எவ்வித வேறுபாடும் காட்டமாட்டேன். எமது மக்களுக்காக எந்த நேரமும் என்ன உதவியும் செய்யத் தயாராகவே உள்ளேன்.

**கேள்வி – எதிர்காலத்தில் மக்களுக்கான உங்களின் சேவைகள் எவ்வாறு அமையும்?**

பதில் : சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு தொடர்பாகவும் புனர்வாழ்வு பெற்று வந்த போராளிகள் தொடர்பாகவும் கூடுதல் [illegible] எடுக்கவுள்ளேன். [illegible] அடுத்த வருடத்தில் [illegible] வாய்ப்பு தொடர்பாக [illegible] அக்கறை காட்டவுள்ளேன். [illegible] வறுமைக்கோட்டிற்குற்பட்ட குடும்பங்களில் வீட்டிற்கு ஒருவரை அரச உத்தியோகத்தில் இணைப்பதன் மூலம். அவர்களை நல்லதொரு நிலைக்கு கொண்டு வருவதே எனது சிந்தனை ஆகும். வசதி படைத்தோர் மேலும் மேலும் வசதி படைத்தவர்களாகவே செல்கின்றனர். வறுமைப்பட்டவர்கள் மேலும் வறுமை நிலையிலேயே இருக்கின்றனர். வறுமைப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கு பின்னடிப்பதாகவே பலரின் செயற்பாடு உள்ளது. இன்று பலர் கோயில்கள் கட்டுகிறார்கள். பெரிய அடுக்குமாடிக் கட்டடம் கட்டுகிறார்கள். கோயிலைக் கட்டிய பின் பார்த்தால் பூசகர் மட்டுமே அங்கு உள்ளனர். சுவாமி காவுவதற்கு கூட ஆட்கள் இல்லாத நிலையே உள்ளது.

எனவே பொதுமக்கள் பணத்தைத திரட்டி வறுமையை ஒழிப்பதற்கு நல்ல திட்டங்களைத் தீட்ட வேண்டும். எனவே வடக்கில் வாழும் மூவின மக்களிடையே காணப்படும் வறுமையை ஒழிக்க வேண்டும் என்பதே எனது நோக்கம்.

**கேள்வி – வடக்கு மாகாண சபைக்கு புதிதாக நீங்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் உங்களது கன்னியமர்வு எப்படியாக இருந்தது?**

பதில் : கன்னி அமர்விற்கு சென்ற நேரம் நான் சிறுவர் பாடசாலைக்குச் சென்ற ஞாபகமே வந்தது. ஆனால் ஒரிரண்டு மணி நேரம் சென்ற பின்னரே தெரிந்தது நான் ஆண்டு 1, 2 ஐக் கடந்து விட்டேன் என்று. தேர்தல் காலத்தில் கட்சி வேறுபாடு இருந்தாலும் அதுகுறித்து பிரச்சினை இல்லை. பாடசாலைகளிலும் நாம் நண்பர்களாக இருந்தாலும் விளையாட்டுப் போட்டியென வந்துவிட்டால் நண்பன் ஒரு இல்லம், நான் ஒரு இல்லமென இருந்து விளையாட்டில் கலந்து கொண்டாலும் பின்னர் ஒன்றாகவே இருப்போம். அதேபோன்று வடமாகாண சபைத் தேர்தலிலும் நாம் பல்வேறு கட்சிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் தற்போது வடமாகாண சபை என்ற குடும்பத்திற்குள் வந்துள்ளோம்.

எனவே எல்லாக் கட்சிகளும் இணைந்து வடக்கில் மக்களுக்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதுவே எனது கொள்கை. இதில் கட்சி வேறுபாடு, எதிர்ப்புக்கள் இருக்கக்கூடாது. ஆனால் உள்ளுக்குள்ளேயே ஒரே கட்சிக்குள் முரண்பாடுகள் இருப்பது போல் தெரிகின்றன. இதனால் நல்ல விடயங்கள் செயற்படுத்தப்படுவது தாமதமாகும் போல் தெரிகின்றது.

வடமாகாணத்தில் நான் ஒருவனே சுதந்திரக்கட்சியின் வடமாகாண உறுப்பினராக உள்ளதனால் ஜனாதிபதியுடன் பேசி அவற்றை மக்களுக்காகச் செய்வேன்.

**கேள்வி – முஸ்லிம்கள் வடபகுதியில் இருந்து 25 வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்டது இன ஒதுக்கல் என வடமாகாண சபையில்தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் உங்களின் நிலைப்பாடு என்ன?**

பதில் : இவ்வாறான ஒரு தீர்மானம் தற்போது தேவையில்லை. ஏனெனில் இதனை 25 வருடங்களுக்கு முன் சிந்தித்து இருக்க வேண்டும். அதனைத் தடுத்திருக்க வேண்டும். அவர்களை 24 மணி நேரத்தில் வெளியேற்றியது என்பது தவறு. அதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அவ்வாறு ஒரு பிரேரணை வந்தால் அதனை நான் எதிர்ப்பேன். இதனை அவர்கள் அப்போது சிந்தித்திருக்க வேண்டும். காலம் கடந்து இவ்வாறான பிரேரணைகளால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையில் வேண்டத்தகாத பிரச்சனைகளை மீளவும் ஏற்படுத்தி பிரிவுக்கே வழிவகுக்கச் செய்யும்.

நேர்காணல்: வர்சி

# சேர். பொன் இராமநாதன்

# நாவலர் கைகாட்டிய தமிழரின் தலைவர்

சேர்.பொன்னம்பலம் இராமநாதன் இதுவரை இலங்கையில் வாழ்ந்த முன்னணி தேசியத் தலைவர். இவரை மிஞ்சக்கூடிய ஒரு தேசியத் தலைவன் இதுவரை இந்த நாட்டில் பிறந்ததில்லை. இனிமேலும் பிறக்கப்போவதும் இல்லை.

இவர் ஒரு சட்டத்தரணி. பாண்டித்தியம் பெற்ற அறிஞர். தேசாபிமானி. கல்விமான். மதப்பற்று மிக்கப் பெரியார். மொத்தமாகக் கூறுவதாயின். பெரும் திருமகன் என்று கூறலாம்.

இவர் பொன்னம்பலம் முதலியார் செல்லாச்சி தம்பதிகளின் இரண்டாவது புதல்வன். செல்லாச்சியம்மையார் குமாரசாமி முதலியாரின் புதல்வி. இந்த குமாரசாமி முதலியாரே இலங்கையில் உருவாக்கப்பட்ட சட்டசபையின் முதல் தமிழ் பிரதிநிதியாவார்.

திரு.இராமநாதன் கொழும்பில் ஏப்ரல் 14ஆம் திகதி 1851ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு ஒரு மூத்த சகோதரன் முதலியார் பொன்னம்பலம் குமாரசாமி என்ற பெயருடன் இருந்தார். அவர் டிசம்பர் 7ஆம் திகதி 1849ஆம் ஆண்டு பிறந்தார்.

மேலும் இவருக்கு ஒரு தம்பியும் இருந்தார். அவர்தான் சேர்.பொன்னம்பலம் அருணாச்சலம். அவர் செப்ரெம்பர் 14ஆம் திகதி 1853ஆம் ஆண்டு பிறந்தார்.

இவருக்கு இரண்டு மாமன்மார்கள் இருந்தனர். அவர்கள் இருவருமே இலங்கை சட்டசபையின் உத்தியோகபற்றற்ற உறுப்பினர்களாக இருந்தார்கள். மாமனாரான முதலியார் எதிர்மன்னசிங்கி, சட்டசபை உறுப்பினராக இருந்தார். இவரது அடுத்த மாமனார் சேர்.முத்துக்குமாரசாமியும் சட்டசபை உறுப்பினராகவும் இருந்தார்.

இராமநாதன் றோயல் அக்கடமியில் கல்வி கற்றாரா?. தற்பொழுது இக்கல்லூரி றோயல் கல்லூரி என அழைக்கப்படுகிறது. இங்கு கல்வி பயின்றபின், மேற்கல்விக்கு சென்னையிலுள்ள பிறசிடன்ஸ்ஷி கல்லூரிக்கு தந்தையால் அனுப்பிவைக்கப்பட்டார். சில காலம் அங்கு கல்வி கற்று இன்ரர்மீடியேற் கலைப்பிரிவு, (Intermediate Arts) பரீட்சையில் சித்தியடைந்ததையடுத்து பட்டப் படிப்புக்கு அனுமதிக்கப்பட்டார்.

அவரது தமையனார் குமாரசுவாமியும் அவருடன் பிறசிடன்ஷி கல்லூரியில் மேற்படிப்பு படித்துக் கொண்டிருந்தார். இந்த இரண்டு சகோரதர்கள் பற்றியும் கிடைத்த தவறான தகவல்களை அடுத்து, இவர்களது தாய் மாமனாரான சேர்.முத்துக்குமாரசாமி, சகோதரர்களான இருவரையும் அவர்களது பட்டப் படிப்பை நிறுத்தி மீண்டும் இலங்கைக்கு அழைத்து வந்தார்.

அதையடுத்து, மாமனார் சேர். முத்துக்குமாரசாமி அந்த இளைஞர்களின் உயர்படிப்பை தாமே பொறுப்பேற்றார். இராமநாதன் அவர்களை சட்டப்படிப்பு படிக்கும் பயிலுனராக அன்று சட்டமா அதிபராயிருந்த சேர். றிச்சாட் மோர்கனிடம் அனுப்பி வைத்தார். சேர். றிச்சார்ட் மோர்கனே அக் காலத்தில் பிரபலமிக்க சட்டமா அதிபராவார்.

சட்டக்கல்வி பொதுவாக அக்காலத்தில் மூன்று வருடங்கள் தொடர்ந்து படிக்கவேண்டும். ஆனால், திரு.இராமநாதன் அந்தப் படிப்பை இரண்டு வருடங்களில் படித்து முடித்து 1873ஆம் ஆண்டளவில் இலங்கையின் பிரதம நீதியரசராக இருந்த (1860 – 1877) சேர்.எட்வேட் கிறிசீ அவரினால் பரீட்சிக்கப்பட்டார்.

அதையடுத்து 1873ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்எடுத்துக் கொண்டார்.

இளம் சட்டத்தரணியான இராமநாதன் 1820ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை நீதிமன்றங்களில் நடைபெற்ற வழக்குகளை எல்லாம் திரட்டி சட்ட அறிக்கை (Law Reports) ஐ புத்தக வடிவில் சுருக்கி தயாரித்தார். அவர் 1820–1833, 1843 – 1855, 1860 –1862, 1863 –1868, 1872, 1875, 1876, 1877 ஆகிய ஆண்டுகளுக்கான சட்ட அறிக்கைகளைத் தயாரித்தார்.

பழைய தீர்ப்புக்களை எல்லாம் தேடி ஆராய்ந்து அவ்வாறு சட்ட அறிக்கையாக தயாரித்தார். இராமநாதனால் அவ்வாறு தயாரிக்கப்பட்ட சட்ட அறிக்கைகளை கண்ணுற்ற சட்டமா அதிபர் மகிழ்ச்சியடைந்து இராமநாதனைப் பாராட்டினார். இந்த சட்ட அறிக்கையை ஒரு புத்தகமாக இலங்கை அரசு வெளியிட வேண்டுமென சட்டமா அதிபர் சிபாரிசு செய்தார். அதனை ஏற்று இலங்கை அரசு இராமநாதனின் சட்ட அறிக்கையை வெளியிட்டது.

அவரது 23ஆவது வயதில் சட்டத்தரணியாகி, தனது பணியைத் தொடங்கிய பின், 1874ஆம் ஆண்டு அவர் செல்லாச்சி அம்மாளை மணம் முடித்தார். இந்த திருமணம் கொழும்பில் நடைபெற்ற பெரிய சமூகவிழாவாக இருந்தது. இது 56 வார்ட் பிளேஸ் கொழும்பு 7இல், உள்ள இல்லத்தில் சீரும்சிறப்புடனும் நடைபெற்றது.

மானிப்பாயைச் சேர்ந்த பிரபலம் வாய்ந்த தனவந்தர் நன்னித்தம்பி முதலியாரின் புதல்வியே செல்லாச்சி அம்மையார் ஆவார்.

**கே.ரி.இராஜசிங்கம்**

நன்னித்தம்பி முதலியார் பல கப்பல்களுக்கு சொந்தக்காரர் ஆவார். அவர் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தார். அந்த நன்னித்தம்பி முதலியார் இராமநாதனின் குடும்பத்திற்கு மிகவும் நெருங்கியவராவார். அவரது சகோதரியான விசாலாட்சியே இராமநாதனின் பேத்தியாவார். அதாவது முதன்முதல் சட்டசபை உறுப்பினரான முதலியார் குமாரசாமியின் மனைவியாகும்.

அந்த திருமணம், இந்துசமய முறைப்படி நடைபெற்றது. அந்த விவாகத்திற்கு இங்கிலாந்து, ரஷ்யா



ஆகிய நாடுகளின் அரச குடும்பத்தினரும், மற்றும் இராமநாதபுரம் மகாராஜ, தெத்திபுரம் ராஜா, சேர் சலாவை, ஸ்ரீலஸ்ரீ பரமகுருதேசிகர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வீதிகள் எல்லாம் தோரணங்களும், பந்தல்களும் போடப்பட்டிருந்தன. வீதி நெடுங்கிலும் வானவேடிக்கைகள், ஆட்டம், பாட்டம் எல்லாம்

> **பழைய தீர்ப்புக்களை எல்லாம் தேடி ஆராய்ந்து அவ்வாறு சட்ட அறிக்கையாக தயாரித்தார். இராமநாதனால் அவ்வாறு தயாரிக்கப்பட்ட சட்ட அறிக்கைகளை கண்ணுற்ற சட்டமா அதிபர் மகிழ்ச்சியடைந்து இராமநாதனைப் பாராட்டினார். இந்த சட்ட அறிக்கையை ஒரு புத்தகமாக இலங்கை அரசு வெளியிட வேண்டுமென சட்டமா அதிபர் சிபாரிசு செய்தார். அதனை ஏற்று இலங்கைஅரசு இராமநாதனின் சட்ட அறிக்கையை வெளியிட்டது.**

நடைபெற்றன. தம்பதிகள் இராமநாதன் – செல்லாச்சி ஆகிய இருவரும் தேர்வடிவில் அமைக்கப்பட்ட ரதத்தில் யானைகளால் இழுக்கப்பட்டு பவனியாக அழைத்து வரப்பட்டனர்.

1877ஆம் ஆண்டு சேர்.ஜோன் பட் பியர் (Sir.John Budd Phear) பிரதம நீதியரசராக இருந்தார். அதையடுத்து இராமநாதன் அவர்களே சட்ட அறிக்கையின் முதல் உத்தியோகபூர்வ ஆசிரியராக கடமையாற்றினர்.

மூன்று தசாப்தங்களாக இராமநாதனின் குடும்பம் சட்டசபை உறுப்பினாராக இருந்து வந்தது.

அவரது தாய்வழி பேரனான குமாரசாமி முதலியார் (1833 – 1836), அவரது மாமனார் சுவாமிநாதன் எதிர்மன்ன சிங்கி (1845 – 1861) மற்றும் இராமநாதனின் மாமனாரான சேர்.சி.முத்துக்குமாரசாமி (1862 – 1879) – ஆகிய மூவரும் சட்டசபை உறுப்பினர்களாக இருந்தார்கள்.

அந்த சந்தர்ப்பத்தில் மே மாதம் 4ஆம் திகதி 1879ஆம் ஆண்டு சேர். முத்துக்குமாரசாமி அவர்கள் காலமானார்.

அந்தக்காலத்தில் சேர்.முத்துக்குமாரசாமியின் செயலாளராக இராமநாதன் அவர்கள் இருந்தார்கள். சேர்.முத்துக்குமாரசாமியின் மறைவுக்குப்பின் சட்டசபையில் தமிழ்மக்களை பிரதிநிதித்துவம் செய்ய தமிழர் ஒருவரை அன்றைய தேசாதிபதியே நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

வழமையில் உயர்கல்விமான்கள் மற்றும் பெரியார்களின் சிபாரிசுவின் பெயரிலும், பொதுமக்களின் சிபாரிசுவின் பெயரிலும் தான் அவர் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரை நியமிப்பது வழக்கம்.

வெற்றிடமாக இருந்த சட்டசபையில் பிரதிநிதித்துவம் செய்யும் பதவிக்கு அக்காலத்தில் இருவர் போட்டியிட்டார்கள். அதில் ஒருவர் பிலபலமான சட்டத்தரணியும், கல்விமானுமான கிறிஸ்தோபர் பிறிட்டோ ஆவார். அவர் முன்னாள் றோயல் கல்லூரியில் ஆரம்பக்கல்வியைப் படித்து, பட்டப்படிப்பை கல்கத்தா பல்கலைக்கழகத்தில் முடித்தார்.

ஆரம்பத்தில் ஆசிரியராக சிலகாலம் றோயல் கல்லூரியில் பணிபுரிந்தார். அதையடுத்து சட்டத்தரணியாக சித்தியடைந்த பின்னர் உதவி ராணி அப்புக்காத்தாவாக (சட்டத்தரணியாக) இருந்தார். அவர் ஒரு செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு கொடைவள்ளலும் ஆவார்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் மயில்வாகனப் புலவரால் தமிழில் எழுதப்பட்ட "யாழ்ப்பாண வைபவ மாலை," என்ற யாழ்ப்பாண சரித்திர நூலை இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

அந்தக்காலத்தில் 1878, 79ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் கொள்ளை நோயும், வாந்திபேதியும் பரவி மக்கள் கஷ்டப்பட்டபோது பிறிட்டோ கஞ்சித்தொட்டிகளை நிறுவி மக்களுக்கு கஞ்சி ஊற்றும் வேலைகளில் ஈடுபட்டார். அந்த கஞ்சித்தொட்டி மூலம் கஞ்சி ஊற்றும் பணியில் ஆறுமுக நாவலரும் பெரும் பங்களிப்பு செய்தார்.

அப்பொழுது சட்டசபை உறுப்பினர் நியமனம் சம்பந்தமாக நாவலர் ஐயாவின் ஆதரவை பிறிட்டோ நாடினார். ஆனால் நாவலர் ஐயா அவர்கள் சேர்.முத்துக்குமாரசாமியின் மருமகனான இராமநாதன் அவர்களுக்கே தனது ஆதரவை வழங்க முன்வந்தார்.

பிறிட்டோ அவர்கள் கிறிஸ்தவ சமயத்தை சேர்ந்தவர். அக்காலத்தில் இருந்த தமிழ் பத்திரிகை எல்லாம் பிறிட்டோவுக்கே ஆதரவு அளித்தன. ஆனால் இராமநாதனுக்கு ஆதரவு அளிக்க எந்த பத்திரிகையும் முன்வரவில்லை. "உதய பானு," என்ற பத்திரிகை அதன் பின்னர் தான் ஆரம்பிக்கப்பட்டது.

இராமநாதனின் வேட்புரிமையை ஆதரித்து பொதுக்கூட்டம் ஒன்று 22 மே 1879ம் ஆண்டு வண்ணார் பண்ணையில் இருந்த சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டம் சம்பந்தமாக கொழும்பில் இருந்து வெளிவரும் ஒப்சேர்வர் (Observer) பத்திரிகை செய்தியை (29 மே 1879) வெளியிட்டது.

**"தமிழர் ஆசனம்"**

கொழும்பு: ஒப்சேர்வர் மே 29,1879: பிரமாண்டமான கூட்டம் ஒன்று வியாழன் மாலை (22 மே), வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் (சட்டத்தரணி) இராமநாதனே தமிழர் மத்தியிலே சட்டசபைக்கு மிகவும் பொருத்தமானவர் என ஏக மனதோடு தீர்மானிக்கப்பட்டது.

கல்விமான் ஆறுமுக நாவலர் தனது பாடசாலையில் இந்த பிரமாண்டமான கூட்டத்தை நடாத்த அனுமதி வழங்கியது மட்டுமன்றி, மிகவும் காத்திரமான உரை ஒன்றையும் நிகழ்த்தினார். கிட்டத்தட்ட மூவாயித்து ஐநூறு மக்களுக்கு மேல் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பாடசாலை மண்டபம் முழுவதுமே நிரம்பிவழிந்து தற்காலிகமாக போடப்பட்ட பந்தலிலும் மக்கள் குவிந்திருந்தார்கள்.

திரு. விஸ்வநாத பிள்ளை இன்றேல் டி. கரோல் (பிஏமெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி, முன்னாள் இந்தியாவிலுள்ள தஞ்சாவூர் பதிவாளராகக் கடமையாற்றியவர்.) இந்த கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். அவர் பேசும் பொழுது ஆரம்பத்தில் சேர்.முத்துக்குமாரசாமியின் மறைவு எமக்கு எல்லாம் எவ்வளவு பெரிய இழப்பு என்று தான் சொல்லத்தேவையில்லை என்று குறிப் பிட்டார். எல்லோரும் அந்த மறைவை ஆழ்ந்த துயரத்துடன் நோக்கினார்கள். (அவர் சேர். முத்துக்குமாரசாமியின் இழப்புப் பற்றி உணர்ச்சிவசப்பட்டு பேசினார்.)

அதைத் தொடர்ந்து பேசுகையில் சேர்.முத்துக்குமாரசாமியின் இழப்பையடுத்து சட்டசபைக்கு அவரின் வாரிசுவாக ஒருவரை நியமிப்பது பற்றி ஆராயவே இந்த கூட்டம். அது ஒரு சுலபமான காரியமல்ல.

அவரது மருமகன் கொழும்பிலுள்ள சட்டத்தரணி இராமநாதன் தான் சரியான வாரிசு என்று கூறினார். அவர் தான் அதற்கு பொருத்தமானவரா என்று தீர்மானிக்கவே இந்த கூட்டம் என்றும் சொன்னார்.

மேலும், பேச்சாளராகிய எனக்கு (விஸ்வநாதன் பிள்ளை) அவரை சென்னையில் கல்விகற்கும் காலத்திலேயே தெரியும். அங்கே எல்லோருமே அவரை விரும்பினார்கள். அவர் எல்லோரும் மதிக்கின்ற ஒரு பெற்றோருக்கு பிள்ளையாக பிறந்துள்ளார்.

(தொடர்ச்சி 14 இல்......)




# ராணி மகா ராணி

பாகுபலி படத்தில் அனுஷ்கா ராணி வேடத்தில் வந்ததிலிருந்துரசிகர்கள் மத்தியில் ராணிபோலவே வலம் வரத் தொடங்கினார்.
இதையடுத்து "ருத்ரமாதேவி" படத்திலும் சரித்திர கால ராணியாக நடித்தார். அவரைச் சுற்றியே கதை வரும் இந்தப் படமும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.
வரலாற்று பின்னணியில் உருவான இந்த கதைகளுக்காகவே அனுஷ்கா பல்வேறு பயிற்சிகளைப் பெற்றார். கடினமாக உழைத்தார்.
அதற்கு நல்ல பலனும் கிடைத்தது. அடுத்து மீண்டும் அனுஷ்கா ராணியாக நடிக்க இருக்கிறார்.
சரித்திர பின்னணி கொண்ட "பகமதி" ராணியாக இவரை வைத்து படம் எடுக்க தெலுங்கு இளம் இயக்குனர் ஜி.அசோக் முன் வந்திருக்கிறார்.
இதற்கான கதையை அனுஷ்காவிடம் அவர் சொல்லி நடிக்கும்படி கேட்டுக் கொண்டார்.
கதையும் அதில் வரும் ராணி பாத்திரமும் பிடித்துவிட்டதால் அனுஷ்கா நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார். இப்போது "பாகுபலி - 2" ல் நடிக்க இருப்பதால் உடனே இந்த படப்பிடிப்பு நடைபெற வாய்ப்பு இல்லை.
"பாகுபலி" படப்பிடிப்பு முடிந்த பிறகு மற்றொரு ராணியாக நடிக்க அனுஷ்கா தயார் ஆகிறார்.



# முழுக்க நனைந்த பின் முக்காடு எதற்கு?

கேடி பில்லா கில்லாடி ரங்கா' ஹீரோயின் ரெஜினா கவர்ச்சியாக நடிக்க கிரீன் சிக்னல் காட்டியதையடுத்து லிப் டு லிப் முத்தம் தரவும் தயார் என கூறி இருக்கிறார். ஏற்கனவே ஹீரோயின்கள் தயக்கமில்லாமல் கவர்ச்சி காட்டி நடித்து வருகின்றனர். சில இளம் ஹீரோயின்கள் கவர்ச்சிக்கு மட்டுமல்லாமல் லிப் டு லிப் முத்தக் காட்சியில் நடிக்கவும் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கின்றனர்.




முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு என்ற முடிவுக்கு வந்துவிட்டார் ரெஜினா. ஏற்கனவே கவர்ச்சிக்கு கதவு திறந்து விட்டவர். சக ஹீரோவுக்கு முத்தம் தர தயக்கம் இல்லை என்று கூறி உள்ளார். இதுபற்றி அவர் கூறியது இளசுகளை சுண்டி இழுத்துள்ளது. 'லிப் டு லிப் கிஸ் தருவதற்கு எனக்கு கூச்சம் எதுவும் இல்லை. அப்படியொரு காட்சியில் நடிக்கநேர்ந்தால் அது புதிய டிரெண்டாகவும், ரெக்கார்ட் செய்யும் விதத்திலும் வித்தியாசமானதாக இருக்கும். இதெல்லாமே ஸ்கிரிப்ட்டுக்கு தேவைப்பட்டால் மட்டுமே செய்வேன்' என குறிப்பிட்டிருக்கிறார்.



# வில்லியான த்ரிஷா

தங்கமகன் கடைசி கட்ட படப்பிடிப்பில் தனுஷ்பிஸியாகவுள்ளார். இப்படம் நடித்து கொண்டிருக்கும் போதே பிரபு சாலமன் இயக்கத்தில் நடிக்க கமிட் ஆனார்.இதை தொடர்ந்து தற்போது 'காக்கிசட்டை' இயக்குனர் துரை செந்தில் இயக்கத்திலும் ஒரு படத்தில்நடிக்கவுள்ளார். இப்படத்தில் இவருக்கு இரட்டை வேடம்.இதில் த்ரிஷா நெகட்டிவ் ரோல் ஒன்றில் நடிக்கவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. த்ரிஷா, தனுசுடன் நடிப்பது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது.



# தூசு தட்டப்படும் மதகஜராஜா

சுந்தர் சி. இயக்கத்தில் விஷால் நடித்த மத கஜ ராஜா படத்தை மீண்டும் தூசி தட்டி வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.
நடிப்பைத் துறந்து, முழுநேர இயக்குனர் பணியில் இறங்கிய சுந்தர் சி. யின் முதல் படமாக வெளிவந்தது கலகலப்பு. படம் மாபெரும் வெற்றி. அதைத் தொடர்ந்து விஷால், வரலட்சுமி, அஞ்சலி நடிப்பில் மத கஜ ராஜா படத்தை இயக்கினார்.
படம் முடிந்து பல வருடங்கள் ஆகியும் வெளியாகவில்லை. தயாரிப்பாளரின் கடன் பிரச்சனையால் படம் வெளியாவது இன்னும் சாத்தியமாகவில்லை. நடுவில், விஷால் தனது சொந்தப் பணத்தில் படத்தை வெளியிட முயற்சி செய்தும் நடக்கவில்லை.
இந்நிலையில், மத கஜ ராஜாவின் தயாரிப்பாளர்கள் கடனை செட்டில் செய்து மத கஜ ராஜாவை வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளனர். தீபாவளிக்குப் பிறகு படம் வெளிவர வாய்ப்புள்ளது.



# ஜோதிகாவின் தூது

'காக்க காக்க' ஹிட் படத்தையளித்த இயக்குனர் கௌதம் மேனனுக்கு கதையே கேட்காமல் 'வாரணம் ஆயிரம்' படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டார் சூர்யா. அது பிளாப் ஆனது. அதன்பிறகு இருவரும் வெவ்வேறு படங்களில் கவனம் செலுத்தி வந்தனர். கடந்த ஆண்டு மீண்டும் இணைய எண்ணினர். கௌதம் மேனன் கூறிய கதையை கேட்ட சூர்யா ஸ்கிரிப்டை மாற்றும்படி கேட்டுக் கொண்டார். அதன்பிறகும் அவர் மாற்றிய ஸ்கிரிப்ட் பிடிக்காததால் நடிக்க மறுத்துவிட்டார். வெளிப்படையாகவே கௌதம் மேனன் படத்தில் நடிக்கவில்லை என்று அறிவித்தார். இதையடுத்து அஜித் கௌதம் மேனனுக்கு கால்ஷீட் தந்தார்.

'என்னை அறிந்தால்' படம் உருவானது. சூர்யாவோ 'அஞ்சான்', 'மாசு' படங்களில் நடித்தார். எதுவும் யாருக்கும் கைகொடுக்கவில்லை.

இந்நிலையில் கௌதம், சூர்யா மீண்டும் இணைய உள்ளதாக கோலிவுட்டில் பேச்சு எழுந்துள்ளது. ஜோதிகாவிடம் பேசிய இயக்குனர் கௌதம் மேனன் அவரையே சமாதான தூது செல்லும்படி கேட்டுக்கொண்டாராம். அவரும் இதுபற்றி சூர்யாவிடம் பேச இருதரப்பிலும் கிரீன் சிக்னல் எரியும் சூழல் நிலவுகிறதாம். இறுதி முடிவை சூர்யாவே எடுப்பார் என்றும் கூறப்படுகிறது.



# ஆயிரத்தில் இருவர்

வினய் சமுத்திரிகா நடிப்பில்



# பயமாய் இருக்கு

சந்தோஷ் பிரதாப் - ரேஷ்மிமேனன் நடிப்பில் வருகிறது



# நியாயம் தானே?

வேதாளம்' ஷூட்டிங் முடிந்துவிட்டாலும் பிஸியாகத்தான் இருக்கிறார் ஸ்ருதிஹாசன். "சூர்யாவோடு 'சிங்கம்-3', இந்தி, தெலுங்கு என்று ஓய்வில்லாமல் சூட்டிங் போய்க்கொண்டிருக்கிறது. இன்னமும் மலையாளம், கன்னடத்தில் மட்டும் எதிர்பார்க்கும் வாய்ப்பு அமையவில்லை. எல்லா மொழியிலும் நடிக்க ஆசைதான். எனக்கு மொழி பாகுபாடெல்லாம் கிடையாது. என்னுடைய கேரக்டர் வெயிட்டாக இருக்க வேண்டுமென்று மட்டுமே பார்க்கிறேன். என்னைப்பற்றி நிறைய கிசுகிசு வருகிறது. அதைப்பற்றியெல்லாம் கவலைப்படக்கூட நேரமில்லை. என்னை என் குடும்பம் நம்புகிறது. அவர்களைத் தவிர்த்து வேறு யாருக்கு நான் என்னை நிரூபித்துக் கொண்டிருக்க வேண்டும்?" என்று சூடாகக் கேட்கிறார் ஸ்ருதி. நியாயம்தானே?

# நாவலர் கை காட்டிய ...

அவர் செல்வச்செழிப்பு மிக்கவர், கல்விமான். தர்மசிந்தனையுள்ளவர். அவ்வாறான ஒருவர் எல்லோரிலும் பார்க்க சிறந்த பிரதிநிதியாக இருப்பார் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. அவர் உச்சநீதிமன்றத்தில் உள்ளவர்களின் மதிப்பையும், பலரின் அன்புக்கும் பாத்திரமான ஒரு சட்டத்தரணி. அரச உத்தியோகத்தர் மத்தியில் செல்வாக்கும் மதிப்பும் உடையவர். மற்றும் எங்களுடைய பண்பாடுகளை பின்பற்றுபவர். எனவே, இந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் இராமநாதன் அவர்களே.

ஆனால், படித்தவர்கள் நிறைந்துள்ள இந்த சபையையே நியமனம் சம்பந்தமாக தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான அனுமதியை அவ்ர கோரி நிற்கின்றார், என்று கூறி விஸ்வநாதப் பிள்ளை இராமநாதனின் பெயரை முன்மொழிந்தார்.

அவரைத் தொடர்ந்து பேசிய திரு. அப்பாப்பிள்ளை, இராமநாதன் பற்றி உயர்வாக சில கருத்துக்களைக் கூறி, அந்த தீர்மானத்தை வழிமொழிந்தார்.

அந்த தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

அதையடுத்து, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அடுத்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில், சட்டசபை நாட்டுக்கு நன்மை செய்யவே கோல்புறூக் (Colebrooke) ஆணைக்குழுவின் சிபாரிசு உருவாக்கப்பட்டது. முதன்முதலாக உருவாக்கப்பட்ட சட்டசபைக்கு குமாரசாமி முதலியார் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். (அதையடுத்தே அவர் சட்டசபை வரலாறு பற்றியும், காலம் சென்ற குமாரசாமி முதலியார் பற்றியும் சேர். முத்துக்குமாரசாமி முதலியார் பற்றியும் குறிப்பிட்டார்.) அதையடுத்து பேசுகையில் இப்ப நாங்கள் ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்ய வேண்டும்.

இராமநாதன் அவர்கள் சேர்.முத்துக்குமாரசாமி முதலியாரின் சகோதரியின் இரண்டாவது மகனாவார். அவர் மெட்றாஸ் பிறசிடன்ஸி கல்லூரியில் கல்வி கற்றவர். நீதிபதிகளின் நன்மதிப்பை பெற்றவர். மேலும் இவருக்கு உச்சநீதிமன்ற அறிக்கைகளை திருத்தி வெளியிடும் வேலை வழங்கப்பட்டுள்ளது.



இவ்வாறு வெளியிடப்படும் நீதிமன்ற அறிக்கைகள் மாகாணங்களிலிருக்கும் நீதிபதிகளுக்கு வழிகாட்டியாக அமையும் எனக் கருதப்பட்டது. அவர் பல நீதிமன்ற அறிக்கைப் பகுதிகளை இதுவரை வெளியிட்டுள்ளார். அவருடைய இந்த வெளியீடுகள் இந்த நாட்டிலுள்ள எல்லா சட்டத்தரணிகளின் மேசைகளையும் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு சட்டசபையின் பிரதிநிதி என்பவர், மக்களினுடையதும் நாட்டின் முக்கியஸ்தர்களின் மதிப்புக்கும் பாத்திரமாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் இராமநாதன் சகலரின் மதிப்புக்கும் பாத்திரமாக உள்ளார். சிலர் அவரது வயதைக் குறிப்பிட்டார்கள்.

காலம் சென்ற சேர்.முத்துக்குமாரசாமி முதன்முதலாக சட்டசபைக்கு நியமிக்கப்படும் பொழுது குறைந்த வயதினராக இருந்தார். மேலும், இராமநாதன் நாடுபூராகவும் சுற்றி மக்களின் தேவை என்ன? என்பதை கேட்டு அறிந்து கொள்ளவும் தவறவிட்டார் எனவும் சிலர் கூறினார்கள். ஆனால் சட்டசபை உறுப்பினராக சேர்.முத்துக்குமாரசாமி நியமிக்கப்பட்ட பின்னர் அவர் யாழ்ப்பாணத்துக்கே வரவில்லை. நியமிக்க முன்னரும் வரவில்லை. அவர் கொழும்பிலிருந்தவாறே மக்களின் தேவை என்ன எனக் கேட்டறிந்து அவைகளை நிறைவேற்றி வந்தார். ஏன் அவ்வாறு இராமநாதனால் செய்யமுடியாது? அவர் மூன்று வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் வந்தபோது யாழ்ப்பாணத்தில் சில மாதங்கள் தங்கியிருந்தார்.

அறிவும் மதிநுட்பமும் நிறைந்த ஒரு மனிதன் தன்னுடைய தூரப்பார்வையை நாட்டின் பல பகுதிகளுக்கும் செலுத்துவான். அவர் கௌரவமான முறையில் மக்களின் தேவைகளை அவதானித்து நடப்பார். நல்ல கௌரவமான குடும்பத்திலிருந்து பிறக்காத ஒருவர் நல்லவர்களுடன், உயர்ந்தவர்களுடன் பழகாத ஒருவரை நல்லவர் என எதிர்பார்க்க முடியாது. அவ்வாறான தன்மையில் இல்லாதவர்கள் நாட்டின் உயர்மட்டத்தில் இருப்பவர்களின் சந்தேகத்துக்கு ஆளாவார்கள். இன்று இந்த நியமனத்தை வேறுயாருக்கோ கொடுக்க வேண்டும் என்று பாடுபடுபவர்கள் தமது அவசர புத்தியால் தாங்கள் தவறான ஒரு முடிவு எடுத்து விட்டோம் என பிற்காலத்தில் வேதனைப்படுவார்கள்.

அதையடுத்து ஆறுமுக நாவலர் சட்டசபை வெற்றிடத்துக்கு தமிழர்கள் மத்தியில் பிரதிநிதியாக நியமிக்கப்படுவதற்கு சட்டத்தரணி இராமநாதன் அவர்களே தகுதியானவர். எனவே இப்பதவிக்கு இராமநாதனே பொருத்தமானவர் என தான் பிரேரிப்பதாக நாவலர் ஐயா கூறி இராமநாதனைக் கைகாட்டினார்.

அதையடுத்து திருவங்கூர் நீதிவானான் திரு.ரீ பொன்னம்பலம் பிள்ளை அந்த தீர்மானத்தை வழிமொழிந்து, இராமநாதனை அவர் இந்தியாவில் இருக்கும் போது இங்கே இருப்பவர்களிலும் பார்க்க அவரை நன்றாகத் தெரியும் எனக் கூறினார். அவர் நல்ல பிறப்பை கொண்டவர். செல்வந்தர், கல்விமான், மற்றும் எல்லாத் தகுதிகளுமுடையவர் என்றார். சட்டத்தரணிகளின் மத்தியில் அவர் இளையவராக இருந்தாலும் அவர் மிகவும் கௌரவத்துக்குரியவர். அவரிடம் இருக்கும் செல்வம் அவருடைய ஏழு தலைமுறைக்கு போதும். இதனால் அவ்ர நீதிமன்றத்தில் கடுமையாக உழைக்க வேண்டியதில்லை. எனவே, அவர் வருங்காலத்தில் சட்டசபை வேலைகளில் முழுக்கவனத்தையும் செலுத்தக் கூடியதாக இருக்கும். இராமநாதன் அவர்கள் சேர்.முத்துக்குமாரசாமியின் செயலாளராக இருந்ததால் அவரால் சகல விடையங்களிலும் வழிகாட்டப்பட்டவர். சட்டசபை வழிமுறைகளை நன்கு தெரிந்தவர். பரீட்சையப்பட்டவராவார். (அதையடுத்து படித்த உயர்வான மனிதர்கள் எத்தனை பேர் 30 வயதுக்கு கீழ்ப்பட்ட படித்தவர்கள் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், நாவன்மையுடையவர்களாக இருந்தார்கள் என்ற வரலாற்றினையும் கூறினார்.) இந்த தீர்மானம் சபைக்குப் போடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

அப்பொழுது ஹேன்ஸ்மன் என்கிற இளம் பிரக்குராசியார் (proctor) சிலருடன் கூட வந்து தலைவரை அணுகி தான் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு திருத்தம் கொண்டுவர அனுமதி தருமாறு கேட்டார். அப்பொழுது அதற்கு பதிலளித்த தலைவர் தீர்மானங்கள் எல்லாம் முன்மொழிந்து வழிமொழிந்து பாராட்டுதலுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. எனவே திருத்தங்கள் கொண்டு வரமுடியாது என்று கூறினார். அதையடுத்து ஹேன்ஸ்மனும் அவருடன் வந்தவர்களும் திரும்பச் சென்றார்கள். ஆனால் அவர்கள் அந்த மண்டபத்தை விட்டு வீதியை அடைந்த பிற்பாடு "வெட்கம்" "வெட்கம்" என்று கத்தி தங்களுடைய கையைத் தட்டி கூக்குரல் இட்டார்கள்.

இராமநாதன் அவர்கள் அவரது 28ஆவது வயதில் சட்டசபைக்கு கடுமையான எதிர்ப்பின் மத்தியில் தெரிவுசெய்யப்பட்டார். ஆகஸ்ட் 27ஆம் திகதி 1879ஆம் ஆண்டு சட்டசபைக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரால் கை காட்டப்பட்ட தமிழ்த் தலைவர் இராமநாதன் அவர்கள். ஆனால், இராமநாதன் அவர்கள் இந்த நாட்டிற்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவைகளைக் கண்டு கொள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஐயா அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நாவலர் ஐயா டிசம்பர் 5ஆம் திகதி 1879 ஆம் ஆண்டு காலமானார்.

(தொடரும்...)



# தமிழ் இனி

1991ஆடிமாதம் வவுனியாவின் ஒருக் கிராமமான மாதர் பணிக்க மகிழங்குளத்தில் ஒரு மண்வீட்டில் அமைந்த முகாம். அதில் விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியற்றுறையினர் இருந்தோம். பத்துப் பெண் போராளிகள் லெப்ரினன்ட் கேணல் நளாயினி தலைமையில்தங்கியிருந்து அரசியல் வேலைகளைச் செய்து கொண்டிருந்தோம்.

ஆகாயக்கடல் வெளிச்சமர் எனக் கூறப்பட்ட ஆனையிறவுச் சமர் நடந்து கொண்டிருந்தது. அன்றாடம் நான்கு ஐந்து அல்லது அதற்கும் அதிகமாக வீரச்சாவடைந்த உடல்கள் வந்து கொண்டிருந்தன. அவற்றைப் பொறுப் பேற்று உரிய வீடுகளுக்கு கொடுத்து வீர வணக்க கூட்டம் நடாத்தி மாவீரர் துயிலுமில்லத்தில் விதைப்பது வரை செய்து கொண்டிருந்தோம்.

வித்துடல்கள் எனப்படும் மாவீரர் உடல்களும் காயமடைந்த போராளிகளும் பெருகிக் கொண்டிருந்தனர். இந்த செய்திகளை பரவலாக்கப் பத்திரிகைகளோ, வானொலிகளோ அப்போது வன்னியில் இல்லை. முக்கிய சந்திகளில் அறையப்பட்டிருந்த கரும்பலகை உறுமல் என்ற தலைப்பில் அன்றாடச் செய்திகளைத் தாங்கி நின்றன. குறித்த செய்திகள் போராளிகளால் வோக்கி டோக்கியில் பெறப்பட்டு பல கையில் எழுதப்பட்டிருக்கும் வீரச் சாவு அறிவித்தல்களும் இதில் ஒட்டப்பட்டிருக்கும், இவைதவிர களமுனை சார்ந்த தகவல்கள் பட்டிதொட்டியெங்கும் பரப்புரை செய்தலும் இழப்புகளை ஈடு செய்யுமளவுக்கு புதிய போராளிகளை இணைப்பதும் அரசியற்றுறையினரின் முக்கிய பங்களிப்பாக, கடமையாக இருந்தது.

இழப்பு என்பது இறந்தவர்களை மட்டும் கொண்டதல்ல. அது காயமடைந்து களத்திலிருந்து வெளியேறுபவர்களையும் போர் முடிந்த பின் அச்சத்தாலும் போரிட விருப்பமின்றியும் விலகுபவர்களையும் உள்ளடக்கியதாகும்.

இந்த மூன்று வகையிலும் இழப்புக்களையும் நிரப்புவது இப்போது இயக்கத்தின் அரசியற்றுறையின் பணியாகும். இப்பணிக்கெனத் திறமையான பேச்சாளர்கள் களமிறக்கப்பட்டனர். பிரச்சார மேடைகளில்லை. சந்து பொந்தெங்கும் பட்டிதொட்டியெங்கும் மக்கள் ஒன்று கூட்டப்பட்டு பரப்புரை மேற்கொள்ளப்பட்டது பாடசாலைகள் தொழிலகங்கள் என எந்த இடமும் மீதமின்றி பரப்புரை நடாத்தப்பட்டது. ஆனையிறவு அடிபாட்டு விபரம் வீரதீரச் செயல்கள் விளம்பரப்படுத்தப்பட்டன தோல்விக்கு ஆட்பற்றாக்குறையே காரணம் என்பது புரிய வைக்கப்பட்டது.

பெருவெள்ளமென புதிய போராளிகள் திரண்டனர். இணைந்தவர்கள் அனைவருக்கும் உடனடிப் பயிற்சி கொடுக்க முடியவில்லை. எனவே கொஞ்சம் படித்தவர்களை சீருடையை அணிவித்து பரப்புரை வேலைகளுக்காகப் பயன்படுத்தினார்கள்.

அந்த வகையில் வவுனியாவுக்கு ஏழு பிள்ளைகள் அனுப்பப்பட்டனர். அப்போது நளாயினி கடற்புலிகளில் மகளிர் அணியொன்றை உருவாக்குவதற்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபட யாழ்ப்பாணம் சென்றதால். பானு என்றபோராளி கடமையிலிருந்தாள்.

எனக்கு பாலமோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் வேலை. நானும் அரசியற்றுறை முகாமில்தான் தங்கியிருந்தேன் பானு என்னைத்தேடி பாலமோட்டைக்கு வந்தாள் வந்ததுமே

“அன்ரீ பிசகிப்போச்சு” என்றாள்

“ஏன் என்ன நடந்தது?” என நான் கேட்டேன்.

“அன்ரீ யூனியலைப்ப பிடிச்சு அனுப்பியிருக்கினம் பிரச்சார வேலைக் காம்... நாங்கள் கொண்டுதிரிய பெற்றார் கண்டு பிடி ச்சிழுத்துக் கொண்டு போனா... என்ன செய்யிற?”

“ம்... வவுனியாப் பிள்ளையள அனுப்பியிருக்கமாட்டினம்...” ஓம் முல்லைத்தீவாம் ஒண்டு... மற்றதெல்லாம் கிளிநொச்சி.”

அப்ப ஏன் யோசிக்கிறாய். இந்தக் காடுகளுக்க ஆர் வரப்போகினம்.



அப்பிடி வந்தாலும் முகாம் இருக்கிற இடத்தை ஊருக்குப் புதிசா வாறவைக்கு சனம் சொல்லவே சொல்லாதுகள்” என்றேன்.

மாலையில் நான் முகாமுக்குப் போனதும் புதிதாக வந்தவர்களைப் பார்த்தேன். ஏழுபேரில் கொஞ்சம் வளர்த்தியாக திடகாத்திரமாக தோற்றமளித்த பெண் வரிச் சீருடையில் நின்றாள்.

“ என்ன மிஸ் உங்களுக்குமட்டும் ஸ்பெஸல்” என்றேன் அவள் நாணத்துடன் சிரித்தவாறே,

“எனக்கு அவயட உடுப்புகள் அளவானதா ஒண்டுமில்ல அதாலதான் இதைத்தந்தவை” என்றாள்.

சுறுசுறுப்பானவளாக எபபோதும் எதையாவது படிக்கும் ஆர்வமுள் ளவளாக. வலியப் போய் யாருடனும் பேசுபவளாக இருந்தாள். நாங்கள் பாலமோட்டை மக்களைச் சந்திக்க புறப்பட்டோம்.

“அன்ரீ நானும் பேசுவன் நானும் வரட்டா?” ஏன்று ஒட்டிக் கொண்டாள்.. “என்ன என்ன பேசோணும் சொல்லுங்க நான் குறிப்பெடுத்துக் கொள்ளுறன் அப்பிடியே பேசிறன்...” என்றவள் சின்ன குறிப்பு புத்தகத்தில் இதைச்சொல்லலாமா? அதைச் சொல்லலாமா என கேட்டுக்கேட்டு குறிப்பெடுத்தாள். மாலையில் அவளுக்கென்று மிதி வண்டி இல்லாத காரணத்தால் நான் எனது மிதிவண்டியில் அவளை ஏற்றிக்கொண்டு இரண்டுமைல் தொலைவிலிருந்த பால மோட்டைக்குச் சென்றோம்.

ரோஸ் நிறத்தில் பெரிய பிளாஸ்டிக் பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தாள். கரியநிறம்.

“அன்ரீ கண்ணாடிச்சந்திரண்ணை என்ர ஒண்டவிட்ட அண்ணன்தான். நான் சோல்ட்டில் இருந்தநான் நீங்கள் அவற்ற அஞ்சலிக்கூட்டத்தில உருத்திரபுரத்தில பேசவந்தனீங்க தானே அதை நான் கேட்டனான்.

ஆச்சரியப்பட்ட நான் நானும் ஒரு நல்ல பேச்சாளரா வரோணும் எண்டு. அதுதான் என்ர ஆசை.”

இரண்டுமைல் தொலைவிலிருந்த பாலமோட்டைபாடசாலைக்கு எனது ஜென்ஸ் சைக்கிளின் முன் பாரில் வைத்து மிதிவண்டியை உழக்கியவாறே அவளுடைய கதையைக் கேட்டுக்கொண்டே போனேன்.

பாலமோட்டைப் பாடசாலையில் முப்பது நாற்பது பேர்வரை குழுமியிருந்தனர். அவ்வளவுதான் அன்றைய பாலமோட்டை. நானும் பானுவும் ஒரு முடிவெடுத்தோம்.

“ஆசைப்படுறாள் பேசட்டும். ஏதாவது தப்பா பேசிட்டா கடைசியில நாங்க பேசயுக்க மேவியடிச்சு விடலாம் அந்தப் பிள்ளை முதல் பேசட்டும்.”

சந்திரிகா பேச எழுந்தாள். தன் வீரியமான குரலால் அவள் பேச ஆரம்பித்த போதுநாங்கள் வியந்து போனோம். உள்ளத்தை ஊடுருவித்தைக்கும் குரல் அது. அவளுடைய உரை அந்த வளவைக் கடந்துகிராமத்தையே வளைத்துப்போட்டது. தெருவில் போவோர் வருவோரும் நின்று கேட்டனர். சொல்ல வேண்டிய அனைத்தையும் திறம்படப் பேசி முடித்தாள்.

“அருமையாகப் பேசிட்டாள் இனி நாங்க பேச வேண்டியதில்லை’ என்றேன்.

அன்று மாலை அவளுடைய பேச்சால் கவரப்படடு இரு புதிய போராளிகள் முகாமுக்கு வந்து இணைந்து கொண்டனர்.

போர் முடிந்து பயிற்சிகள் தொடங்கிய போது வந்த ஏழு பேரும் பயிற்சிக்காக அழைக்கப்பட்டனர் அப்படி சந்திரிகாவும் தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு இருபத்தோராம் அணியில் பயிற்சி எடுத்தாள். பயிற்சி முடிந்ததும் மீண்டும் அரசியல் வேலைகளுக்காக வந்தாள்.

புன்னாலைக் கட்டுவனில் பெண்கள் மறுவாழ்வுப் பண்ணைக்கு பொறுப்பாக விடப் பட்டாள். இப்பண்ணையும் கோப்பாய் ராச வீதியில் அமைந்த லைடன் பண்ணையும் பெண் குற்றவாளிகளுக்கான புனர்வாழ்வு மையங்களாக இருந்தன. இங்கே தொழில் செய்யப் பழக்கப்பட்டனர் பெண்கள்.

1991ஆம் ஆண்டின் இறுதியில் கல்வியங்காட்டில் ஒரு விபச்சார விடுதி இயக்கத்தால் கைப்பற்றப்பட்டது. அதிலிருந்த பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பால்வினை நோய்களுக்கு ஆளாகியிருந்தனர். அவர்களைத்தனிப்படுத்தி அவர்களுக்கான வைத்திய உதவிகளைப் பெற்றுக்கொடுத்து ஆரோக்கியமான உணவளித்து பாதுகாக்கப்பட்டனர். வேறும் சமூகச் சீர்கேடுகளில் ஈடுபட்ட பெண்கள் லைடன் பண்ணையில் இருந்தனர். இங்கும் அவர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் நடந்தன. இந்த நடவடிக்கைகளில் இந்தப் பெண்களை மறுபடி சமூகத்தில்வாழுவதற்கான ஆற்றுப் படுத்தலை செய்து கொண்டிருந்தேன்.

சந்திரிகா இயக்கத்துக்கு வந்தவுடனேயே அவளுக்கு என் மீது ஈடுபாடு இருந்தது இப்ப பண்ணையில் என்னோடு நிறையவே பேசவும் வாய்ப்பிருந்தது இந்தப் பெண்களையிட்டு மிகவும் வருந்துவாள். இந்நிலையில் வலிகாமம் பொறுப்பாளர் விலகல் கடிதம் கொடுத்து விட்டதால் அந்த இடத்துக்கு சந்திரிகா மாற்றப்பட்டாள்.

இப்போது பூநகரி மீதான “ஒப்பிரேசன் தவளை” தாக்குதலுக்காக இவளும் தன் தோழியருடன் சென்றாள் அந்த தாக்குதலில் சப்ளை டீமில் இருந்த இவள் தோழி சாம்பவி வீரச்சாவை தழுவிக் கொண்டாள். (இச்சம்பவம் ‘மழைக் கால இரவு’ என்ற பெயரில் சிறுகதையாக தமிழினி எழுதியுள்ளார்) அதன் பிறகு தோழியின் நினைவாக தன் பெயரை சாம்பவி என மாற்றிக்கொண்டாள்.

இயக்கத்தின் பொறுப்பாளர்கள் தாம் வீட்டில் பெற்ற கல்வி அறிவுடனேயே இருந்தனர் இவர்களை போராட்டத்துக்கான வளவாளர்களாக்கும் முயற்சியில் தலைமை தாங்குவோர் பல்துறை அறிவும் பெறவேண்டுமென இயக்கம் கல்விக்கு ழுவை ஆரம்பித்தது இக் குழுவில் முதல் அணியில் சாம்பவி இரு வருடம் கற்றுத் தேறினாள். பின் அக்குழுவுக்கு பொறுப்பாளராகி புதிய போராளிகளை உள்வாங்கி கல்விக்குழு பெண்கள் அணியை நடாத்தினாள்.

தானும் அடிபாட்டு அனுபவத்தைப் பெற விரும்பி தளபதிகளிடம் தொந்தரவு பண்ணி பெற்ற சந்தர்ப்பம் ‘ஓயாத அலைகள் ஒன்று’ முல்லைத் தீவுச்சமர். ஒருநாள் சண்டை இவள் பங்குபற்றக்கிடைத்த ஒரேயொரு சண்டை. அதன்பின் இவள் சண்டைக்களம் செல்ல முடியவில்லை

கல்விக்குழுவில் கற்றுத்தேறியோர் படையணிகளுக்கும் அரசியற்றுறை புதிய அணிகளுக்கும் வகுப்பெடுக்கும் வேலையில் ஈடுபட்டனர். மகளிர் அணி அரசியற்றுறைப் பொறுப்பாளர் மகளிர் இராணுவப்பிரிவுக்கு தளபதியாக மாற்றம் பெற்றாள். அந்த இடத்துக்கு தன் பெயரை தனித்தமிழில் மாற்றிக் கொண்ட தமிழினி பதவியேற்றாள்.

இவள் அரசியற்றுறைப் பொறுப்பாளராக மாறியதும் அனுபவசாலிகளான பழைய போராளிகள் பதவிிறக்கப்பட்டு அவ்விடங்கள் கல்விக்குழுவில் பயின்ற அவளது தோழியரும் விசுவாசிகளுமான புதியவர்களால் நிரப்பப்பட்டன. மோசமாக வீழ்த்தப்பட்ட பழைய போராளிகள் இயக்கத்தை விட்டே வெளியேறினர்.

அரசியற்றுறையின் முன்னைய போராளிகள் பட்ட துன்பம் இவர்களுக்கில்லை. அச்சமற்ற பாதுகாப்பான முகாம்களில் படுத்துறங்கினர். வசதியான வாழ்க்கை. வாகன வசதிகள் சலவைக்கல் பதித்த கழிப்பறை குளியலறை என்பவற்றோடு ஒப்பிடும்போது, மைல்கணக்கில் காலால் நடந்து வேலைசெய்து, இரவில் அட்டை பாம்பு பூச்சிகள் ஊருகின்ற மண்வீடுகளில் போர்வை களற்று ஒருவரையொருவர் குளிரில் முட்டிக்கொண்டு, ஒரு பாயை குறுக்காகப் போட்டு நால்வர் உறங்கி... தாமதமாகியும் வராத வழங்கலால் முருங்கையிலையும் சம்பலுமாக சாப்பிட்டு மழையிலும், வெயிலிலும்குடையின்றி அலைந்து வேலைசெய்த முன்னைய அரசியற்றுறைப் பொறுப்பாளர்களை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

என் வீட்டில் வந்து என் பையனின் சாரத்தை வாங்கிக் கட்டிக் கொண்டு வரும்வழியில் முள்கிழித்த தன் ஜீன்ஸை தைத்துக் கொடுக்கச் சொல்லி வாங்கிப் போட்டுக் கொண்ட நளாயினி கப்பல்போன்ற பெரிய மூன்று கல்வீடுகளுக்கு சொந்தக்காரி. ஒரு முட்டைதான் இருக்கு உங்களுக்கு உடல்நலமில்லை அதால உங்களுக்குத்தான். என்று கொடுத்தால் அதை எட்டாகப்பிரித்து தன்னுடனான பிள்ளைகளுக்கு கொடுத்து மீந்ததை உண்ட தணிகைச்செல்வி, களைத்துப் போன தன் பிள்ளைகளை தூங்க விட்டு தான் சென்றிபார்த்த தாரணி (நிஸ்மியா) இவர்களோடு பார்த்தால் தமிழினி ‘born with a silver spoon’ என்பது போலஇவள் இயக்கத்துக்க வந்த போது இவளது தாயார் வேலைக்காக வெளிநாடு சென்றிருந்தார். இவளுடைய மாமனார் இவர்களை கவனித்துக்கொண்டார். தாயார் வெளிநாடு சென்றாரே என அடிக்கடி அங்கலாய்ப்பாள்.

ஆனால் இயக்கத்தில் இணைந்ததிலிருந்து ஒரு ராணியாகவே வாழ்ந்தாள். இவள் தன் தலையை ஒருபோதும் வாரிக்கட்டியதில்லை. திறமாக தலை வாரிக்கட்டக்கூடிய ஒரு பெண் போராளியை கூடவே வைத்திருப்பாள். தன் உடைகளை ஒருபோதும் அயன் பண்ணியதில்லைதான் பயணிக்கும் மோட்டார் சைக்கிளை கழுவியதோ எண்ணையூற்றியதோ இல்லை.. உணவை சமைத்து உண்டதில்லை எப்பவும் அக்காவுக்கு ஸ்பெசல்தான் சமையல் மூன்று வேளையும் பிடித்த உணவு புட்டுத்தான். எந்த இழப்புமின்றி தன்கல்வித் திறமையால் தலைமைவரை நெருங்கியவள்.

இறுதியில் கட்டாய ஆட்சேர்ப்பின் போது காலையில் தாலி கட்டியவர்களை மஞ்சள் கருக்கழியாமல் மாலையில் கைது செய்தும் தப்பியோடிய பிள்ளைகளைப் பிடித்து மொட்டையடித்தும் இயக்கத்துக்கு தன் விசுவாசத்தை வெளிப்படுத்தியவள். இறுதியில் இயக்கம் இவளைக் கைவிட்டு விட்டது. இவளது தோழியரும் கைவிட்டனர்.

அதனை அடுத்து வந்த காலம் அவளுக்கு ஞானத்தை வழங்கியிருந்தால் நலமே... சிறந்த வாசிப்பாளர் நல்ல ரசிகை நடிகை, நல்ல கவிஞை எழுத்தாற்றல் கற்பனை வளம் எல்லாம் அவளுக்கிருந்தது.அதில் நீடித்திருக்க இயற்கை விடவில்லை. இயக்கப்பணிகளில் கடுமையாக நடந்து கொண்டாலும். சுபாவத்தில் இரக்கமுள்ளவள். ஏழைகளுக்கு மட்டுமன்றி எதிரிகளுக்கும் இரங்கினாள். நேர்மை விசுவாசம் என்பவற்றின் மறுபெயர் தமிழினி ஆயின் கருணை, அவள் கைவிட்ட நெறியாயிற்று அதுவே அவள் சிறை வாழ்க்கையின் அர்த்தமுமாயிற்று.

அம்பிகா

## குட்டீஸ் பக்கம்



வழமை போல நித்திரை விட்டு எழுந்து தனது காலைக்கடன்களை முடித்துவிட்டு திண்ணையில் அமர்ந்திருந்தான் ரவி. அவனை நினைவுகள் சூழ்ந்து கொண்டன.


# உழைப்பே உயர்வு தரும்

ரவிக்கு 25 வயதாகிறது. 2 அக்காவும் ஒரு தங்கையும்.இரண்டு தமக்கைமார் கல்யாணம் கட்டி வெவ்வேறு இடத்துக்குப் போய்விட்டார்கள். ரவியும் அவனது அம்மாவும் தங்கச்சியும்தான். தகப்பன் கடைசியா விட்டிட்டுப் போன சொத்தொண்டால் ஒரு பரப்பு வயல் நிலம்தான். தகப்பன் இறந்து போனதால் குடும்பச்சுமையை ரவியே சுமக்க வேண்டி இருந்தது.

ஓலைக்குடிசை கஸ்டமே கதியெனக் கிடக்கும் சூழல் அம்மாவையும் தங்கச்சியையும் காப்பாற்ற சிறுசிறு வேலைகளை செய்து குடும்பத்தை காப்பாற்றிவந்தான்.

தற்போது மழைகாலம் என்பதால் வேலை கிடைப்பதே சிரமம். எப்பவுமே யோசித்தபடியே இருப்பான்.

ஒருநாள் தகப்பன் விடடிட்டுப் போன வயல் காணி அவனுக்கு நினைவுக்கு வந்தது. உடனே வயல் காணிக்குச் சென்று பார்வையிட்டான். மரம், தடி, கொடிகள் தேவையில்லாத மரங்கள் போன்றன படர்ந்திருந்தன. ரவி அவனது இரு நண்பர்களுடன் அந்தக்காணியை துப்புரவாக்கினான். தனது பள்ளிக்கூட கணித ஆசிரியரான கந்தனிடம் உதவியை நாடி சிறுதொகை பணத்தைப் பெற்றுக்கொண்டான். அப்பணத்தை வைத்து பயிர்களை வேண்டி நாட்டினான். இரவு பகல் பாராது உழைத்தான். அவனது வாழ்வுக்கு விடிவு கிடைத்தது.



அவன் செய்த விவசாயம் அமோக விளைச்சலைத் தந்தது. அப்பணத்தின் சிறுதொகையை வங்கியில் இட்டான். தன்னுடன் அயராது விடாமுயற்சியுடன் வேலை பார்த்த நண்பர்களுக்கு பணம் கொடுக்கவில்லை. தன் நிலத்தில் பாதியை பங்கிட்டு விவசாயம் செய்யக் கொடுத்தான். காரணம் அவர்களும் தன்னைப்போல நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதால்


இந்தநிலையில்இளம் வயதில் சிறந்த விவசாயியாக தெரிவுசெய்யப்பட்டான்.

இன்றைய காலகட்டங்களில் ஒவ்வொரு தாய் தந்தையும் தனது மகன் தங்களை காப்பாற்றுவான் என்றே நினைக்கிறார்கள். ஆனால் இளைஞர்களோ தமது பெற்றோரைக் கவனிப்பதில்லை. அப்படியான இளைஞர்களுக்கு ரவி ஓர் எடுத்துக்காட்டு.

உழைப்பே உயர்வு தரும் என்பதை ரவி நிலைநாட்டினான்.

மு.கமலினி
தரம் – 10
(யா/மகாஜனாக் கல்லூரி)

# வாரமொரு குறள்



*இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.*

**பொருள் :**

**இறைவன் என்பதற்குரிய பொருளைப் புரிந்து கொண்டு புகழ் பெற விரும்புகிறவர்கள், நன்மை தீமைகளை ஒரே அளவில் எதிர் கொள்வார்கள்.**

# கலாமின் பொன்மொழிகள்

* கனவு காணுங்கள், திட்டமிடுங்கள், செயற்படுங்கள்
* கனவு காண்பவர்கள் அனைவரும் தோற்பதில்லை, கனவு காண்பவர்கள் மட்டுமே தோற்கிறார்கள்.
* சிந்திக்க தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை
* உன் கைரேகையை பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே ஏனென்றால் கையே இல்லாதவனுக்கும் எதிர்காலம் உண்டு.
* ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல உன்னைப் போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே.
* கனவு காணுங்கள் ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல. உன்னை தூங்கவிடாமல் பண்ணுவது எதுவோ (இலட்சியம்) கனவு
* நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

ஆ.கபிலாயன்
யா/யூனியன் கல்லூரி

# பொது அறிவு

1. பெண்களிற்கு கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கும் நாடு? **இஸ்ரேல்**
2. நாட்டின் பெயரைக் குறிப்பிடாத முத்திரை வெளியிடும் நாடு? **ஐக்கிய இராச்சியம்**
3. புத்தர் போதித்த மொழி? **பிராகிருதம**
4. பசுபிக் பெருங்கடலின் வடிவம்? **கோழிமுட்டை**
5. தேசியக்கொடி இல்லாத நாடு? **மசிடோனியா**
6. முதன் முதல் ரயில் போக்குவரத்து ஆரம்பித்த நாடு? **இங்கிலாந்து**
7. கெட்டுப் போகாத உணவு? **தேன்**
8. அஜந்தா குகைகளிலுள்ள குகைகளின் எண்ணிக்கை? **21**
9. முதன் முதலில் உருவாக்கப்பட்ட தனிப்பட்ட கணினியின் பெயர்? **அப்பிள்**
10. கூடிய வானொலி நிலையங்களைக் கொண்ட நாடு? **அமெரிக்கா**
1. ஆசியாவில் கடைசியாக தொழில்மயமான ஐரோப்பிய நாடு? **ரஷ்யா**
12. காளானில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து ? **பென்சிலின்**

நிலக்சியா
தரம் -09
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

## பல்லாண்டு வாழ்ந்து விடு!

எலியே எலியே கதை கேளாய்!
வீட்டெலியே கதை கேளாய்!!

பூனையொன்று சுத்துது!
பசியால் பதறிக் கத்துது!!


உன்னைக் கண்டால் கவ்வுமே!
கவ்விப் பிடித்துத் தின்னுமே!!

ஓடி வலைக்குள் ஒளிந்து விடு!
பூனைக் கண்ணில் மறைந்துவிடு!!

வீட்டில் உணவைத் தின்னாதே!
உனக்கு வைத்த விஷமதுதான்!!

எலிப் பொறிக்குள் போகாதே!
நீ சாகப்போகும் இடமதுதான்!!

கவனமாக இருந்து விடு!
பல்லாண்டு வாழ்ந்து விடு!!



மகா

# விடுகதை

01. பழம் காயாகிறது அது என்ன?
02. காய் பூவாகிறது அது என்ன?
03. முற்றினாலும் பழுத்தாலும் காய் என்றே அழைக்கப்படும் அது என்ன?
04. மரஞ்செடி கொடி இல்லாத சோலை எது?
05. தண்டின் மேல் பழம், பழத்தின் மேல் செடி அது என்ன?
06. ஒரு நெல்லைக் குற்றியதும், வீடெல்லாம் உமி அது என்ன?
07. மக்கள் வெட்டாத குளம், மழை நீர் நிரம்பாத குளம் அது என்ன?
08. பட்டம் பறப்பது எதனால்?
09. கொட்டாவி வருவது எதனால்? படிப்புச் சிறப்பது எதனால்?
10. நல்ல பாம்பு தலை தூக்குவதேன்? நாம் கமரா முன் நிற்பதேன்?
11. காடு குறைவது ஏன்? கால்வாய் குறைவது ஏன்?
12. பந்து எழும்புவதேன்? பையன் அழுவதேன்?
13. அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம் அது என்ன?
14. அடிமேல் அடிவாங்கி அனைவரையும் சொக்க வைக்கும் அது என்ன?
15. அடிக்கடி தாவுவான் அரசியல் வாதியல்ல அவன் யார்?

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. ஊறுகாய் | 2. தேங்காய்ப்பூ | 3. தேங்காய் |
| 4. காசோலை | 5. அன்னாசி | 6. விளக்கு |
| 7. இளநீர் | 8. நூலால் | 9. பசியால் |
| 10. படமெடுக்க | 11. வெட்டுவதால் | 12. அடிப்பதால் |
| 13. வளையல் | 14. மிருதங்கம் | 15. குரங்கு |

செ.வினுசா
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்



அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா நிகழ்வு

# உயர் பாதுகாப்பு வலயமென்ற பெருவேலி தடை தளருமா?

விவசாயத்தையும், கடற்றொழிலையும் ஜீவனோபாயமாக்க கொண்ட வலி.வடக்கு மக்கள் 30 ஆண்டுகள் கடந்தும் தமது பிரதேசத்துக்குச் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளார்கள். முதியவர்கள் தாம் தவண்டு, புரண்டு, துள்ளித் திரிந்த மண்ணில தமது இறுதிப் பயணம் நடைபெற மாட்டாதா என்ற ஏக்கப் பெருமூச்சுடன் மிக மன வேதனையுடன் ஒவ்வொரு நாள்களையும் கழிக்கின்றார்கள். எத்தனையோ பேர் அந்த ஏக்கத்துடன் மரணத்தை அடைந்து விட்டார்கள். தற்போது தந்தையர்களாகவும், தாய்மார் களாகவும் திகழ்பவர்கள். நாம் சிறுவயதில் துள்ளித் திரிந்த இடங்களை மறந்த நிலையில் மீண்டும் எப்போ நாம் அந்த இடங்களுக்குச் செல்வோம் என்று ஏங்குகின்றார்கள். இளைஞர்கள் தமது தந்தை, பாட்டன், முப்பாட்டன் பிறந்த மண்ணைப் பார்க்க வேண்டும் என்ற பேரவாவில் உள்ளார்கள்.

ஆனால், நாங்கள் எங்கள் சொந்த மண்ணில் குடியேற முடியாது. எமது வீட்டை, காணியைச் சென்று பார்வையிட முடியாது. எமது பிள்ளைகள் கல்வி கற்கின்ற பாடசாலைகள் அதன் சொந்தக் கட்டடங்களுக்குச் செல்லக் கூடாது. அது உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெரு வேலியை = தடையை அரசும் படைத்தரப்பும் போட்டு எமது மக்களை அடிமையாகவும், நாதியற்றவர்களாகவும், அகதி முகாம்களுக்குள் முடக்கி வைத்திருக்கின்றார்கள்.

காங்கேசன்துறையில் தனியாரின் காணியில் உல்லாசக் ஹோட்டல் ஒன்றை கடற்படை நிறுவியுள்ளது. ஆனால், காங்கேசன்துறைக்கு மக்கள் செல்ல இயலாது, ஹோட்டலுக்கு என்றால் செல்லலாம். காங்கேசன்துறையில் மிகப் பெயரோடும் புகழோடும் திகழ்ந்த பாடசாலை நடேஸ்வரக் கல்லூரி. இது உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளைக் கொண்ட தரம் – 1 பாடசாலை. இந்தப் பாடசாலை தனது சொந்த மண்ணில் இயங்கிய காலத்தில் எத்தனையோ மருத்துவர்களை, பொறியியலாளர்களை ஒவ்வொரு வருடமும் இந்த சமூகத்துக்கு வழங்கியது. தற்போது நடேஸ்வரக் கல்லூரி, தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்துக்கு முன்னுள்ள ஒரு வீட்டில் குற்றுயிருடன் மிகக் குறைவான மாணவர்களுடன் உயர்தரம் ஏதுமற்ற நிலையில் காணப்படுகின்றது. இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு கத்தோலிக்க மதம் கோலோச்சுகின்ற காலத்தில் சைவப் பிள்ளைகளும் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வியையும் உயர்கல்வியையும் பெறும்பொருட்டு பரமேஸ்வரக் கல்லூரி, நடேஸ்வரக் கல்லூரி, வைத்தீஸ்வரக் கல்லூரி ஆகியன இந்துமதப் பாடசாலைகளாக உருவாக்கப்பட்டன.

இன்று இந்தப் பாடசாலையை மீள சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எமது தமிழ்த் தலைமைகள் அக்கறையில்லா திருப்பதுதான் வேதனைக்குரியது. ஆனால், இந்துமாமன்றம் இந்தப் பாடசாலையை மீண்டும் பழைய இடத்துக்குக் கொண்டுசெல்ல பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு சாதாரண குடிமகன் ஒரு வீடுகட்டுவதென்றாலோ அல்லது ஒரு வர்த்தக நிலையத்தை உருவாக்குவது என்றாலோ அல்லது ஒரு ஹோட்டல் நிறுவுவதென்றாலோ அரச திணைக்களங்களின் சட்ட திட்டங்கள் மிகவும் கடினமான வையாக இருக்கும். பிரதேச சபையின் கட்டட அனுமதி பெறப்பட வேண்டும், கட்டடம் வேண்டும், சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். இத்தனையும் முறையாக நடைபெற்றால்தான் கட்டட அனுமதி கிடைக்கும். பின்னர் வியாபார நிலை யத்தை நிறுவுவத ற்கும் அதுவும் உணவகம் என்றால் பணியாற்று பவர்கள் மருத்துவச் சான்றிதழ் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும், சமையலறை, மலசலகூடம் என்பன சுகாதார முறைப்படி அமைந்திருக்க வேண்டும். இன்னும் இன்னோரன்ன இடைஞ்சல்களை மக்கள் எதிர்நோக்க நேரிடும். ஆனால், படையினரால் காங்கேசன்துறையில் நிறுவப்பட்ட ஹோட்டலுக்கு எந்தக் கட்டட அனுமதியும் பெறப்படவில்லை. சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனையோ சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனையோ அனுமதியோ பெறப்படவில்லை. வியாபார உரிமம் பிரதேச சபையால் வழங்கப்படவில்லை. ஆனால், ஹோட்டலில் மதுபானத்திலிருந்து தென்னிலங்கையின் ஸ்ரார் ஹோட்டல் களில் உள்ள அனைத்தும் உள்ளன. அரச அதிகாரிகள் இதனைக் கண்டும் காணாதிருப்பதும் மாறாக எமது மக்களுக்குப் பல்வேறு இடைஞ்சல்களைக் கொடுத்து அலைக்கழிப்பதும் மக்களுக்கு ஆத்திரத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தி யுள்ளது.

வசாவிளான், மயிலிட்டி போன்ற பொன்விளையும் செம்பாட்டு நிலங்களில் தென்னிலங்கை பௌத்த சிங்களவர் விவசாயம் செய்கின்றார்கள். எமது மக்கள் அகதி முகாம் களுக்குள் குடிசைகளுக் குள் வாழ்கிறார்கள். பிள்ளைகளின் திருமணத் துக்கு சீர்செய்ய முடியாத நிலையில் அவர்களின் பல ஏக்கர் காணிகள் இராணுவத்திடம் உள்ளன.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயச் சூழலை புனிதப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்தி, அரச மரத்தை நாட்டி கௌதம புத்தரின் சிலையை அங்கு நிறுவுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவரும் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவருமாகிய கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் துணிச்சலாக அந்தப் பிரதேசத்தில் ஒரு சைவ மண்டபத்தை நிறுவி, சுற்றிவர மிகப் பாரிய குத்துவிளக்குகளை வைத்து இந்துப் பிரதேசமாகக் கீரிமலையைக் காப்பாற்றி உதவினார்.

தற்போது அமைந்துள்ள நல்லாட்சியில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சியில் உள்ளனர். ஜனாதிபதியின் செல்லப் பிள்ளைகளாக இவர்களில் சிலர் உள்ளனர். அவர்கள் எமது மக்களுக்கு முதலில் ஆற்ற வேண்டிய பெருங்கடமை அவர்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே! இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தான் கல்வி கற்ற பாடசாலையை எப்பாடு பட்டாவது அதன் சொந்த இடத்துக்குக் கொண்டுபோக வேண்டியது அவரின் பாரிய பொறுப்பாகும். பெற்ற தாய், கற்ற பாடசாலை, பிறந்த மண் இந்தளவும் ஒருவன் முதலிடத்தில் வைத்துப் போற்ற வேண்டியவை. எமது தலைமைகள் மீள்குடியேற்றத்துக்கும் நடேஸ்வரக் கல்லூரியின் மீளியக்கத்துக்கும் வழி சமைப்பார்களா?

தமிழ்திரன்


கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்


தல்சவின ஹோட்டல்


## தினச்செய்தி விளம்பரக் கட்டணம்

Thinacheithi Weekly Newspaper Advertisement Rate Card

| PagesSizes | (col /cm) | Black & White | Color |
|---|---|---|---|
| Full page | 08x40 | 30000 . 00 | 50000 . 00 |
| Half page | 08x20 | 15000 . 00 | 25000 . 00 |
| Qatar page | 04x20 | 7500 . 00 | 12500 . 00 |
| Per col cm | 01x01 | 95 . 00 | 160 . 00 |
| **Front Page** | | | |
| Front - strip ad | 8x5 | 5000 . 00 | 8000 . 00 |
| Front height ad | 3x15 | 6000 . 00 | 9000 . 00 |
| Per col /cm | 1x1 | 120 . 00 | 200 . 00 |
| Ear space advertisements | 6x6 cm | 1500 . 00 | 2500 . 00 |
| **Back page** | | | |
| Ear space back page | 6x6 cm | 1000 . 00 | 2000 . 00 |

**Obituary/ Death notice / Birthday greeting/ Wedding notice & greeting/ Invitation**

**Per col/cm 1x1 Black &White 60.00 Color 110.00**

Election Notice & Meeting

Per col/cm 1x1 Black &White 120.00 Color 200.00

**Classified Advertisement:**

***First 20 words 150.00 Additional word 10.00***

தினச்செய்தி

T.P : 021 7539300
Fax : 021 2242139
E-mail : thinacheithiadvt@gmail.com
Web : www.thinacheithi.com / lk

# சலரோக நோயாளர்களுக்கு சில ஆலோசனைகள்

சலரோக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது உடல்நிலையை எவ்வாறு பேணுவது தொடர்பான சில ஆலோசனைக் குறிப்புகள்.

தலை – ஒரு கிழமையில் இரண்டு தடவையாவது தலையைக் கழுவுங்கள் (முழுகுதல்), சொடுகு, பேன் என்பன தலையில் தொற்றாமல் பாதுகாருங்கள். தனியான சீப்பு, துவ்ாய என்பவற்றைப் பாவிக்கவும். தலையில் கடி ஏற்படும்போது கை நகங்களாலும், சீப்பினாலும் சொறிவதைத் தவிர்க்கவும். இவற்றுக்கு வைத்திய ஆலோசனை பெறுவது நன்று. சூடான அரப்பு, சீயாக்காய், தேசிக்காய், சூடான வெந்நீர், என்வற்றையும் பாவிப்பதைத் தவிர்க்கவும். Clip, Hairpin என்பவற்றை தலையில் காயம் ஏற்படும் வண்ணம் ஏற்றுவதைத் தவிர்க்கவும்.

கண்கள் – குளிர் நீரில் கழுவுதல் வேண்டும். துடைக்கும் போது சுத்தமான துணியால் துடைக்கவும், மயிர் கொட்டிகள் பெருகும் காலத்தில் மிகவும் கவனமெடுக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டால் உடன் வைத்திய உதவியை நாடவும்.

முகம் – காரமற்ற சவர்க்காரம் (Soap) போட்டுக் கழுவுவதுடன், முகத்தில் பருக்கள் ஏற்பட்டால் நக்கதால் கிள்ளுவதையும், துவாயால் தேய்ப்பதையும் தவிர்க்கவும் சவரத்தின் போது காயம் ஏற்படாமல் தவிர்க்கவும்.

வாய் – காலை, மாலை மெல்லிய தூரிகை கொண்டு பற்பசையால் விளக்கவும். கரி, வெப்பம் குச்சி, பற்பொடி பாவிப்பதை தவிர்க்கவும். உணவு உண்ட பின் வாயை நீரில் நன்றாகக் கழுவவும், ஊசி, குச்சியால் ஈறுகளைக் குத்துவதை தவிர்க்கவும். வெற்றிலை, சுண்ணாம்பு பாவிப்பதை நிறுத்தவும். பல் அழற்சி சூத்தை ஏற்பட்டால் உடன் வைத்திய உதவியை நாடவும். சூடான உணவு தேநீர் என்பவற்றைத் தவிர்க்கவும்.

**காது** - ஆழமாகச் சுத்தப்படுத்துவதையும், Clip ஊசி என்பன பாவித்துக் கிண்டுவதையும் தவிர்க்கவும், காதடைப்பு, காது வலி ஏற்பட்டால் உடன் வைத்தியரை நாடவும்.

**மூக்கு** – தினமும் சுத்தமான துணியால் சுத்திகரித்தல் வேண்டும்.

**தோல் சுத்தம்** – காலை, மாலை (SOap) கொண்டு குளிக்கவும். சுத்தமான ஆடை அணியவும். குளிக்கும் போது நகம் வேறு கடினமான பொருள்களால் தேய்ப்பதைத் தவிர்க்கவும். உள்ளாடைகள் ஒவ்வொரு நாளும் தோய்த்துப் பாவிப்பதுடன் இறுக்கமான ஆடைகள் அணிவதைத் தவிர்க்கவும். வெயில் காலங்களில் மெல்லிய பருத்தி ஆடைகளும், குளிர் காலங்களில் தடித்த ஆடைகளும் அணியவும்.

**பாதங்கள்** – முகத்துக்கு கொடுக்கும் முதலிடம் பாதத்துக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும். காலை மாலை சவர்க்காரம் போட்டு கழுவவும். ஈரமற்ற நன்றாக காய்ந்த துவாயால் துடைத்த பின் முகப்பவுடர் போடவும். இரவில் பாதங்களுக்கு எண்ணெய் பூசவும், பித்த வெடிப்பு ஏற்படாமல் பாதுகாக்கவும். பாதத்தை கடினமான இடங்களில் தேய்ப்பதையும், கடிக்கும் போது ஆழமாகச் சொறிவதையும், கால் வலிக்கும் போது அதிக சூடுநீரில் காலை அமுக்குவதையும், சூடான பொருள்களால் ஒத்தடம் கொடுப்பதையும் தவிர்க்கவும். நகங்களை வட்டமாக வெட்டவும். மழை காலங்களில் சிரங்கு ஏற்படாமல் தவிர்க்க நனைந்த கால்களை சவர்க்காரம் கொண்டு கழுவுங்கள். பின் துணியால் ஈரமறத் துடைத்த பின் முகப்பவுடர் போடலாம். கால்களுக்கு பாதணிகள் பாவிக்க வேண்டும். கால்களுக்கு பாதணிகள் வாங்கும் போது இறுக்கமான, வெட்டக்கூடிய, தடிப்பான பாதணிகள் வாங்க வேண்டாம், புதுச்செருப்பு கடிக்கும் என்பார்கள். ஆகையால் புதிதாக வாங்கியவற்றைக் கழுவியோ அல்லது உட்புறமாக எண்ணெய், சவர்க்காரம் என்பவற்றைப் பூசிய பின்போ பாவிக்கலாம். கால்கள் கற்கள் போன்றவற்றால் காய மடையாமல் பாதுகாக்கவும்.

**கைகள்** – நகங்களை ஒழுங்காக வெட்டவும், சமைக்கும் போது வேறுவேலை செய்யும்போது காயம் ஏற்படாமல் பாதுகாக்கவும். அதிக சூடான பொருள்களைப் (சுடுநீர், கஞ்சி) பாதுகாப்புடன் கையாளவும். வெளியில் சென்று வந்த பின்பும், சாப்பிட முன்பும், மலசல கூடத்தைப் பாவித்த பின்பும், சமைக்க முன்பும், குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தியாக்க முன்பும், பின்பும் கையை சவர்க்காரம் கொண்டு கழுவவும்.




**முதுகு** – நன்றாகச் சவர்க்காரம் கொண்டு கழுவவும். சுத்தம் செய்யும் போது மரங்களில் தேய்ப்பது, கடினமான பொருள்களால் தேய்ப்பது என்பவற்றைத் தவிர்க்கவும்.

**கழிவிட அயல்பாகம்** – ஒவ்வொரு முறையும் கழிவறைக்குப் போன பின்பும் சவர்க்காரம் கொண்டு கழுவுதல் வேண்டும். தோல்வியாதி ஏற்படாமல் பாதுகாத்தல் அவசியம்.

பொதுவாக வியர்வை தங்கும் இடங்களான கால்களின் இடைப் பகுதி (அரை), கமக்கட்டு, மார்பின் கீழ்ப்பகுதி (பெண்கள்) தொப்புள் என்பன சவர்க்காரம் கொண்டு கழுவி காயம் ஏற்படாத வண்ணம் அழுக்கு நீக்கப்பட வேண்டும். பெண்கள் மாதவிடாய் காலங்களில் அடிக்கடி சுத்தமான (Pad) மாற்றி நன்கு கழுவி நலம் பேண வேண்டும்.

கர்ப்ப காலத்தில் பெண்கள் தமது உடலில் அதிக கவனம் செலுத்து வதுடன் குழந்தைப் பராமரிப்பிலும் சுத்தம் பேண வேண்டும்.

எஸ். பாலசுந்தரம்
தாதிய பயிற்சி கல்லூரி
யாழ்ப்பாணம்

# கேள்விக்கு என்ன பதில்

**நாளாந்தம் பசுப்பால் அருந்துவதால் சளிபிடிக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?**

சிலருக்கு பால்குடிக்கும் போது சளிபிடிப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படுகிறது. இதற்கு காரணம் பசுப்பாலிற்கு அவர்களில் ஏற்படும் ஒரு ஒவ்வாமை வகையான வெளிப்பாடாகும். பால்குடிக்கும்போது சளிபிடிக்கும் தோற்றப்பாடு ஒரு பிரச்சினையாக அமைந்தால் பசுப்பால் குடிப்பதை நிறுத்திக் கொள்வது நல்லது.

எனவே நீங்கள் பால் குடிப்பதை நிறுத்திவிட்டு பால்மா வகைகள் அல்லது ஆட்டுப்பாலைப் பாவித்துப் பாருங்கள் அதனால் உங்களிற்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாவிடின் தொடர்ந்து பாவிக்கலாம்.

உங்களிற்கு எல்லா வகையான பால், பால்மா, பால் சேர்த்த உணவுவகைகள் அனைத்திற்கும் ஒவ்வாமை வகையான தாக்கம் ஏற்படின் பால் உற்பத்தி பொருட்கள் பாவனையை முற்றிலும் நிறுத்திவிட்டு வேறு வகையான புரதங்களை, சோயா, பால், முட்டை, மீன், என்பவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

*** எனது வயது 30 நீரிழிவு நோயினால் பாதிக்கப் பட்டுள்ளேன். ஆனால் தற்போது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. ஆனால் உடல் மெலிவடைந்து உள்ளது. உடல் குண்டாக என்ன செய்ய வேண்டும்?**

உங்கள் நீரிழிவு நிலை கட்டுப்பாட்டில் இருப்பது மகிழ்ச்சியான விடயம். நீங்கள் திட்டமிட்ட உணவு முறை மூலம் உங்களின் நிறையை அதிகரிக்க முடியும். காலை உணவை நேரகாலத்துடன் ( 7 மணி) உண்ண வேண்டும்.

பால், தேநீர் போன்றவற்றை உணவு உண்ட பின் அருந்தவும். உணவின் முன் அருந்துவீர்களாயின் அது உங்கள் பசியைக் குறைக்கும். முழு ஆடைப் பால் நாளொன்றுக்கு 2 கப் வரை அருந்த முடியும். உணவுண்ணும் அளவையும், தடவைகளையும் அதிகரித்துக் கொள்ளுங்கள், உங்களுக்கு இலகுவில் ஜீரணிக்கக் கூடியதாக உணவுப் பொருட்களைத் தெரிவு செய்து உண்ணவும். சீனி, சர்க்கரை சேர்த்த உணவுப் பொருட்களைத் தவிர்த்து விட வேண்டும்.

உங்களது உடல்நிறை தொடர்ந்து குறைந்து வருமாயின் அது பற்றி உங்கள் வைத்தியரிடம் தெரி வித்து உடல்நிறை இழப்பு வேறு நோய் நிலைமை களால் ஏற்பட்டதா என அறிந்து கொள்ளுங்கள்.

**- நன்றி -**

**நீரிழிவு சிகிச்சை நிலையம்**

# எந்தப் பூச்சிக் கடிக்கு என்ன மருந்து?

நாட்டு மருத்துவமுறை பெரும் பாலும் கிராமப்புறத்தில் மட்டுமே பின் பற்றப்பட்டு வருகிறது. ஆனால், ஆங்கில மருத்துவமுறையை விட நாட்டு வைத்தியம் எவ்வளவோ சிறப்பானது.



நாட்டு வைத்தியத்தால் குணப்படுத்தமுடியாத நோய்களே இல்லை. நாட்டு வைத்தியம் மூலமாக பூச்சிகள் கடித்து விட்டால் அது எந்தப் பூச்சி என்பதையும், அதன் நஞ்சை முறிக்கும் முறையையும் நாட்டு வைத்தியம் கூறுகிறது.

**கடிகளைக் கண்டறிதல்:**

இரவில் நச்சுப்பூச்சி ஏதேனும் கடித்து விட்டால், என்ன கடித்தது என்பதை அறியாமல் மருத்துவம் செய்வது கடினம். இந்நிலையில் கடிபட்டவருக்கு ஆடு தின்னாப்பாளை என்ற செடியின் வேரைக் கொடுத்துச் சுவைக்கச் சொன்னால், இனிப்புச் சுவையாக இருந்தால் கடித்தது நல்ல பாம்பு என்றும்.. புளிப்புச் சுவையாக இருந்தால் கட்டு விரியன் பாம்பு என்றும்... வாய் வழவழப்பாக இருந்தால் நஞ்சு குறைந்த வழலைப்பாம்பு, நீர் பிரட்டை போன்றவை என்றும். கசப்புச் சுவையாக இருந்தால் பாம்பு வகைகள் அல்லாத வேறு பூச்சிகள் என்றும் அறிந்து உணரலாம்...

**தேள் கடி மருந்துகள்:**

எலுமிச்சைப் பழ விதைகளையும், உப்பையும் கலந்து அரைத்துக் குடித்து விட்டால் தேள் கடி நஞ்சு இறங்கி விடும். கடிவாயில் எலும்மிசைப் பழ இரசத்தையும் உப்பையும் கலந்து தடவினால் நலம் கொடுக்கும்.

கல்லில் சில சொட்டுத் தண்ணீரை தெளித்து அதில் புளியங் கொட்டையைச் சூடு உண்டாகும் படி தேய்த்து, தேள் கடித்த இடத்தில் உடனே வைத்தால் ஒட்டிக் கொள்ளும். நஞ்சு இறங்கியதும் புளியங்கொட்டை விழுந்து விடும்.

சிறிது நாட்டு வெல்லத் தூளுடன் கொஞ்சம் சுண்ணாம்பு சேர்த்துச் சிறிதளவு புகையிலையையும் கலந்து நன்றாகப் பிசைந்து தேள் கடித்த இடத்தில் வைத்துக் கட்டினால் நஞ்சு இறங்கி விடும். கண்ணாடி இலையின் பால் எடுத்துத் தேள் கடித்த இடத்தில் வைத்தால் நஞ்சு இறங்கும்.

பட்டு ரோஜா (டேபிள் ரோஜா) செடியின் இலையின் நான்கை எடுத்து வெற்றிலையில் மடித்துத் தின்றால் நஞ்சு இறங்கும்.

குப்பை மேனி இலையைப் பறித்து நன்றாக நீரில் கழுவி விட்டுப் பின்பு கசக்கிச் சாறு எடுத்துத் தேள் கடித்த இடத்தில் தடவ வேண்டும். அத்துடன் கசக்கிய இலையைக் கடிவாயில் வைத்துக் கட்டி விட்டால் நஞ்சு இறங்கும்.

சித்த மருத்துவத்தில் ஒரு பொருளை மட்டும் மருந்தாகப் பயன்படுத்தும் முறைக்கு ஒற்றை மருத்துவம் என்று பெயர். நட்டுவாய்க்காலி கொட்டினால் கொப்பரைத் தேங்காயை வாயில் போட்டு மென்று தின்றால் உடன் நஞ்சு நீங்கும். பூரான் கடித்தால் பனை வெல்லத்தை (கருப்பட்டி) தின்னத் தடிப்பு, அரிப்பு உடனே மாறும்.

**வெறி நாய் கடித்து விட்டால்:**

நாயுருவியின் வேரும் எலுமிச்சைப் பழத்தின் விதையும் சம பாகமாகச் சேர்த்து எலுமிச்சைச்சாறு விட்டு அரைத்து வைத்துக்கொண்டு அதில் எலுமிச்சைப் பழம் அளவிற்குக் காலையிலும் மாலையிலும் ஒரு உருண்டை வீதம் பத்து நாள் உட்கொண்டால் வெறிநாய்க்கடி குணமாகும்.

**பாம்பு கடித்து விட்டால்:**

உடன் வாழை மரம் ஒன்றை அடியிலும் நுனியிலும் வெட்டி ஆறு அடி நீளத் துண்டிட்டுக் கொண்டு வரவேண்டும். பாம்புக்கடி பட்டவன் பல் கட்டி வாய் திறக்க முடியாமலிருப்பான். அதனால் வாழைப்பட்டையை உரித்துப் பாயாகப் பரப்பிக் கடிபட்டவனை அதில் படுக்க வைக்க வேண்டும்.

பின் வாழைப்பட்டைச் சாறு 1 லிட்டர் பிழிய வேண்டும். சாறு பிழிவதற்குள் வாழைப்பட்டையில் படுக்க வைத்தவன் பல் கட்டு நீங்கி வாய் இயல்பாகத் திறக்கும். உடன் ஒரு லிட்டர் வாழைப்பட்டைச் சாறையும பாம்புக் கடிபட்டவனைக் குடிக்கச் செய்ய வேண்டும். 15 நிமிடத்தில் பாம்பு கடிபட்டவன் நஞ்சு நீங்கி எழுந்து நடப்பான்.

**எலி, பெருச்சாளி, மூஞ்சூறு, தேள், பூரான் போன்றவைகளின் நஞ்சை நீக்க:**

நாயுருவியின் விதையை வீசும் படி எடுத்து வெயிலில் காய வைத்துப் பொடி செய்ய வேண்டும். இந்தப் பொடியை நல்ல மூடியுள்ள பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நஞ்சு நீங்கத் தேவையான காலத்தில் இந்தப் பொடியில் மூக்குப் பொடி அளவு எடுத்துத் தேனில் குழைத்துக் காலையிலும், மாலையிலும் 25 நாட்கள் சாப்பிட வேண்டும். இப்படிச் சாப்பிட்டால் நஞ்சு நீங்கும். உட்லுகக்குள் சென்ற எந்த நஞ்சாக இருந்தாலும் வாந்தி ஏற்படுத்துவதன் மூலம் நஞ்சை வெளியேற்றலாம்.

வாந்தி ஏற்படுத்துவதற்கு நஞ்சிலைப் பறிச்சான் என்ற செடியின் வேருடன், தலைச்சுருளி என்ற பெரு மருந்து இலையைச் சேர்த்து நன்றாக அரைந்து எலுமிச்சைப்பழம் அளவு உருண்டை எடுத்து வெந்நீரில் கலந்து குடித்தால் உடனே வாந்தி ஏற்பட்டு அனைத்து நஞ்சும் அதன் மூலம் வெளியேறிவிடும். வாந்தி ஏற்பட்ட பின்பு எலுமிச்சைப் பழத்தைத் தண்ணீரில் பிழிந்து குடித்து விட்டால் நஞ்சு முறிந்து போகும் சித்த மருத்துவம் ஏராளமான மூலிகைகளை நமக்குக் கூறுகின்றது. நஞ்சு நீக்கத்திற்கு மட்டுமன்றி, மனிதனின் அகப்புற உறுப்புக்களைத் தாக்கும் எல்லாவிதமான சிறு, பெரு நோய்களுக்கும் மருந்துண்டு

# லங்கா ராணி ...

"யாழ்ப்பாணத்துக்கு எப்போ சென்றடையும்?" குமார் வினவினான். "நாளை மறுநாள் அங்கு செல்லலாம் என எதிர்பார்த்திருக்கின்றோம். நேரத்தைக் குறிப்பாக என்னால் சொல்ல முடியாது." "யாழ்ப்பாணம், எந்த துறைமுகத்துக்கு கப்பல் செல்லும்?" மேலும் குமார் கேட்டான்.

"இதுபற்றியும் எனக்குத் தெரியாது. காங்கேசந்துறை அல்லது பருத்தித்துறையாகத்தான் இருக்க வேண்டும். இதுபற்றி பின்பு எங்களுக்கு அறிவிக்கப்படும்." கப்டன் கூறிவிட்டு இளைஞர்களிடமிருந்து மேலும் வினாக்களை எதிர்பார்த்தார்.

"மன்னாரிலிருந்து சுமார் 50 பேர் இருக்கின்றார்கள். இவர்களை மன்னாரிலேயே இறக்கி விட்டாலல்லவா?" ஆலோசனை கூறுவதுபோல் மீண்டும் குமார் கூறினான்.

"இல்லை... இல்லை... நாங்கள் மன்னார் வழியாகப் போகவில்லை. காலி, மட்டக்களப்பு, திருகோணமலை சுற்றிப் போகின்றோம். மன்னார் கடல் ஆழம் இல்லாதது. அப்பகுதியால் இக்கப்பலைச் செலுத்த முடியாது." கப்டன் பதிலளித்தார்.

கப்டனை மேலும் கீழுமாகப் பார்த்துக் கொண்டிருந்த சரவணன் குறுக்கிட்டு, "அகதிகளை ஏற்ற கப்பல் மீண்டும் வருமா?" என்றான்.

கப்டன் சற்று யோசித்தபின், "அநேகமாக வராது நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சிங்கப்பூர் போகலாம் என எதிர்பார்க்கின்றோம். இதுபற்றியும் பின்புதான் எங்களுக்குத் தெரியும்" என்றார்.

இதேசமயம் தேவன் பக்கத்திலிருந்த குமாரிடம் மெதுவாக "இரவுச் சாப்பாடு"? என்று ஞாபகமூட்டினான்.

சற்று யோசித்த குமார், "அதைக் கேட்கத் தேவையில்லை விடு." என மெதுவாகத் தமிழில் கூறினான்.

டாக்டர் நற்குணம் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தார். இளைஞர்களில் தாமும் ஒருவர் என கப்டனுக்கு காட்டிக் கொள்ளாமல் இருக்கவே விரும்பினார். வேறு பேச எதுவும் இல்லாததனால் இருக்கையை விட்டு எல்லோரும் எழுந்தனர். உதவியாளரைக் கூப்பிட்டு கப்டன் "இவர்களுக்கு சமையலறைப் பகுதியை காட்டு" என உத்தரவிட்டார்.

உதவியாளரை பின்தொடர்ந்து நால்வரும் படிகளில் இறங்கினர். இடதுபக்கம் இருந்த இரும்புக் கதவைத் திறந்து கொண்டு உதவியாள் உள்ளே நுழைந்தார். உள்ளே நீளமான வழிதென்பட்டது. இருமருங்கிலும் அறைகள் காணப்பட்டன. மீண்டும் இடது பக்கம் இருந்த அறையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார். இளைஞர்களும் நுழைந்தனர். மின்சார அடுப்புக்களுடன் கூடிய சமையலறை இருந்தது. மின்சார அடுப்புக்களை இயக்கும் முறையை விளக்கிய உதவியாளர் மேசையில் இருந்த கத்திகளைக் காண்பித்து, "இரண்டு கத்திகள்தான் உள்ளன அவற்றை வைத்து சமாளித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

"சமாளித்துக் கொள்வோம்" என எல்லாம் விளங்கிக் கொண்டவன் போல் குமார் கூறினான்.

தலையசைத்த வண்ணம், உதவியாளர் விடை பெற்றார். டாக்டர் நற்குணமும் விடைபெற்று தனது அறைக்குச் சென்றார். சரவணன் மேசையிலிருந்த கத்திகளை எடுத்து கூர்பார்த்தான். தேவன் மீண்டும் சாப்பாட்டுப் பிரச்சினையை எழுப்பினான்.

குமார் சற்று யோசித்த பின், "தேவையில்லை; காலையில் பார்த்துக் கொள்ளலாம். எல்லோரும் சாப்பாட்டை மறந்து விட்டார்கள்" என்றான்.

மாலையில் ஆறு மணிக்கே முகாம்களிலிருந்து அகதிகளை பஸ்களில் ஏற்றி, பலத்த இராணுவப் பாதுகாப்புடன் துறைமுகத்துக்கு கொண்டுவந்து, எட்டு மணிக்கு கப்பலில் ஏற்றி விட்டார்கள். செல்லும் படிகள், பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டிருந்ததால் பெட்டி பொருட்களுடன் இறங்குவது பெரிதும் சிரமமாய் இருந்தது. அதிலும் வயோதிபர்கள், குழந்தைகள், காயப்பட்டவர்கள் பெரிதும் சிரமப்பட்டனர். இவர்களுக்குத் தொண்டர்கள் உதவி செய்தனர். பெட்டிகளை கயிற்றில் கட்டிக் கீழே இறக்கினர். சிலர் சிரமத்துடன் தங்கள் பெட்டிகளுடன் தாங்களே இறங்கினர். வீடுகளை விட்டு அவசரமாக வெளியேறியதால் விலையுயர்ந்த பொருட்களைமாத்திரம் பெட்டியில் அடைத்துக்கொண்டு வந்திருந்தனர். ஒன்றும் இல்லாதவர்களும் உண்டு. ஒரு குடும்பத்தினர், மூன்று இரும்புப் பெட்டி, நான்கு சூட்கேசுகள் ஆறு சீலைப் பொட்டலங்கள், ஒரு கிளிக்கூடு, ஒரு நாய்க்குட்டி இவை கூட எடுத்து வந்திருந்தனர். அந்நாய்க் குட்டியை பெல்பொட்டம் அணிந்த மங்கை வைத்துக் கொண்டு இறங்கப் போனாள்.

**லெபனானுக்கு ஆயுதப் பயிற்சிக்குச் சென்ற முதல் 3 தமிழர்களில் அருள்பிரகாசமும் ஒருவராவார். இவர் அவரது நண்பர்களால் அருளர் என அழைக்கப்பட்டார்.**

தொண்டன் ஒருவன் நாய்க்குட்டியை வாங்கிக கொண்டு அவளை இறங்க வைத்தான். பலத்தகாயம் பட்டவர்கள் பயணிகளாக கப்பலில் வர அனுமதிக்கப்படவில்லை. அவர்களை விமானம் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி இருந்தார்கள். விமானத்தில் பயணம் செய்ய முடியாத நிறைமாதக் கர்ப்பிணிகள் இக் கப்பலில் பிரயாணம் செய்தனர்.

இப்போது நேரம் இரவு பத்து மணி. ஆயிரத்து இருநூறு பேருக்கு உணவு பரிமாற விடிந்து விடும். இது முடியாத காரியம் என இளைஞர்களுக்குத் தெரிந்தது. கீழ்த்தளத்தில் தூங்குவதற்கு பலர் ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். இளைஞர்கள் நாளைய ஏற்பாடுகளைப் பற்றி விவாதித்த பின் சமையலறையிலேயே படுக்கைகளை விரித்துக் கொண்டனர்.

சரவணனுக்கு தூக்கம் வரவில்லை. அங்கிருந்த காகிதப் பெட்டியைக் கிழித்துப் போட்டு அதன்மேல் படுத்திருந்தான். சிகரெட் புகையை ஊதிக் கொண்டிருந்தான்.

கலவரம் தொடங்கிய அடுத்த நாளே பாதுகாப்புக் கருதி கட்டுப் பெத்த தொழிநுட்பக் கல்லூரி மாணவர்களை கொழும்புக்கு அனுப்பி விட்டார்கள். இவர்கள் கொழும்பு இந்துக் கல்லூரியில் தஞ்சம் புகுந்தார்கள். இதுவே முதல் அகதிகள் முகாமாக மாறியது. பின்பு கலவரம் பரவியது. சிங்களக் காடையர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று, கொலை, கொள்ளை, தீ வைப்பதில் ஈடுபட்டனர். தெஹிவளை, இரத்மலானை, களுபோவில, கல்கிசை போன்ற கொழும்பை அடுத்த பகுதிகளில் கலவரம் மோசமடைந்தது. ஒருசிலர் தமது சொந்தக்கார்களில் ஏறி அகதிகள் முகாமை அடைந்தனர். இவர்கள் கொடுத்த தகவல்களின்படி வேறு வாகனங்களில சென்று அவ்வப் பகுதித் தமிழர்களை இராணுவப் பாதுகாப்புடன் அகதிகள் முகாமுக்கு ஏற்றி வரவேண்டியதாயிற்று. சரவணன் இவ் வேலைகளில் தூக்கமில்லாமல் ஈடுபட்டான். பஸ் வண்டிகளைகொண்டு போய் நிறுத்தியதும், தமிழர்கள் ஓடி வந்து பஸ்களில் ஏறினார்கள்.

இலங்கையின் சிங்களப் பகுதிகளில் இருந்து ஆயிரமாயிரம் தமிழர்கள், பல்வேறு முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். இவர்களை தமிழ்ப் பிரதேசமாகிய யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப ஏற்பாடுகள் நடந்தன. கொழும்பில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அநேகருக்கு யாழ்ப்பாணத்தில் உறவினர்கள் இருந்தார்கள். இதனால் கப்பல் யாழ்ப்பாணத்திற்கு அகதிகளுடன் புறப்பட்டிருந்தது. அரசாங்கமோ பஸ்களிலும், புகைவண்டியிலும் ஏற்றிச் செல்ல முதலில் முயற்சித்தது. புகையிரதங்களை சிங்களக் காடையர்கள் வழி மறித்து தாக்கியிருந்ததால் தமிழர் அதில் போகத் தயங்கினர். கப்பலில் போக விரும்பினர். கப்பலில் அனுப்ப அரசாங்கம முதலில் தயங்கியது. இதனால் ஒருசிலர் உண்ணா விரதம் இருக்கத் தீர்மானித்தனர். வேறு வழியின்றி அரசு லங்கா ராணியையும் வேறு இரு கப்பல்களையும் ஏற்பாடு செய்தது. லங்கா ராணியில் யாழ்ப்பாணத்தைச சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, மலைநாடு போன்றபகுதிகளைச் சேர்ந்தவர்களும் பயணம் செய்தனர். கொழும்பில் நிரந்தரமாக குடியிருந்தவர்கள் கூட கப்பலில் வந்து கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் எவ்வித உறவினர்களும் இல்லாதவர்கள் சுமார் 400 பேர் இதில் இருந்தனர்.

(தொடரும் .....)

# தமிழருடன் அன்னியோன்னியமாக யாழில் உறவை வளர்த்த முஸ்லிம்கள்

முன்னொரு காலத்தில் தமிழர்களாகிய நாம் முஸ்லிம் மக்களுடன் எவ்வாறு ஒட்டி உறவாடினோம் என்பதை இன்றைய இளம் சமுதாயமும் முதியவர்களும் மறந்துவிட்டனர் என்றே கூறலாம். அதுமட்டுமன்றி முஸ்லிம் மக்கள் யாழ். மண்ணுக்குப் புதியவர்கள் என்ற எண்ணம் எம்மத்தியில் தோன்றுவது தவறானது. அவ்வாறு முஸ்லிம்களை யாழ். மண்ணுக்குப் புதியவர்கள் என்று எண்ணுவதற்கு காரணம் 25 வருடங்களுக்கு முன்னர் இங்கிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் அவர்களுடனான எந்தவித உறவுகளோ? தொடர்பாடல்களோ? இடம்பெற்றிருக்கவில்லை என்பதேயாகும்.

ஆனால் முன்னொருகாலத்தில் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் ஒற்றுமையான, மகத்துவமான நட்புறவை கொண்டிருந்தனர். அதுமட்டுமன்றி அவர்கள் இந்த யாழ். மண்ணிலே நீண்டகாலமாக கல்வி, தொழில் சார்ந்த துறைகளில் தம்முடைய பங்களிப்பினை அதிகளவில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக தமிழ், முஸ்லிம் ஆகிய இரு சமூகங்களும் ஒன்றிணைந்து வாழ்வதற்கு மிகமுக்கியமாக இருந்தது கல்வியே ஆகும்.

கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் ஒஸ்மானியாக் கல்லூரி இல்லாத காலத்தில் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களின் கத்தோலிக்க, இந்து பாடசாலைகளிலேயே கல்வி கற்க வேண்டியதேவை ஏற்பட்டது. அவ்வாறு அவ்ரகள் தமது கல்வியைக் கற்கின்ற போது அவ்ரகளிடையே எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளோ, முரண்பாடுகளோ ஏற்படவில்லை.

யாழ். மத்திய கல்லூரியைப் பொறுத்தமட்டில் அங்கு கல்வி கற்ற மாணவர்கள் தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி ஒற்றுமையாகவே வாழ்ந்ததை இங்கே குறிப்பிடமுடியும்.

உதாரணமாக முஸ்லிம்களின் தொழுகை நேரங்களில் கூட தமிழ் மாணவன் ஒருவனுக்கு காயம் ஏற்பட்டுவிட்டதென்றால் தொழுகையையும் பொருட்படுத்தாது உடனே அவனுக்கு முதலுதவி அளித்துவிட்டுத்தான் பின்னர் தமது தொழுகையை ஆரம்பிப்பார்கள். இதுவே அவர்கள் தமிழ் மக்களுடன் வைத்தி ருந்த நட்புறவுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது.

அதுமட்டுமன்றி யாழ். மத்திய கல்லூரி கிறிஸ்தவ பாடசாலையாக இருந்தாலும் அங்கு கல்வி கற்ற இந்து, முஸ்லிம் மாணவர்களை கட்டாயப்படுத்தி கத்தோலிக்க சமயத்தைக் கற்குமாறு எவரையும் நிர்ப்பந்திக்கவில்லை. இது எல்லாவற்றுக்கும் மேலாக காலையில் நடைபெறும் இறைவணக்க வழிபாட்டின் போது கத்தோலிக்க மதத்தைச் சாராத ஏனைய மாணவர்களுக்கு நீதி நூல்களில் உள்ள நல்ல விடயங்கள் பற்றி எடுத்துக்கூறி அவர்களை நல்வழிகாட்டினார்கள். கத்தோலிக்க மதத்திலுள்ள மாணவர்களை உயர்த்தி ஏனையவர்களைத் தாழ்த்தியோ அல்லது தண்டனைகளை வழங்கியோ பாகுபாடு காட்டவில்லை.



அதுமட்டுமன்றி போட்டிப் பரீட்சைகளுக்கு மத்தியிலும் முஸ்லிம் மாணவர்கள் தம்மால் கற்றுக்கொள்ள முடியாத தமிழ்ப் பாடத்தை தமிழ் மாணவர்களிடம் கேட்டுக் கற்றுக்கொள்வதுடன் தமிழ் மாணவர்களுக்கு விளங்காத பாடங்களை அவர்களுக்கு சொல்லிக் கொடுத்து தமது ஒற்றுமையை வெளிப்படுத்திக் கொள்வார்கள்.

யாழ். மத்திய கல்லூரியில் தமிழ் மாணவர்கள் எவ்வாறு துறைசார்ந்த கல்வியில் சாதனையாளராகத் திகழ்கிறார்களோ அவ்வாறே முஸ்லிம்களும் தமது கல்வியில் சிறந்து விளங்கியதுடன் சாதனையாளர்களாகவும் திகழ்ந்தார்கள். கடந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோட்டையில் இடம்பெற்ற தாக்கு தல்களின் போது யாழ். மத்திய கல்லூரியை கனகரத்தினம் மத்திய மகாவித்தி யாலயத்திற்கு மாற்றி மாலை நேர வகுப்புக்களை நடாத்துவ தற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அக்காலப் பகுதியில் பணியாற்றிய முஸ்லிம் கல்விப் பணிப்பாளர் ஒருவர் மத்திய கல்லூரியின் மாணவர்களின் எதிர்காலத்தையும் கல்வியையும் கருத்திற்கொண்டு கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்கு மாற்ற இடமளிக்க முடியாதென பல இன்னல்களுக்கு மத்தியில் போராடி பாடசாலையை அந்த இடத்திலேயே நடாத்தச் செய்தார்.

அதேபோல் யாழ். மத்திய கல்லூரியில் கல்வி கற்ற முஸ்லிம்கள் நாடாளுமன்ற உறுப்பினர் களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் மட்டக்களப்பு, மன்னாரிலிருந்து வந்து கல்வி கற்றவர்களாவார். அதுமட்டுமன்றி தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தும் ஒரு முஸ்லிம் வடமாகாணசபைக்கு தெரிவாகியுள்ளார். இதுவே தமிழ், முஸ்லிம்களுக்கான உறவை வெளிப்படுத்தியிருக்கிறது.

மேலும் மக்களின் பொருளாதார விடயத்தை பொறுத்தமட்டில் தமிழ் மக்களின் முக்கிய தொழிலான விவசாயத்தை முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்த போதுசெய்து வந்தனர். அதுவும் சாவகச்சேரி, பூநகரி போன்ற இடங்களிலேயே செய்து வந்தனர். அதேபோல் பொருட்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று விற்பனை செய்வதிலும், தையல் தொழிலிலும் கூடியளவு முஸ்லிம்களே ஈடுபட்டு வந்தனர். ஆனால் அவ்ரகள் தம்தொழில் நிறுவனங்களில் தமிழரை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு தொழிலைக்கற்றுக் கொடுத்தார்களே ஒழிய தமது தொழில் கெட்டுவிடும் என்று ஒருபோதும் எண்ணவில்லை. அப்படி அவர்கள் செயற்பட்டதனால்தான் முஸ்லிம்கள் யாழ். மண்ணை விட்டு வெளியேற்றப்பட்ட போது தமிழ் மக்கள் தொடர்ந்தும் தையல் மற்றும் பல தொழில்களைச் செய்யக்கூடியதாக இருந்தது.

அதுமட்டுமன்றி தமிழ் மக்கள் தமக்குத் தெரிந்த முஸ்லிம் மக்களிடம் பணம் தேவையென்றோ அல்லது உதவி தேவையென்றோ சென்றால் உடனே உதவி செய்வார்கள். அதுபோல சிவன் கோவில் ஆதன செட்டியார் முஸ்லிம்களின் வளர்ச்சிக்கு காணி வழங்கியதுடன் கே.கே.எஸ் வீதியில் உள்ள தமது ஆதனத்தில் கடை நடாத்தவும் உதவி செய்தார். அதுபோல புத்தூர் வடமராஜன் என்பவரும் அவர்களுக்கு இடம்கொடுத்ததுடன் கப்பலில் கொண்டுவரும் பொருட்களை இறக்கி வைக்க குருநகர் அலுப்பாத்தியில் உள்ள அவரின் கடைகளில் முஸ்லிம்களுக்கும் இடம் வழங்கி இருந்தமைகுறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்கள் யாழிலிருந்து வெளியேற்றப்பட்டதனால் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக நெருங்கிப் பழகும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளனர்என்பது மட்டும் உண்மை.

லக்ஷா

# பெண்கள் மீதான வன்முறை

## ஒரு நோக்கு



**பெண்களுக்கு எதிரான வன்முறை என்றால் என்ன?**

பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறையானது அவர்களது மனித உரிமைகளின் பாரதூரமான மீறலொன்றாகும். இது உடல் ரீதியானதும், பாலியல் ரீதியானதும், உளவியல் ரீதியானதுமான கெடுதல் அல்லது வன்முறையின் பயமுறுத்தல், பலாத்காரம் அல்லது சுதந்திரத்தைப் பறித்துக்கொள்ளல் ஆகியனவற்றை உள்ளடக்குவதுடன், பொதுவான அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் இடம் பெறவும் முடியும்.

பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை ஏதாவது தனித்த நாட்டுக்கு அல்லது பிராந்தியத்திற்கு மட்டுப் படுத்தப்பட்டதல்ல என்பதுடன், பலதரப்பட்ட சமூக–அரசியல், பொருளாதார, கலாசார, சமய, பழங்குடி மற்றும் இனத்துவ வழக்கங்கள் ஆகியவற்றின் காரணமாக பெண்களும், பெண் பிள்ளைகளும் வேறுபட்ட விதத்தில் அனேகமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இதனால்தான் இது பால்நிலை அடிப்படையிலான வன்முறை என வரையறுக்கப்படுகின்றது.

**யார் பாதிக்கப்படுகின்றார்?**

ஒவ்வொரு வயதையும், வகுப்பையும், இனத்துவத்தையும், சமயத்தையும், சாதியையும் மற்றும் அமைவிடத்தையும் சேர்ந்த பெண்களும், பெண்பிள்ளைகளும் பாதிக்கப்படலாம் என்பதுடன், பாதிக்கப்படுகின்றார்கள்.

**பெண்களுக்கு எதிரான வன்முறையின் மிகவும் பொதுவான வகைகள் எவை?**

பெண்களுக்கு எதிரான வன்முறையில் பெருமளவு வகைகள் உள்ளன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: அந்நியோன்யமான துணைவர் மூலமான வன்முறை, பாலியல் வல்லுறவு, திருமணம் சார்ந்த பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை அத்துடன்/ அல்லது தொந்தரவு, சீதனம் தொடர்பான வன்முறை, வாழ்க்கைத் துணை சாராத வன்முறை, வீட்டு வேலை ஆட்களுக்கு எதிரான வன்முறை, கேலி செய்தல், ஆட்கடத்தல் மற்றும் ஆபாசப் புகைப்படம் போன்ற சுரண்டலின் வேறு வடிவங்கள், சமூக வழக்கத்திற்கும், கலாசாரத்திற்கும், பாரம்பரியத்திற்கும் அத்துடன் / அல்லது சமயத்திற்குமான மேற்கோளினால் நியாயப்படுத்தப்பட்டு, கெடுதலை விளைவிக்கும் வழக்கங்களின் காரணமாக பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை.

**பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறையின் பொதுவான வகைகள்**

பெண்பிள்ளைகளுக்கு எதிரான வன்முறை மேற்படி விடயத்தை உள்ளடக்குவதுடன், பெண் சிசுக் கொலையையும், இளமைப் பருவத் திருமணத்தையும், நிர்ப்பந்தத்திலான திருமணத்தையும் உள்ளடக்கலாம்.

**இது எங்கு இடம்பெறலாம்?**

பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறை ஏதாவது இடத்தில் இடம்பெறலாம். இது வீட்டில், குடும்பத்தில் அல்லது சனசமூகத்தில், வேலை செய்யும் இடத்தில், பொது இடங்களில் மற்றும் போக்குவரத்தில், விசேடமாக இயற்கை அழிவுகளில், உள்நாட்டு மோதலில், யுத்தத்தில் மற்றும் கிளர்ச்சிகள் போன்ற பொது குழப்பங்களின் தருணங்களில் அத்துடன் இச் சூழ்நிலைகளின் காரணமாக உள்ளக ரீதியாக இடம்பெயரும் போது இடம்பெறலாம்.

**பெண்களுக்கு எதிரான வன்முறையினதும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையினதும் முறைமையான வரைவிலக்கணங்கள்**

பாகுபாட்டின் பிரச்சனையை முனைவுபடுத்துவதன் மூலம் பெண்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறையைப் புரிந்து கொள்வதற்கான அடித்தளத்தை பெண்களின் பாகுபாட்டின் சகல வடிவங்களை ஒழித்தல் மீதான சமவாயம் பெண்களுக்கு எதிரான சகலவிதமான பாரபட்சங்களை இல்லாதொழித்தல் மீதான சமவாயம் பெண்களுக்கு எதிரான வரையறுக்கப்பட்ட பாகுபாடு:

"..... அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, குடியியல் அல்லது ஏதாவது வேறு துறை ஆகியவற்றில் ஆண்களினதும், பெண்களினதும் சமத்துவத்தினதும், மனித உரிமைகளினதும், அடிப்படைச் சுதந்திரங்களினதும் அடிப்படையொன்றின் மீது, அவர்களது திருமணம் சார்ந்த நிலைக்கு அக்கறையின்றி பெண்கள் அங்கீகரிக்கப்படுவதை, மகிழ்ச்சியடைவதை அல்லது பழகிக் கொள்வதை பலவீனப்படுத்தும் அல்லது செல்லாததாக்கும் விளைவை அல்லது நோக்கத்தைக் கொண்டுள்ள பால்நிலையின் அடிப்படை மீது செய்யப்பட்டுள்ள ஏதாவது வேறுபாடு, தவிர்ப்பு அல்லது கட்டுப்பாடு."

எனினும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையை அங்கீகரிப்பதற்கும், வரையறுப்பதற்குமான முதலாவது சர்வதேச ஆவணமாக 1993 இல் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழித்தல் மீதான ஐ.நா. பிரகடனம் [UN Declaration on the Elimination of Violence against Women (DEVAW)] விளங்குகின்றது.

**பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான வரைவிலக்கணம் வருமாறு:**

***உறுப்புரை 1***

பெண்களுக்கு உடல்ரீதியான, பாலியல் ரீதியிலான அல்லது உளவியல் ரீதியிலான கெடுதலை அல்லது கஷ்டத்தை விளைவிக்கின்ற அல்லது அனேகமாக விளைவிக்கக் கூடிய அத்துடன் பொதுவான அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் இடம்பெற்றாலும், அத்தகைய செயற்பாடுகளின் பயமுறுத்தல்களும், சுதந்திரத்தின் பலாத்காரத்திலான அல்லது தன்னிச்சையிலான கவர்ந்து கொள்ளலும் உட்பட பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் ஏதாவது செயற்பாடு.

***உறுப்புரை 2***

பெண்களுக்கு எதிரான வன்முறையானது பின்வருவனவற்றுக்கு மட்டுப்படாமல் சூழப்பட்டுள்ளது என புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

அ) குடித்தனத்தின் சிறுமிகளின் பாலியல் துஷ்பிரயோகம், சீதனம் தொடர்பான வன்முறை, திருமணம் சார்ந்த பாலியல் வல்லுறவு, பெண் பிறப்புறுப்பைச் சிதைத்தல் மற்றும் பெண்களுக்கு கெடுதலான வேறு பாரம்பரியத்திலான வழக்கங்கள், வாழ்க்கைத்துணை சாராத வன்முறை மற்றும் சுரண்டல் தொடர்பான வன்முறை ஆகியன உட்பட குடும்பத்தில் இடம்பெறும் உடல்ரீதியானதும், பாலியல் ரீதியிலானதும் மற்றும் உளவியல் ரீதியிலானதுமான வன்முறை.

ஆ) வேலையிலும், கல்விசார் நிறுவனங்களிலும் மற்றும் வேறு எங்கினும் பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் தொந்தரவு மற்றும் பயமுறுத்தல், பெண்களைக் கடத்துதல் மற்றும் நிர்ப்பந்தத்திலான பாலியல் தொழில் ஆகியன உட்பட பொது சனசமூகத்தினுள் இடம்பெறுகின்ற உடல் ரீதியானதும், பாலியல் ரீதியிலானதும் மற்றும் உளவியல் ரீதியிலானதுமான வன்முறை.

இ) இழைக்கப்படுகின்ற அல்லது அது எங்கெங்கு நடந்தாலும் அரசாங்கத்தினால் கவனிக்காமல் விடப்படுகின்ற உடல் ரீதியானதும், பாலியல் ரீதியிலானதும் மற்றும் உளவியல் ரீதியிலானதுமான வன்முறை.

வன்முறையின் பரந்த வரைவிலக்கணமொன்றைப் பிரகடனம் வழங்குகின்றது.

பாரம்பரியத்திலான அல்லது சமயத்திலான கரிசனைகளின் காரணங்களின் மீது வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான தமது கடப்பாடுகளை அரசாங்கங்கள் தவிர்க்க முடியாது.

விரிவான தடுத்து வைத்தலிலான அணுகுமுறைகளை விருத்தி செய்வதற்கும், தேசிய செயல் திட்டமொன்றைத் ஸ்தாபிப்பதற்குமான கடமை, மற்றும் ஒத்துழைப்பின் சர்வதேச வலைப்பின்னலொன்றைத் ஸ்தாபிப்பதற்கான கடமை ஆகியன உட்பட, பரந்த வீச்செல்லையிலான பொறுப்புக்களை அரசாங்கங்கள் கொண்டுள்ளன.

பொது மற்றும் தனிப்பட்ட சமுதாயப் படிநிலையில் வன்முறையை அடக்கி அரசாங்க மற்றும் அரசாங்கம் சாராத செயற்பாட்டாளர்களின் நடத்தைக்கு அரசாங்கம் பொறுப்பாகும்.

**பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் அல்லது வன்முறையின் பிரதான வடிவங்கள்**

வழமையாக பின்வருமாறு வன்முறை வகைப்படுத்தப் படுகின்றது:

உடல் ரீதியான, உணர்வு பூர்வமான, உளவியல் ரீதியான பாலியல் ரீதியான, வாய்மொழியிலான, பொருளாதார ரீதியான (கவர்ந்து கொள்ளல்)

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான வன்முறை (இன்டர்நெற், கையடக்கத் தொலைபேசிகள் போன்றன)

பெண்களும், பெண்பிள்ளைகளும் வன்முறையின் பல் எண்ணிக்கையிலான வடிவங்களை அனுபவிக்கக்கூடும். உதாரணமாக, வீட்டு வன்முறையைக் கொண்ட சம்பவமொன்றில், உடல் ரீதியான, பாலியல் ரீதியிலான, உளவியல் ரீதியிலான மற்றும் பொருளாதார ரீதியான வன்முறையை பெண் ஒருவர் உருமாதிரியாக அனுபவிப்பார். எனினும், உணர்வு பூர்வமான உளவியல் ரீதியிலான வன்முறையை மட்டும் அல்லது வன்முறையின் ஒரு வடிவமைப்பினை மட்டும் பெண் ஒருவர் அனுபவித்தால், அது இன்னுமே பெண்களுக்கு எதிரான வன்முறை என்பதுடன், உதாசீனம் செய்யப்படலாகாது.

**இலங்கையில் பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிராக வன்முறையின் மிகவும் பொதுவான வகைகள்:**

* வீட்டு வன்முறை
* பாலியல் தொந்தரவு
* பாலியல் வல்லுறவு
* முறை தவறிய உடலுறவு
* பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்
* ஆட்கடத்தல்
* வன்முறை தொடர்பிலான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்.

**குற்றமிழைப்பவர்களுக்கு மறுத்துரைத்தல், ஓரளவிலான விலக்கீட்டுரிமை மற்றும் முழு அளவிலான உதாசீனம் ஆகியன நீண்ட காலமொன்றுக்கு பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் பிரச்சனையுடன் இணைந்துள்ளன. எனினும், பெண்களுக்கு எதிரான வன்முறை பெண்களின் மனித உரிமைகளின் வன்முறையொன்றாகும். இது அச்சமூட்டுகின்ற பின்விளைவுகளுடன் ஒரு பொது சுகாதாரப் பிரச்சனை என்பதுடன், அக்கறையுடன் எடுக்கப்படுவது அவசியமானதுமாகும். இது பெண்கள் மீது மட்டுமன்றி முழு சமூகத்தினதும் மீது தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது. பெண்களுக்கு அதிகாரமளித்தல், மனப்பாங்குகளை மாற்றுதல் அத்துடன் திட்டமான மாற்றத்தைக் கொண்டுவருதல் என இப் பிரச்சனைகளைக் கவனத்திற்கு எடுப்பதற்கான முக்கியமான அவசியமொன்றாக தகவல் விளங்குகின்றது.**



லக்ஷ்மன் சேனநாயக்க

# தன்வினை

முருகேசுமாஸ்ரரின் மனைவி வேணி மாலைதேனீரை கையில் தூக்கிக் கொண்டு இஞ்சையப்பா உந்தப் பிள்ளையளை எனிமேல் நீங்க தண்டிக்காதைங்கோ. சும்மா போய் படிப்பிச்சிட்டு வாங்கோ. இஞ்சை என்னால வாறவைக்கு பதில் சொல்லேலாது. அந்த விதானையார் இப்பதான் வந்திட்டுப் போறார். தன்ரபொடியனுக்கு ஏன் அடிச்சதாம். அவன்ர பிழையை தான் தண்டிப்பனாம். உங்களைபடிப்பிக்கிற அலுவலை மட்டும்பார்க்கட்டுமாம் அவனை அணைச்சுப்படிப்பிக்கட்டாம்.

உங்களுக்கென்ன யார் எப்படிபோனா என்ன சும்மா படிப்பிச்சிட்டு வாங்க என்று ஐயர் மந்திரம் கூறியது போல கூறிக்கொண்டு கதவுகளைத் திறந்து கணவனின் அறைக்குப்போகிறாள் வேணி. அங்கே நாளைய கற்பித்தலுக்கான பாடமுன்னாயத்தை செய்து கொண்டிருந்த முருகேசு மாஸ்ரர் மனைவிகூறியதை கேட்டும் கேட்காததுபோல தனது வேலையில் கவனத்தை செலுத்தினார். கணவனுக்கு தனது வழமையான அந்த அர்ச்சனை மந்திரங்களுடன் மனைவி உணவு பரிமாறுவது வழக்கம் வீணாக வாயைத்திறந்து ஏன் பிரச்சினையை வளர்ப்பான்.

இவளுக்கு எங்கட கஸ்டம் எங்க விளங்கப்போகுது. பள்ளிக்கூடத்தில வாத்திமாருக்கு அரசாங்கம் வேலை பழக்குது. முந்தி வாத்திமார் பிள்ளையளுக்கு படிப்பிச்சவை இப்ப பிள்ளையள் வாத்திமாருக்குப் படிப்பிக்குதுகள். பிள்ளையள்மட்டுமா வாறவை எல்லாரும் வாத்திமாரை கிள்ளுக்கீரையா பார்த்து வாத்திமாருக்கு தாங்களும் படிப்பிக்க நினைக்கினம். ஒப்படை ஒப்படை எண்டு தங்கள் வேலையளுக்களை பிள்ளைகளிடம் ஒப்படைக்கும் வாத்திமாரும் படிப்பிக்கிற நேரத்தில பிள்ளையளிட்டை குழு வேலையை கொடுத்திட்டு நாளைய பாட முன்னாயத்தை எழுதுவோரும் பொடியளை கலந்துரையாடல் என்றபெயரில் கண்டபடி கதைக்க. கலந்துரையாடுங்கோ எண்டிட்டு படிப்பிக்காம கணிப்பீட்டு முன்னாயத்தம் செய்வோரும் சிறந்தநல்ல ஆசிரியர். ஆனால் எவன் ஒருவன் கஸ்ரப்பட்டு புத்திமதி கூறிபடிப்பிக்கிறானோ அவன் மொக்கு வாத்தி அதுவும் வீட்டில வேலவெட்டியில்லாத பொண்டாட்டியோடு கொழுவல் உள்ள மோட்டுவாத்தி. இப்பத்தே கல்வி முறைப்படி பைவ் ஈ படி படிப்பிக்க நாலேநாலு விடயத்தை விளங்கப்படுத்தமுன் நாற்பதுநிமிடம் போகுமிடம்தெரியாம போயிடும். ஓஎல் எழுதிற பிள்ளைக்கு தேவையான விடயத்தை விளங்கப்படுத்தாம படிப் பிச்சால் அவர் திறமைசாலி. விளங்கப் படுத்தி நாலுகேள்விகேட்டு எக்ஸ்ரா கிளாஸ்போட்டு படிப்பிச்சா அதுபிழை.

இப்படி பள்ளிவாழ்க்கை ஒருபுறம் சீரழிய மறுபுறம் அரசும் விதானையாரைப்போல பெற்றோரும் மாணவ சமூகத்தை சீரழிக்கிறார்கள். தான்பட்ட துன்பத்தை பிள்ளை படக்கூடாது எனக்கூறும் பெற்றோரும் பிள்ளை தப்பான முடிவெடுத்து அழிஞ்சு போனாலும் பரவாயில்ல வளர்ந்து வரேக்க உலகத்தை அவன் படிப்பான். இப்ப என்னசெய் வது நாளைக்கு என்ர பிள்ளை தப்பான முடிவெடுத்து செத்துகித்து போயிட்டா. என்ன செய்வது எனப்பயப்படும் பெற்றோரும் மாணவன் கெடுவதைப் பற்றி கவலைப்படாது கண்மூடித்தனமாய் இருக்கிறார்கள். நாங்கள் வளரும் காலத்தில் இப்படி நடக்கவில்லையா பெற்றோர் வெருட்ட பிள்ளை இயக்கத்துக்கு ஓடலயா. அல்லது தற்கொல தான் செய்யலயா. பிள்ளை தப்பு விடும்போது கண்டித்துப்பேசி திருத்த வேண்டியது ஒவ்வொரு பெற்றோரதும் கடமை. அதைவிட ஒவ்வொரு ஆசிரியரது கடமையும் அதுதான். ஆசிரியன் என்ற சொல்லின் அர்த்தமே ஆசு என்பது குற்றம். இரியன் என்பது நீக்குபவன். இதெல்லாம் இவளுக்கு எங்க விளங்கப்போகுது என மனதுக்குள் எண்ணியபடி தன் வேலையை தொடர்ந்தார்.

அதற்குள் முருகேசுமாஸ்ரரின் மனைவி தன்தம்பி வந்தததும் கொத்தான் பழையபடி ஊர்வம்பை வீட்டை கொண்டுவர வெளிக்கிட்டிட்டார் இப்ப கொஞ்சநேரத்துக்கு முன்பு விதானையார் வந்திட்டுபோறார் உந்த மனுசனுக்கு எத்தினை நாள் சொல்லியாச்சு விதானை கிட்ட பல அலுவலாய் அடிக்கடி அந்தாளின் ர முகத் தில முழிக்கிறது. வீண் வம்பு வேண்டாம் என்றால் இந்த மனுசன் கேட்குதில்லை எந்தப் புள்ள படிச்சா என்ன படிக்காட்டி என்ன? இப்பத்தே புள்ளையள் வாத்திமாரை மதிக்கிறதே குறைவு. அதுகளை கண்டிச்சு படிப்பிச்சா கடைசியில படிச்சு முடிச்சா பிறகு என்ன தங்கமே போடப் போகுதுகள் ஒருபுள்ளையும் திரும்பி பாக்காது. இவ்வளவு ஏன் அந்த சுந்தரம் மாஸ்ரரின்ர செத்தவீட்டுக்கு எத்தனை பிள்ளையள் வந்தது. அந் தாள் படிப்பிச்சு வங்கியிலை நிறைய வேலை செய்யுதுகள் இஞ்சினியராய் எத்தனை பிள்ளையள் இருக்குது. ஆனாலும் ஒருபுள்ளைகூட வரல அதுகளுக்கு வேலைமுக்கியத்துவ மாய் போச்சுது. இப்படிப்பட்ட சமு தாயத்திலபோய் ஏதோ சமுதாயத்தை திருத்திறாராம் பேசாமபோய் படிப்பிச் சிட்டு வாறதுக்கு. தண்டனையை கொடுத்து வீண்வம்பை விலைக்கு வாங்கி வருகுது எனமனைவி முழங்கும் சத்தம் கேட்டும் முருகேசுவாத்தியார் ஒன்றும் பறையாமல் பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டார் .

அதற்குகாரணம் இப்பகதைக்கப் போய் வீண்கொழுவல் ஆகிவிடும் என நினைத்துவிட்டார் போலும் அல்லது பள்ளிக்கூடத்தில நடக்கிற கூத்துகளை நினைத்துவிட்டார் போலும் ஏன் எனில் சில ரீச்சேஸ் தங்களை மதிக்காத நேரத்தில ஆவேசப்படுவினம் திட்டுவினம் தண்டிப்பினம் ஆனா யாரேன் கொஞ்சம் கடுமையா நடந்திட்டா பள்ளிக்கூடம் முழுதும் கதை பரப்பி அந்த வாத் தியாரையே கெட்ட வாத்தியாராய் பறைசாற் றிவிடுவார்கள் இதுஒவ்வொரு பாடசாலைகளிலும் உள்ள வழமை. இவற்றுக்கு பழக்கப்பட்ட முருகேசர் மனைவியின் கருத்தை செவிசாய்க்கவில்லை. இதைவிட கொடுமை எக்ஸ்ரா கிளாசுக்கு வந்து தன்னும் பொடியள் சும்மா இருக்குதுகளே பெட்டையளுக்கு வீண்கதை சொல்ல அவளவை அதை வாத்திக்கு சொல்ல வாத்திபேசினா கெட்ட வாத்தி பெற்றோரும் பிள்ளைசொல்லுறதை கேட்டிட்டு அந்த வாத்திக்கு படிப்பிக்கத் தெரியாது என்பார்கள் ஆனா வாத்தியாரும் சேந்துகூத்தடிச்சா அவ்ர நல்ல வாத்தியார் என்பார்கள் இது இவளுக்குகெங்க தெரியப்போகுது என முருகேசுவாத்தியார் மனதுக்குள் எண்ணிக்கொண்டிருக்கும் போது முருகேசு வாத்தியார தெய்வம் காத்ததுபோல, அக்கா அத்தானை நீ குறைசொல்லாதை அது எனக்கு பிடிக்காது. என்னடா இண்டைக்கு என்ரபக்கம் காத்து வீசுது. என்னால பொடிக்கு ஏதேன் காரியம் ஆகணுமோ எனமுருகேசர் எண்ணிக்கொண்டிருக்கையில் அத்தான் சரிபிழை அறிஞ்சு தான் கண்டிப்பார். ஒருகாலத்தில அத்தான் கண்டிக்கிறது பிழை என்றுதான் நினைச்சன். ஆனா அத்தான் செய்யிறது சரி என்பதை இப்ப உணர்றன் அத்தான் நினைப்பது சொல்றது எல்லாமே சரி எனமுருகேசரின் மச்சான் கூற பதிலுக்கு டேய் நீ சும்மா கொத்தான உசுப்பேத்தி விடாத. அப்படி என்ன கொத்தான் சொன்னது உனக்கு நடந்திட்டுது என மனதில் ஏற்பட்ட கடுப்பு முகத்திலும் வார்த்தையிலும் தொனிக்க அடிவாங்கிய நல்ல பாம்பு போல முருகேசரி மனைவி சீறினாள்.

அக்கா இப்ப இரண்டு வருசத்துக்கு முன்னம் விதானையார மாதிரி உவர் ரமேஸ் டெக்டர் அத்தானிட்டை அடிக்கடி வந்திட்டு கடைசியில பொலிசில கேஸ் போட்டவர் தெரியுமே? என முருகேசரின் மச்சான் கேட்க. ஓ ஞாபகம் இருக்கு அதுக்கு இப்ப என்ன? என வேணி வினாவ. டொக்ரின்ரை பிள்ளை இண்டைக்கு என்ன நிலமைஎண்டு தெரியுமோ உலகம் அறிஞ்ச பிரபலமான டொக்ரர். அதுவும் உளநலவைத்திய நிபுணர். ஊரில எத்தனை பிள்ளையளுக்கு அட்வைஸ்பண்ணி திருத்தினவர் சிறுவர் நன்னடத்தை விசாரணை கமிட்டிக்கு இவர்சேட்டிபிக்கற் பண்ணினா போதும் துஸ்பிரயோகப்படுத்தியவர் கம்பி எண்ணுவார் அப்படி செல்வாக்குள்ளவற்றை பொடியன்ர நிலை தெரியுமோ.. என மைத்துனன் கேட்கும் கேள்வி கேட்டு மனைவிக்கு பயந்து பொட்டிப் பாம்பாய் அடங்கிக்கிடந்த முருகேசர் அந்தப் பொடியனுக்கு என்ன நடந்தது? எனக் கேட்டபடி வெளியே வந்தார்

அதையேன் அத்தான் பேசுவான் நீங்கள் அந்தப் பொடியனை சின்ன வயசில் இருந்து எவ்வளவு கவனிப்பு கவனிச்சு படிப்பிச்சனியள் ஆனா அண்டைக்கு பெரிய பொடியளோட சேரந்து அவனடிச்ச கூத்துக்கு நீங்கள் அடிச்சுப் போட்டியள் எண்டதுக் காண்டி பொலிஸ்ரேசன் வரை உங்களை டொக்டர் இழுத்தார். ஆனா அப்பவே நீங்க அவருக்கு சொன்னனீங்க நான் பொலிஸ்ரேசன் வந் ததை பற்றிகவலைப்படல ஆனாஅவன் தப்பான வழிக்குபோகப் போறானே எண்டு கவலைப்படுறன். அவனை தப்பான வழிக்கு போகாம பாக்க சொன்னீங்க அதுக்கு அந்த டொக்ரர் என்ர அலுவல் எனக்குத் தெரியும் உம்மட வேலைய காப்பாத்திற வழியைப் பாரும் என்னமாதிரி எல்லாரும் சமாதானமாய் போகாங்கள். ஏதோ பொலிஸ்காரன் சொன்னதுக் காண்டி கேசை வாபஸ் பெற்றிருக்கன் என்று திமிராய் பேசியவர் இண்டைக்கு அதே பொலிஸ்டேசனுக்கு நாயாய் அலையிறாராம்.

அப்படி சொல்லாத தம்பி பிள்ளையில இருந்த பாசத்தில அந்தமனுசன் அண்டைக்கு அப்படி செய்திச்சுது ஆனா இப்படி வரும் எண்டு அவருக்குத்தெரியாது தானே என முருகேசர் கூறிமுடிப்பதற்குள் மனைவி குறுக்கிட்டு தம்பி முதல்ல அந்தப் பொடிக்கு என்னநடந்தது எண்டு சொல்லு? ஏன் டொக்ரர் கோடேற இருக்றார்? ஏன் டொக்ரர் பொலிஸ் ரேசனுக்கு அலைகிறார் எனகேள்விகளை அடுக்கிச்சென்றாள்

அதுபெரிய கதையக்கா டொக்ரற்ர பொடியன் படிச்சு முடிச்சிட்டு ரோட்டில திரிஞ்சவன். இப்பகொஞ்ச நாளா களவு எடுக்கிறானாம்.

இப்பமுகத்தை பொத்தி அடிச்சுப் போட்டு தாலியளை திருடர் அறுக்கிறாங்கள் எண்டு செய்தியள் வந்ததெல்லோ அதில இவருக்கும் தொடர்பிருக்காம் என மைத்துனன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே தம்பி அந்தப்பிள்ளை அப்பிடிப்பட்ட பிள்ளையில்ல சின்ன வயசில் இருந்து என்னட்டை படிச்ச புள்ளை என்றதால சொல்லுறன் அது நேர்மையான பிள்ளை சண்டை அதுகள் பிடிக்கும் மற்றப்படி களவை நான் நம்பமாட்டன். மாணவன்மீது தான் வைத்திருப்பது குருட்டு நம்பிக்கை என்பதை உணராமல்தன் பகைமையை மறந்து மாணவனுக்காக வாதாடிய பெருந்தன்மையை மனதில் எண்ணியபடி நான் சொல்லவில்லை அத்தான் ஊரில கதைக்கினம் என முருகேசரின் மைத்துனன்கதையை தொடர்ந்தான்

இப்ப கொஞ்சநாளைக்கு முன்னம் டொக்ரின்ர மனிசியின்ர தாலிக்கொடியை யாரோ மோட்டச்சைக்கிள்ள வந்தவன் அறுத்துக்கொண்டு ஓடி பேந்து யாரோ மோட்டச்சைக்கிள் நம்பர் தான் கண்டது எண்டெல்லோ அறிஞ்சனாங்கள். டொக்ரருக்கு ஊரில உள்ள செல்வாக்கால யாரோமனுசன் அந்த மோட்டார் சைக்கிள் நம்பரை கண்டது எண்டு சொல்லி அந்த நம்பரைக் கொண்டே பொலிசில குடுக்க அவங்கள் விசாரணையை ஆரம்பிக்க. அந்த நம்பர் குடுத்தாப்பிறகுதானே நிறையப்பிரச்சினைகள் வெளிவந்திருக்குது. அந்த நம்பருக்குரிய மோட்டச்சைக்கிள் காறனை பிடிச்சு விசாரிக்க சம்பவதினத்தன்று தன்ர மச்சான் பொடியன் வேண்டிக்கொண்டு போனதாய் சொல்லியிருக்கான் அவனைப்பிடிச்சு விசாரிக்க அவன் இன்னொரு பொடியனிட்ட சைக்கிளை கொடுக்க அவனும் அவன்ர கூட்டாளியும் நகையை கொள்ளை அடிச்சுக்கொண்டு போயிருக்கினம். அவையைபொலிஸ பிடிச்சு விசாரிச்சா நிறைய களவுகள் அம்பலமாகி இருக்கு. அவங்கள் தாங்கள் அறுத்த நகை மட்டுமல்ல மற்றவை அறுத்த நகைகள் விற்ற விபரங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறாங்க அதுமட்டுமல்லாமல் சம்பவதினத்தன்று மம்மல் இருட்டு என்றதால இலக்கத்தகட்டை மாத்தேலையாம் மற்றும்படி இலக்கதகடுமாத்திதானாம் வெளிக்கிடுறது.

இதில என்ன பகிடி என்றா அந்த தாலி அறுக்கிறதுக்கு திட்டம் போட்டு கொடுத்ததே டொக்ரற்றை மகன்தானாம். வழமையில் களவுக்கு டொக்ரரின் மகன்தானாம் போறது அந்த கூட்டத்துக்கு தலைவனே இந்தப் பொடியன்தானாம்.




(தொடரும் .....)




# பட்டியல் வளர்கிறது

தற்பொழுது கிரிக்கெட் உலகில், கிரிக்கெட் நிர்வாகிகள் பந்துவீச்சு முறைமை பற்றி மிக மிக அக்கறையாக இருப்பது போலத் தெரிகிறது.

அனேகமாக, அடிக்கடி பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சு முறைமை நியமிக்கும் புறம்பானது தவறானது.

தவறை நீக்கும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று செய்திகள் வரும். கடந்த மாதத்தில் இலங்கை அணியினர் வளர்ந்து வரும் அபுல் பந்துவீச்சாளர் தரிந்து கௌஷால் இத்தகைய குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இப்போது சில பல சோதனைகளின் பின் சில வகைப்ந்து வீச்சு முறைமையில் மட்டும் பந்துவீச அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது இப்படி இருக்க இலங்கை மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் மேற்கிந்திய வீரர் மார்லன் சாமுவெக்ஸ் சந்தேகத்துக்கு இடமான வகையில் பந்து வீசுகிறார் என்று .. மத்தியஸ்தர்கள் அவதானித்துள்ளார்கள்.



இந்த விடயம் பின்னர் மேற்கிந்திய அணி சார்ந்த உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் நாட்களில் இந்த 34 வயது வீரரின் பந்து வீச்சு முறை மைகள் ஐ.சி.சியால் நுட்பமாக ஆராயப்படும். உண்மையில் மார்லன் சாமுவெல்சின் பந்து வீச்சு முறைமை நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கில் இல்லையென்று சுட்டப்படுவது இது முந்நூறு முறையாகும். முதன் முதலாக தென்ஆபிரிக்காவுக்கு எதிரான போட்டியொன்றின் போது இவர் சுட்டிக்காட்டப்பட்டார். பின்னர் அணியில் இருந்தும் பந்து வீச முடியாத நிலையில் இருந்தார். பின்பு பல நடைமுறைகளின் பின் 2011இல் மீண்டும் பந்து வீச அனுமதிக்கப்பட்டார். தற்போது மீண்டும் மார்லனுக்குச் சோதனை. இந்தச் சோதனை அவருக்கு மட்டுமல்ல, பலமிழந்து போயுள்ள மேற்கிந்திய அணிக்கும்தான்.

# மங்கையர் திலகம்

இங்கிலாந்து சர்வதேச கிரிக்கெட் மகளிர் அணியின் விக்கெட் காப்பாளர் சாராடெய்லர். இவர் தற்பொழுது எடுத்திருக்கும் முடிவு எல்லாக் கிரிக்கெட் ரசிகர்களையும் இவரைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. அதாவது அவுஸ்ரேலிய பிராந்தியக் கிரிக்கெட் போட்டிகளில், ஆண்களுக்கு இணையாக இவரும் இணைந்து கொண்டுள்ளார். தென் அவுஸ்ரேலிய பிறிமியர் கிரிக்கெட் போட்டிகளில் நொதர்ன் டிஸ்கிக்ட் அணிக்காக போர்ட் அடிலெய்ட் அணிக்கு எதிராக விக்கெட் கீப்பராகக் களம் இறங்கவுள்ளார். இருபத்தியாறு வயதான சாரா

எனது கிரிக்கெட் விளையாட்டே ஆண் பிள்ளைகளுடன் பிறைட்டன் கல்லூரியில் தொடங்கியது. அண்மையில் இங்கிலாந்து பிரிமியர் லீக் போட்டிகளில் ஆண்களுடன் விளையாடியுள்ளேன். எனவே அவுஸ்ரேலியாவில் ஆண்கள் அணியில் இணைந்து விளையாடுவது ஒன்றும் எனக்குப் புதிதல்ல. மேலும் ஆண்கள் அணியில் இணைந்து விளையாடும் முதல் பெண் நான்தானா என்று தெரியவில்லை. ஆனால் இறுதிப் பெண்ணாக மட்டும் நான் இருக்க மாட்டேன் என்பது மட்டும் நிச்சயம் என்று கூறியுள்ளார். எதிர்வரும் அவுஸ்ரேலிய மகளிர் பிக்பேஷ் இருபதுக்கு இருபது போட்டிகளில் விளையாட அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் ஆகியுள்ள இவர் தற்போது மகளிர்50 ஓவர் ஆட்டங்களிலும் விளையாடிக் கொண்டிருக்கிறார்.




இங்கிலாந்துக்காக எட்டு டெஸ்ட் போட்டிகள், 98 ஒருநாள் போட்டிகள் 73 இருபதுக்கு இருபது போட்டிகள் என்று விளையாடியவர்.

# மனிதன் மாறுவதில்லை

மேற்கிந்திய இலங்கை அணிக்கு இடையிலான டெஸ்ட் தொடருக்கு ஒரு கிரிக்கெட் சகாப்தம் விருந்தினராக இலங்கை வந்திருந்தார். அவர் வேறு யாருமெல்ல. மேற்கிந்திய தீவுகளின் மிகப் பெரிய கிரிக்கெட் ஜாம்பவான் சேர்.காபீல்ட் சோபர்ஸ்தான். இதில் விஷேடம் என்னவென்றால் முன்னாள் இலங்கை அணித்தலைவரும், தற்போதைய அமைச்சருமான அர்ஜூன ரணதுங்க, இந்த ஜாம்பவானை அழைத்துக் கௌரவம் செய்துள்ளமைதான்.

1980 களில் சோபர்ஸ் இலங்கை அணியின் பயிற்றுனராகவும் இருந்துள்ளார். அந்தக் காலகட்டத்தில் அர்ஜூனஅணியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். முதல் தெரிவான 35 பேரில் கூட அர்ஜூனஇல்லை. அப்படியான சந்தர்ப்பத்தில் சோபர்ஸ் அர்ஜூனவின் திறமைகளை இனம் கண்டு அவரை அணிக்குள் எடுங்கள் என்று கிரிக்கெட் தெரிவாளர்களை வற்புறுத்தியுள்ளார். அதன்பின் அர்ஜூனஎந்தளவு உயரத்திற்குச் சென்று உலகப் கோப்பையையும் இலங்கைக்கு வென்று கொடுத்தார் என்பதைச் சொல்லத் தேவையில்லை. சோபர்சின் அந்தக் கருணையை மறக்காத அர்ஜூன இப்போது அந்த விடயங்களை நினைவு கூர்ந்துள்ளதுடன் தன் அன்பை வெளிப்படுத்த நினைவுச் சின்னம் கொடுத்தும் மகிழ்ந்திருக்கிறார். சோபர்ஸ் தனது இலங்கை அனுபவங்களை மீள நினைக்கும் போது அர்ஜூன ரணதுங்க, அரவிந்த டீ சில்வா, அனந்த டீ மெல் பற்றியும் அவர்களின் கிரிக்கெட் அர்ப்பணிப்புப் பற்றியும் நன்கு அறிந்திருந்ததாகக் கூறியுள்ளார். இரண்டு ஜாம்பவான்களின் சந்திப்பும், அர்ஜூனவின் சோபர்ஸ் மீதான நேசமும் உணர்வுபூர்வமானவை.



# நல்லதையே வாசிப்போம்

இந்திய, தென்ஆபிரிக்க அணிகளுக் கிடையிலான ஐந்தாவது ஒருநாள் போட்டி, இந்திய அணிக்குக் கசப்பான விடயம்தான். இருந்தாலும் இதற்காக டோனியையும் இந்திய அணியையும் கொச்சைப் படுத்துவதை விட்டுவிட்டு, தென்ஆபிரிக்க அணியின் சிறப்புக்களைப் பார்க்கலாமே. **இந்த ஆட்டத்தின் சில சாதனைகள் :–**

* அரை நூற்றாண்டு ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே இனிங்சில் 3 சதங்கள் அடித்தது இது 2ஆவது முறை. (டிகொக் – ஏபிடி – டுபிளஸிஸ்)

* இந்திய மண்ணில் 400 + தென்ஆபிரிக்க 6 முறை (அதிகூடுதல்) யும், இந்தியா 5 முறையும் குவித்துள்ளன.

* இந்திய மைதானங்களில் இந்த 438 ஓட்டங்களே அதிகூடியது. (இனியார் இதனை தகர்ப்பார்கள்)

* இந்த சதம் டிவில்லியர்சின் 23 சதம் விராட்கோஹ்லியுடன் சமன் செய்கிறார்.

* இதுவரை ஒருநாள் அதிகூடிய எண்ணிக்கை 2506 இல் நெதர்லாந்துக்கு எதிராக இலங்கை அடிந்த 443. ஆனால் இப்போது தென்ஆபிரிக்கா பெற்றது 438.

* குட்டிப் பெடியன் குயின்ரன் டிகொக் இந்தியாவுக்கு எதிரான 9 இனிங்சுகளில் 5 சதம் அடித்துள்ளார்.

* ஒரு ஆண்டில் அதிக சிக்ஸர்கள் அடித்தவர் வில்லியர்ஸ் ஆகிறார். மொத்தம் 58 சிக்சர்கள் (2002இல் அப்ரிடி 48 சிக்ஸர்கள்)



ஜோசப் கிருஷ்ணா

# பறிபோகிறது மன்னார்...

புதிதாகக் காடு அழிக்கப்பட்ட பகுதியும் வில்பத்துக் காட்டுக்குள் அடங்கவில்லை. இவ்வாறான நிலையிலேயே வில்பத்து காட்டுடன் முஸ்லிம் மக்களின் பிரதேசங்களும் மாதுறு ஓயாவை சுற்றிய 5000 ஏக்கரை உள்ளடக்கி இணைக்கப்பட்டுள்ளது.. இப் பகுதியிலும் பெருமளவில் காடுகள் துப்பரவாக்கப்படுகின்றன. இது முஸ்லிம் மக்களுக்கானதல்ல. இது சிங்கள மக்களின் குடியேற்றத்திற்காக துப்பரவாக்கப்படுகிறது. இந்தக் குடியேற்றத்தை மேற்கொள்ளவே முஸ்லிம்களின் மீள்குடி யேற்றம் எதிர்க்கப்பட்டது.

இதுபோக வில்பத்துக்காட்டுப் பகுதிக்குள் என்ன நடைபெறுகின்றது என்பது எமக்குத் தெரியாது. அது அநுராதபுரத்தின் எல்லையாகும். அதற்கூடாக குஞ்சுக்குளம் பிரதேசப் பகுதிக்குள்ளும் பல வீதிகள் புதிதாகப் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனது கணிப்பின்படி வில்பத்துக் காட்டுடன் இணைத்து சிங்கள பிரதேச செயலர் பிரிவொன்றை உருவாக்க ஏற்பாடு மேற்கொள்ளப்டுவதாகவே தெரியவருகிறது. ஆனால் தற்பொழுது ஆட்சி மாற்றத்துடன் இந்தப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இந்த சிங்கள கிராமத்தை உருவாக்குவதற்காகவே முள்ளிக்குளம் மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட் டுள்ளனர். அதே போன்று முஸ்லிம் மக்களும் மீள்குடியமர்வது இதற்கு பெரும் இடைஞ்சலாகவே உள்ளது.

கொண்டச்சியில் பல வீடுகள் சிங்கள மக்களுக்காகவே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த இடம் தம்பபன்னி என்று அழைக்கப்படுகின்றது. இப்பகுதியில் விஜயதொகுதி, குவேனி தொகுதி, பராக்கிரமதொகுதி, அபய தொகுதி, தம்பபன்னி தொகுதி, விக்கிரம தொகுதி,மகாசேன தொகுதி என 7 குடியிருப்புத் தொகுதிகள், சிங்களப் பாடசாலை, விகாரை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் என்பவற்றுடனான குடியிருப்பு வளர்ச்சி பெற்றது. எனினும் 1983இல் ஏற்பட்ட கலவரத்தால் இவை இல்லாதொழிந்தன. ஆனால் தற்போது என்ன நிலையில் இவை உள்ளன என்று எமக்குத் தெரியாது. கொண்டச்சியில் இருந்து காட்டு வழியாகச் செல்லும் வீதி ஒன்று அநுராதபுரத்தைச் சென்றடையும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே தெற்கு அநுராதபுர காட்டுப் பகுதியை சேர்த்து முசலியின் தென்பகுதியில் சிங்கள பிரதேச செயலர் பிரிவை உருவாக்குவதே அரசின் நோக்கமாகும். மறிச்சுக்கட்டி, பாலைக்குழி, எழுவன்குளம், கொண்டச்சி அனைத்துப் பகுதிகளும் இந்த பிரதேச பிரிவுக்குள் வரும்.

தற்போது புதிய அரசு பதவி ஏற்ற நிலையில் என்ன நிலைப்பாடு என்பது தெரியவில்லை. ஏற்கனவே திட்டத்தின்படி சிங்கள பிரதேச செயலர் பிரிவை உருவாக்குவதே அரசின் நோக்கமாகும். மடு றோட்டில் சிங்களக் குடியேற்றம் ஏற்கனவே உள்ளது. இதற்காக பெருமளவிலான காணி பிடிக்கப்பட்டுள்ளது. அதனையும் முசலிப் பகுதியையும், தந்திரிமலை, நொச்சியாகமம் (இப்பகுதிகளில் வீதிகள் ஏற்கனவே புதிதாகப் போடப்பட்டுள்ளன) பகுதியையும் இணைத்து சிங்களமயப்படுத்துவதே நோக்கமாகும்.

வடமாகாணத்தில் வவுனியாவில் சிங்கள பிரதேச பிரிவு உள்ளது. அதேபோன்று முல்லைத்தீவில் வெலிஓயா (மணலாறு) என்ற பிரதேச செயலர் பிரிவு உள்ளது. மன்னார் மாவட்டத்தில் மட்டுமே சிங்கள பிரதேச செயலர் பிரிவு இல்லை. இங்கும் ஒரு பிரதேச செயலர் பிரிவை உருவாக்கினால் வடக்கின் ஒரு பகுதி சிங்கள மயமாகிவிடும்.

மடு வீதியில் பறையனாலங்குளம் பகுதி வரை சிறு சிறு கொட்டில்கள் போடப்பட்டுள்ளன. மடு வீதிச் சந்தியில் சிங்கள மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. கடைகள் அனைத்தும் சிங்கள மக்களுக்கானதே. பறையனாலங்குளம் பகுதியிலுள்ள விடுதி ஒன்றும் சிங்களவருக்குரியதே. மறுபக்கத்தில் புதிதாகக் கட்டப்படும் ஹோட்டலும் சிங்களவருக்குரியதே. அதனுடன் சேர்ந்தே முசலி பகுதிகளையும் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முசலி, வேப்பங்குளம், சிலாவத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள முஸ்லிம்களைக் கலைத்தால் சிங்கள பிரதேச செயலர் பிரிவை உருவாக்குவது சுலபமாகிவிடும். இதன் ஒரு அங்கமாகவே மீள்குடியேற வந்த முஸ்லிம் மக்களுடன் முரண்டு பிடித்தது. ஆனால் வில்பத்துக் காட்டிற்கும் முஸ்லிம் மக்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

# பிரபாகரன் வரலாறு ...

குடிசை போட்டிருக்கின்றீர்கள்?'' என்று பஸ்தியான் பிள்ளை கேட்டதற்கு, அவர்கள் "ஏனென்றால் நல்ல குடிநீர் உள்ள கிணறு ஒன்று இங்கு உண்டு. அதனால் தான் அந்தக் கிணற்றுக்குப் பக்கத்தில் குடிசை போட்டுக் கொண்டிருக்கின்றோம்,'' என்று பதிலளித்தார்கள். அதையடுத்து "நாங்கள் முருங்கன் பொலிசைச் சேர்ந்தவர்கள். கள்ளமரம் தறிப்பதாக ஒரு முறைப்பாடு கிடைத்துள்ளது. அதை விசாரிக்கவே வந்தோம்,'' என்று பஸ்தியான் கூறினார்.

"நாங்கள் உங்கள் குடிசையை சோதனையிட வேண்டும். வாருங்கள்,'' என அந்த இருவரையும் அழைத்துச் சென்றார்கள். குடிசைக்கு வந்த பஸ்தியான் பிள்ளையையும், பொலிசார் கோஷ்டியையும் செல்லக்கிளி வரவேற்றார். செல்லக்கிளியைக் கண்ட உடனேயே பஸ்தியான் பிள்ளை அடையாளம் கண்டுகொண்டார். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளவில்லை.

அதையடுத்து எஸ்.எம்.ஜீ சுடுகலனை கையிலெடுத்துக் கொண்டு அக்குடிசையின் உள்ளும், புறமும் சுற்றிவந்து பஸ்தியான் பிள்ளை மேற்பார்வையிட்டார். குடிசையை பஸ்தியான் பிள்ளை சோதனையிட்ட பிற்பாடு "சரி, சரி எமக்கு நிறைய வேலை இருக்கு. நீங்கள் முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கு வந்து வாய் முறைப்பாடு கொடுத்து விட்டுத் திரும்பலாம். நாங்களே உங்களை திரும்பக் கொண்டுவந்து விடுவோம்,'' என்று கூறினார். பஸ்தியான் கூறியதை செல்லக்கிளியும் ஏற்றுக் கொண்டார்.

"இப்ப தான் நாங்கள் தண்ணீர் கொதிக்க வைத்துள்ளோம். தேநீர் குடித்து விட்டு எல்லோரும் செல்வோம்,'' எனச் செல்லக்கிளி கூறினார். அப்பொழுது அங்கிருந்த போராளி ஒருவர் சுடச்சுட தேநீர் கொண்டுவந்து பஸ்தியான் பிள்ளையிடம் நீட்டினார். பஸ்தியான் பிள்ளை எஸ்.எம்.ஜீ சுடுகலனை அருகில் வைத்துவிட்டு தேநீர் வாங்க கையை நீட்டினார்.


இந்தச் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்த செல்லக்கிளி, பாய்ந்து அந்த சுடுகலனை எடுத்து அதனால் பஸ்தியான் பிள்ளையின் தலையில் ஓங்கி அடித்தார். அதையடுத்து பஸ்தியான் பிள்ளையை சுட்டார். அந்த இடத்திலேயே பஸ்தியான்பிள்ளை சுருண்டு விழுந்து இறந்தார். அதையடுத்து பொலிஸ் பாலசிங்கத்தையும் சுட்டு வீழ்த்தினார்கள். மற்றப் போராளிகள் பேரம்பலத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அவரைக் கிணற்றுள் தூக்கிப்போட்டு துப்பாக்கியால் சுட்டார்கள். பொலிஸ் சாரதியான சிறிவாதனாவையும் சுட்டுக்கொன்றார்கள்.

அதையடுத்து மரத்துக்கு மேல் என்ன நடக்கிறது என பார்த்துக் கொண்டிருந்த நாகராசனும், உமாபதியும் கீழிறங்கி வந்தார்கள். அவர்கள் தங்கியிருந்த குடிசையை எரித்து சாம்பலாக்கினார்கள். அதையடுத்து பொலிஸ் கோஷ்டி வந்த வாகனத்திலேயே ஓடித்தப்பினர். பின்னர் அந்த வாகனம் கிளிநொச்சிக் காட்டில் எரிக்கப்பட்டு, கைவிடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது.

சில நாட்களின் பின் அப்பகுதிக்கு விறகு வெட்ட வந்த ஒருவர் காட்டினுள் துர்நாற்றம வீசுவதை உணர்ந்து, அப்பகுதியில் சென்று பார்த்தபோது இறந்த உடல்கள் இருப்பதைக் கண்டு பொலிசாருக்குத் தகவல் கொடுத்தார். பொலிசார் விரைந்து வந்து இறந்த உடல்களைக் கைப்பற்றினார்கள். கிணற்றிலிருந்து பேரம்பலத்தின் உடலை எடுத்தபோது தான் இறந்திருப்பவர்கள் எல்லோரும் பஸ்தியான் பிள்ளை தலைமையில் வந்த பொலிஸ் கோஷ்டி என்று அவர்கள் இனம்கண்டார்கள். பஸ்தியான் பிள்ளையின் கொலை அரச உயர் மட்டத்தில் அதிர்வலைகளை உருவாக்கிற்று.

சிறந்த துப்பறிவாளரான பஸ்தியான் பிள்ளையின் முடிவில் பயங்கரவாதத்தின் ஆரம்பம் உருவாகிற்று. பயங்கரவாதிகளை எதிர்த்து போராடிய பஸ்தியான்பிள்ளையின் நினைவுக்கு இந்த அரசாங்கம் இதுவரையில் எதுவுமே செய்யவில்லை. அவருடைய போராட்டமும், சேவையையும் விழலுக்கு இறைத்த நீராகி விட்டது.

இறந்த பொலிஸ் உத்தியோகத்தரின் முடிவில் முளைத்த பயங்கரவாதிகள் பற்றி அடுத்த இதழில் தொடர்வோம்...




No-05, NC Road, Trincomalee.
TP- 026 2222298, Fax- 0262221179.
www.jewellanka.8m.com



# பறிபோகிறது மன்னார்



2009 இல் போர் முடிவுக்கு வந்த கையோடு அவசர அவசரமாக வடக்கில் குறிப்பாக வன்னிப் பகுதிகளில் முடியுமானளவில் தமிழர் நிலங்களை பல்வேறு வழிகளில் ஆக்கிரமிக்கின்ற வேலைகளில் அரசு இறங்கியுள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது. பௌத்த விகாரைகள் கட்டுதல், அரச மரங்களை நாட்டுதல், நினைவுத் தூபிகளை நிறுவுதல், தென்பகுதி உல்லாசப் பயணிகளுக்கான இடைத்தங்கல் விடுதிகளை அமைத்தல், காட்டுப் பகுதிகளில் இரகசியமான முறைகளில் பெரும் படைத்தளங்களை அமைத்தல், அத்துடன் சிங்களக் குடியேற்றங்களை மீள ஆரம்பித்தல் என்ற வகையில் பெருந்தொகையான நிலங்களை படைகளின் உதவியுடனும் மதகுருமாரின் உதவியுடனும் அபகரிக்க முனைகின்றது அரசு. இந்த வகையிலேயே மன்னார் மாவட்டத்தின் வில்பத்தை அண்டிய முசலி பிரதேச செயலர் பிரிவை உள்ளடக்கிய மறிச்சுக்கட்டி, சிலாவத்துறை, பாலைக்குழி பகுதிகளை கபளிகரமாக சுவீகரித்து அப்பகுதியில் சிங்கள பிரதேச செயலர் பிரிவை அமைக்கும் முயற்சி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் தென் எல்லை யோரமாக அமைந்துள்ள சிலாவத்துறை, முசலி பிரதேச செயலர் பகுதிக்குரியதே. இதுவே முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் செய்யும் பகுதியாகும். மன்னாரிலுள்ள பிரதேச செயலர் பிரிவில் ஒன்றே முசலி ஆகும். இதில் வில்பத்துக் காட்டின் எல்லை என்பது முசலி பிரதேசப் பிரிவுக்குள் உள்ளடக்கவில்லை. அது அநுராதபுரம், புத்தளம் மாவட்டங்களின் எல்லைக்குள்ளே அமைந்துள்ளது.

எனவே வில்பத்துக் காட்டைத் தவிர்த்தே முசலி எல்லை உள்ளது. வில்பத்திற்கு மேற்குப் பக்கமாக உள்ள நிலப்பகுதியே அண்மைக்காலமாக பிரச்சனைக்குரிய பகுதியாகும். அந்தப் பிரதேசம் நீண்ட காலமாக முஸ்லிம் மக்கள் வாழ்ந்த இடமாகும். குறிப்பாக முள்ளிக்குளம். இது தமிழ்க் கிராமம். அந்தக் கிராமத்தில் இருந்த மக்கள் இடம்பெயர வைக்கப்பட்டு அருகிலுள்ள காயாக்குழி எனும் இடத்தில் (10 கிலோ மீற்றர் வடக்கில்) காணி வழங்கப்பட்டு வீடுகள் கொடுக்கப்பட்டு, அதில் வசிக்கின்றனர். மிகுதியானவர்கள் தமது கிராமத்தில் வசிக்க வேண்டுமென்ற உறுதியுடன் முள்ளிக்குளத்திற்கு அண்மைய காட்டுப் பகுதியில் எவ்வித வசதிகளுமின்றி வசித்து வருகின்றனர். (முள்ளிக்குளத்தில் கடற்படையினரின் வடமேற்கு கட்டளைத் தலைமையகம் அமைக்கப்பட்டுள்ளதனால் மக்களின் வீடுகள், காணிகள், கோவில்கள்,




பேராசிரியர் சூசை ஆனந்தன்
புவியியல் விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

- தொடர்ச்சி 02 இல்




இப் பத்திரிகை தினச்செய்தி நிறுவனத்தினால் சுன்னாகத்திலுள்ள அலுவலகத்தில் பதிக்கப்பெற்று யாழ்ப்பாணம் நாவலர் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு நவ.08,2015 அன்று வெளியிடப்பட்டது.